தாயுமானவர்

சொருணாம்பாள் நினைவுச் சொற்பொழிவுகள்

டாக்டர் ச. வே. சுப்பிரமணியன்
(உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் சென்னை - 20)

அண்ணாமலைப் பல்கலைக் கழகம்,
அண்ணாமலைநகர்.

முதற்பதிப்பு 1977
தாயுமானவர்
சொருணம்பாள் சொற்பொழிவு வரிசை 16

Rs-4-00

ஸ்ரீ வெங்கடாஜலபதி பிரிண்டர்ஸ், தஞ்சாவூர்

Bibliographical Data

1	Title of the book	...	THAYUMANAVAR
2	Author	....	Dr. S. V. Subramanian. Director & Chief Professor, International Institute of Tamil Studies, Adyar, Madras - 600 020
3	Language	...	Tamil
4	Edition	...	First
5	Date of Publication	....	September, 77
6	Copy Right Holder	....	Annamalai University
7	Paper used	....	15.9 White Printing
8	Size of the book	....	Double Demi
9	Printing types used	...	8, 10, 12
10	No. of Pages	....	150
11	No. of copies Printed	...	1000
12	Printer	...	Sri Venkatachalapathy Printers, Thanjavur
13	Binding	....	Card Board
14	Price	...	
15	Publisher	...	Annamalai University
16	Subject	....	Critical Study of Thayumanavar
17	Special Information	...	Endowment Lectures

உள்ளுரை

1. **நோக்கம்:** பெயர்க் காரணம் - காலம் - அரசியல் வாழ்வு ஆசிரியன் - பதிப்புக்கள் - தமிழ்ப் பற்று - ஏட்டுக் கல்வி.

2. **இலக்கிய நயம்:** கற்பனை - உவமைகள் - பழமொழிகள் - ஓசை நயம்.

3 **மெய்ப்பொருள்:** உலகம் - உயிர் - உடல்.

4. **பின்னிணைப்பு :** தாயுமானவர் கால அட்டவணை - யாப்பு கட்டுரைகள் - பதிப்புக்கள்.

முன்னுரை

இச் சொருணும்பாள் சொற்பொழிவை ஏற்படுத்திய டாக்டர் சேதுப்பிள்ளை அவர்கட்கும் இப்பல்கலைக் கழகத்தைத் தமிழுக்காகவே தொடங்கிய செட்டிநாட்டரசர் அண்ணுமலையார் பரம்பரைக்கும், இப் பல்கலைக் கழக ஆட்சிக் குழுவினர்க்கும், அதற்குக் காரணராயிருந்த தமிழ்ப் பேராசிரியர் அவர்கட்கும், தாயுமானுர் பற்றிய நூல்களைத் தாய்போல் நின்று உதவிய மறைமலையடிகள் நூல் நிலைய நூலகர் திரு. இரா. முத்துக்குமாரசாமி அவர்கட்கும், உ. வே. சா. நூல் நிலையப் பொறுப்பாளர் திரு. மு. கோ. இராமன் அவர்கட்கும், பல கருத்துக்களை எனக்குத் தெளிவுபடுத்திய டாக்டர் சீனிவாசன் தாவர இயல்த் துறைத் துணைப் பேராசிரியர் அவர்கட்கும் நன்றி !

—டாக்டர் ச. வே. **சுப்பிரமணியன்**

எல்லாரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன்று அறியேன் பராபரமே
—பராபரக் கண்ணி-221

இதுவே தாயுமானவரின் அடிப்படை நோக்கமாக அமைந்துள்ளது. 'யாம் பெற்ற இன்பம் பெறுகவிவ் வையகம்' என்ற தாம் துய்த்த இன்பத்தைப் பிறரும் பெறல் வேண்டுமென முன்னோர் நினைத்தனர்; கூறினர். ஆயின் தாயுமானவர் தன்னைப் பற்றிக் கவலையுறாது, தான் பெறுகின்ற இன்பம் பற்றி நினைக்காது, 'உலக உயிர்கள் அனைத்தும் இன்பமாக வாழ்தல் வேண்டும்; அதைத் தவிர வேறொன்றும் அறியேன்' எனப் பேசு கின்றார். தன்னலமற்ற பொதுநலத் தன்மையினை இவ் வரிகள் காட்டுகின்றன. *தாயரின் நோக்கம் குறிக்கும் இக்கண்ணியை, வாரந்தோறும் இலட்சக்கணக்கான மக்கள் படிக்கும் நிலையில், ஆனந்த விகடன் பத்திரிகை தன் குறிக்கோளாக அமைந்துள்ளது.

இத்தகைய ஒரு கோட்பாட்டைத் தனதாக்கிக் கொள்ளும் நிலைக்குப் பக்குவப்பட்டது அவரது மனம். உலக உயிர்கள் அனைத்தும் ஒன்று; ஒத்த நிலையுடையன என்பது அவர் கண்ட உண்மை. எல்லா உயிரையும் தன்னுயிராகப் பாராட்ட விழைந்தார்; கருதினார்.

எவ்வுயிருந் தன்னுயிர்போல் எண்ணுந் தபோதனர்கள்
செவ்வறிவை நாடிமிகச் சிந்தைவைப்ப தெந்நாளோ
—எந்நாள்

தம்முயிர்போல் எவ்வுயிருந் தானென்று தண்ணருள்கூர்
செம்மையருக்கு ஏவலென்று செய்வேன் பராபரமே
—பராபர. 149

அவ்வாறு கருதத் துணையாக நின்றது, அவர் எவ்வுயி ரினும் இறைவனைக் கண்டமையே –

எங்கெங்கு பார்த்தாலும் எவ்வுயிர்க்கும் அவ்வுயிராய்
அங்கங் கிருப்பதுநீ யன்றோ பராபரமே

இத்தகைய உலக உயிர்கள் அனைத்தும் இன்பமாக, மகிழ் வோடு வாழவேண்டும் என்பதே அவர் கொள்கை.

---

* தாயார் என்பது தாயுமானவரை சுருக்கி அமைத்து இந்நூல் முழுவதிலும் அதனையே பயன்படுத்தியுள்ளேன்.

அவருடைய பரந்து விரிந்த மனப்பான்மையை அவருடைய இத்தகு எண்ணங்கள் காட்டுகின்றன. இக் குறிக்கோளை, இன்ப வாழ்வை எய்துதற்குரிய வழி யொன்று அவர் வேண்டுகோளால் வெளிப்படுகிறது:

> அன்பர்பணி செய்யஎனை ஆளாக்கி விட்டுவிட்டால்
> இன்பநிலை தானேவந் தெய்தும் பராபரமே
>
> —பராபரம் 155

பெயர்க்காரணம் :

தனக்கெனத்தனிநோக்கம்கொண்டே தாயர், தாயுமா னவர் தாயுமானுர் என்ற இரு நிலைகளிலும் அழைக்கப் படுகின்ருர். தாயைப் போன்றவர், தாயாக ஆனவர் என்ற இரு பொருளிலும் இதனை அமைக்கலாம். திருச் சிராப்பள்ளி மலைக்கோட்டையில் கோயில் கொண் டிருக்கும் இறைவன் பெயரை இவருக்குஇயற்பெயராகப் பெற்ருேர் அமைத்ததாகக் கூறுவர். இறை அல்லது இயற்கை இறந்த-மீமானிட ஆற்றல், உலக உயிர் அனைத்திற்கும் தாயாகத், தாய் போன்ற நிலையில் அமை கின்றது. அந்நிலையில் இறைவனைத் தாயுமானுர் எனக் கூறல் இயைபுறுகின்றது. அதோடு திருச்சிராப் பள்ளியில், காவிரித் தென்கரையில் இருந்த ஒரு தாய், வெள்ளப் பெருக்கின் காரணமாக, வடகரையிலிருந்த தன் மகளுக்கு மகப்பேறு பார்க்கச் செல்லவியலாது வருந்தவே, இறைவனே அத்தாயாகச் சென்று மகப் பேறு பார்த்தமையால் 'தாயும் ஆனுர்' எனக் கூறுவர். இச்செய்தியை எல்லப்ப நாவலரின் செவ்வந்திப்புராணம் தெளிவுபடுத்தும்.

கதை எவ்வாறு ஆயினும் ஆக; எவ்வுயிரும் முதலில் அறிவது தாயைத்தான். அதனுல் தாய்க்கு எல்லா நிலை களிலும் முதலிடம் தருகின்ருேம். 'தாயிற் சிறந்ததொரு கோயிலுமில்லை'' என்பது பழமொழி. தாய்மொழி, தாய் நாடு போன்ற அமைப்புக்களும் அதனுல் அமைந்தன வென்பது நினைத்தற்குரியது. மாதா—பிதா—குரு—

தெய்வ மெனத் தாய்க்கு முதலிடம் கொடுக்கும் சொற் ருெடொரையும் எண்ணிப் பார்க்கலாம். உறவு முறைப் பெயரால் அமைந்த சிறந்த அடிகள் தாயுமாஞரே. அது பெற்ருேரிட்ட பெயராகவும், என்றும் வழங்கும் பெயரா கவும் நிலேத்தமையும் எண்ணத் தக்கது. (அப்பர் என்பது மருணீக்கியார் திருநாவுக்கரசரான பின் இடைக் காலத்தில் தோன்றிய பெயர்).

காலம் :

திருமறைக் காட்டில் வாழ்ந்த கேடிலியப்ப பிள்ளே யின் இரண்டாம் புதல்வர் தாயுமானவர் பிள்ளே, தம் முதற் குழந்தையைத் தன் சகோதரனுக்குத் தத்துப் புத்திரஞகக் கொடுத்தபின் பிறந்தவர் தாயுமானவர்.

இவர் காலம் பற்றி இருவேறு கருத்துக்கள் நிலவு கின்றன. 1608 முதல் 1662 வரை எனக் கா. சு. பிள்ளே அவர்கள் கருதுகிருர்கள் (தாயுமானவர் வரலாறும் நூலாராய்ச்சியும்—கா. சுப்ரமணிய பிள்ளே, 1930). முத்துத் தாண்டவராயர் கருத்துப்படி இவர் காலம், விசயரங்க சொக்கநாதர் காலம் (1704—1735) ஆகும் (கலேமகள்—1932).

துகளறு சாலி வருட மாயிரத் தைஞ்நூ ற்ருென்
ருெடெண்பத்து மூன்று தொடரு
மிகு சுபகிருதாம் வருடம் தைமாதம்
வெண்மதி வாரநாள் விசாக
மகிமை சேர் பூரணத் திதியினி லருத்த
மண்டல சமயத்திற் கங்கை
திகழ்கரை அதனிற் தாயுமானவர்
சிவத்திற் கலந்த நற்றினமே.

எனும் பாடலே அடிப்படையாக வைத்துக் கொண்டு, சாலிவாகன சகாப்தம் 1584-க்கு இணேயாகக் கி. பி. 1662 என்று கொண்டு, அவர் இறுதிகாலம் அதுவே எனக் கூறுவர், கா. சு. பிள்ளே (பக். 20, 23), ஆயின், இக்கருத்தைப் பலரும் கேள்வி கேட்கின்றனர். வரலாற்று

நிலையில், தாயுமானவர் காலம் மிகத்தெளிவாகத் தெரிகின்றது. அரசர் விசயரங்க சொக்கநாதர், அரசி மீனாட்சி என்போர் காலமே இவர் காலம் என்பதை எல்லோரும் ஏற்றுக்கொள்கின்றனர். வரலாற்றாசிரியர், விசயரங்க சொக்கநாதர் காலம் 1704—1731 எனக் கூறுகின்றனர். இதனை மிகத் தெளிவாக திரு. ப. அ. முத்துத் தாண்டவராய பிள்ளை (கலைமகள்—1932, பக். 473) அறிவுறுத்துகின்றார். *அட்டவணை இணைப் பாகத் தரப்படுகின்ற நாயக்க மன்னர் திருமுடி அடைவு இதனைத் தெற்றென விளக்கும்.

அரசியல் வாழ்வு:

தாயுமானவர் சிறுவயதிலேயே இருமொழிப் புலமையும் பெற்றார். கற்ற தமிழும் வடமொழியும் அவர் சொற்படி கேட்டன. அவர் அவற்றுள் வேறுபாடு கருதியதில்லை. திருமூலர் மரபில் வந்த மௌனகுருவைத் தனது குருவாகக் கொண்டார். அமைச்சராக இருந்தார் திருமணம் நிகழ்ந்தது. ஒரு புதல்வனும் பிறந்தான், புதல்வனைப் பெற்ற இவரது மனைவி சிறிது காலத்தில் காலமானதால், இவர் துறவு வாழ்க்கையை முழுநிலையில் மேற்கொண்டார் என்பது இவர் தனி மனித வாழ்வு பற்றிய செய்தி.

இவர் வாழ்க்கையில், தந்தையார் காலத்திலிருந்தே அரசியல் தொடர்பு இருந்து வந்தது. திருச்சிராப்பள்ளியில் கேடிலியப்பபிள்ளை, தலைமைக் கணக்கராக இருந்த காலத்தில்தான் தாயுமானவர் பிறந்தார். தன் தந்தைக்குப்பின் விசயரங்க சொக்கநாதர் காலத்திலேயே அமைச்சர் போன்ற நிலையில் தலைமைக் கணக்கராக நியமிக்கப்பட்டார். அவ்வாறிருக்கும்போது அவருக்கு மெய்ப்பொருள் நாட்டம் மிகுதியாக இருந்தது. இருப்பினும் தம் கடமையினைக் கண்ணெனப் போற்றிவந்தார். அரசன் 1731_ல் இறக்க, அவர் காலத்திற்குப் பின்பு,

அரசி மீனாட்சியின் ஆட்சியிலும் நிர்வாகத்தைக் கவனித்து வந்தார். ஆயின் அரசியின் பிழையான விருப்பத்தின் காரணமாகத் திருச்சியை விட்டு நீங்கி இராமேசுவரம் அடைந்தார். இவர் ஏன் இராமேசுவரம் போதல் வேண்டும்? தமிழ் நாட்டின் வேறு பகுதிகட்குச் செல்லக்கூடாதா? என்ற வினாக்களை விடுக்கும்போது நமக்குச் சில முக்கியமான செய்திகள் கிடைக்கின்றன. தமிழகத்தில், பிற நாட்டினர் நம்மை அடிமைப்படுத்த முயன்ற போது, உரிமைப் போராட்டத்திற்கு வித்திட்டதாகக் கட்டப்பொம்மனையும் புலித்தேவனையும் கூறுவது மரபாக அமைகின்றது. ஆயின் 1732_ம் ஆண்டை ஒட்டி கீழ்க்கடற்கரையில் போர்த்துக்கீசியர் நம்மை அடிமைப் படுத்த முயன்றபோது, இரகுநாத சேதுபதியின் உதவியோடு, முப்பதினாயிரம் மறவர் படை திரட்டிப் போர்த் துக்கீஸியரை எதிர்த்து விரட்டி உரிமைப் போராட்டத் திற்குத் தாயுமானவரே வித்திட்டார் என அறிகிறோம். நாம், ஆன்ம ஞான வீரர் என்று மட்டுமே அறிந்துள்ள நம் தாயர், நாட்டின் நலத்திலும் நாட்டம் கொண்டு வீரம் காட்டினார் என்பதனை உணருகிறோம். இச்செய்தியினைத் திரு. நீ. கந்தசாமி பிள்ளை அவர்களின் கட்டுரை கூறுகின்றது.*

ஆசிரியன் :

வாழ்க்கையில் திருப்பமும், வளர்ச்சியும், மாற்றமும் ஏற்படுவதற்குப் பல வகைகளில் நமக்கு வழிகாட்டும் ஆசிரியர்களே காரணமாக அமைகின்றனர். எவன் ஒருவனுக்குச் சிறந்த ஆசிரியன் அமைகின்றானோ அவன் உயர்நிலை அடைகின்றான். தாயுமானாருக்கும் இத்தகு சிறந்த தகுதிவாய்ந்த ஆசிரியர் கிடைத்தார். அவர் மௌனகுரு எனப்படுகின்றார்.

திருமூலர் மரபில் வந்தவர் இக்குரு என்பதனைத் தம் மௌனகுரு வணக்கத்தில் குறிப்பிடுகின்றார்.

* The Hindu dated March 18th 1962.

மந்த்ர குருவே யோக தந்த்ர குருவே மூலன்
மரபில் வரு மௌன குருவே

என. இப்பகுதியின் பத்துப் பாடல்களும் இவ்வாறே முடிந்து குரு வணக்கமாகவும் அவர் குருவிடம் கொண்ட பக்தியை வெளிப்படுத்தியும் அவர் குருவுபதேசம் கேட்டு உய்ந்தமை கூறியும் அமைகின்றன. 'பாயப்புலி' யின் பாடலொன்று அவர் மூன்று மௌனிகட்கு அடித் தொழும்பு செய்து உய்வு பெற்றதாக உள்ளது. "சித்த மவுனி வடபான் மவுனி நந்தீபகுண்ட, சுத்தமவுனி யெனு மூவருக்குந் தொழும்பு செய்து, சத்த மவுனமுதன் மூன்று மௌனமுந்தான் படைத்தேன் நித்த மவுன மல்லாலறியேன் மற்ற நிட்டைகளே" --பாயப்புலி—26.

வேதாகமத் துணிபு ஒன்றே எனச் சுட்டிச் சிவஞான சித்தி நெறியை மௌனம் வழிக் காட்டியவர் அக்குரு:

வென்றடியார் மனமகிழ வேதாக மத்துணி
பிரண்டில்லை யொன்றென் னவே
வந்த குருவே வீறு சிவஞான சித்திநெறி
மௌனுபதேச குருவே.

வேதாந்த சித்தாந்தங்களைச் சமரசபடுத்த அருளினுர் (மௌன. 3)

மௌனகுரு, தாயருக்கு எதைப் போதித்தார் என்பது கேள்வி. 'மற்றெனக்கு ஐய நீ சொன்னவொரு வார்த்தையினை மலையிலக்கென நம்பினேன்' (மௌன 10) 'மௌனியாய்ச் சொன்னவொரு சொற்கொண்டதே' (கருணு. 2) 'பரம வெளியாக வொரு சொற்றிட்டமுடன் மௌனியாய் அருள்செய் திருக்கவும்' (கருணு. 4) மௌனியாகி நேரே யுபாயமொன்றருளினை (எங்கு. 8). மௌனியாய்த் தெளியவோம் சொற்றந்த நாள் (பன்மாலை 10)பெம்மான் மௌனி மொழி (பாயப்புலி·36) திடமுட்னே உற்றுப்பார் மோனனெரு சொல்லே (உடல் 1) மவுனி மவுனத் தளித்த தானம் (உடல். 7) மந்தார தாருவென வந்து மவுனகுரு தத்தானோர்

சொற்கொண்டு தான் (உடல். 69) மோன குரு சொன்ன வொரு சொல்லாற் சுகமாயிரு மனமே இன்ன மயக்க முனக்கேன் (உடல். 70) மவுனிமவுனத் தளித்த மெய் (எந்நாட். குரு. 12) ஆண்டான் மவுனி யளித்தவறிவால் (எந்நாட். நிற்கு. 27) என்று குறிக்கப்படும் அவ்வறிவுரை தான் என்ன ?

'ஆறுளொன்றை நாடின்அதற் காறுமுண்டா
மென்றெமக்குக்
கூறுமவுனியருள் கூடுநா ளெந்நாளோ'

—எந்நாள். குரு. *10*

என்பது ஓரளவு விளக்கம் தந்தமைகின்றது. நாடிய தற்கு வழிகாட்டினர் என்பது இங்குத் தெரிகின்றது.

துய்ய கரமலாற்சொல்லாமல் சொன்னவுண்மை
ஐயனைக் கல் லாலரசை யாமணைவதெந்நாளோ'

—எந்நாள். குரு. *1*

என்பதால் அவர் வாயாலன்று, சைகையால் (மொழி யாலன்று கையால்) அவ்வறிவுரையை வழங்கினர் என்பது தெளிகின்றது.

நில்லாம லின்றருளை நேரேபா ரென்றவொரு
சொல்லான் மவுனி தேற்றுநா ளெந்நாளோ

—எந்நாள். குரு. *11*

என்பதால் இறையருளை நாடவே குருவுபதேசமர்க இருக்குமெனத் தாயர் கருதியமை தெரிகின்றது.

'சொல்லான் முழக்கிலோ சுகமில்லை மௌனியாய்ச்
சும்மா விருக்க வருளாய்' —சுகவாரி. *3*

'கனியேனும் வறியசெங் காயேனு முதிர்சருகு
கந்தமூ லங்க ளேனுங்
கனல் வாதை வந்தெய்தி னள்ளிப் புசித்துநான்
கண்மூடி மௌனி யாகித்
தனியே யிருப்பதற் கெண்ணினே னெண்ணமிது
சாமிநீ யறியாத தோ' —சச்சி. *5*

எனக் கூறுநிலையில் தாயர் விரும்பிய நிலை எது எனத் தெரிகின்றது. குருவின் உபதேசமும் அதுவாகவே இருந்தமையும் அவர் சுட்டுகின்றார்.

'... ..மௌனியாய்ச் சும்மா விருக்க நெறி
 கூட்டினை .. ' —தேசோ. 6
'கருத்தினுட் கருத்தா யிருந்துநீ யுணர்த்துங்
 காரணங் கண்டு சும்மாதான்
வருத்தமற்றிருந்து சுகம்பெறு வண்ணம்'
'ஒன்றுமற நில்லென் றுணர்த்திய நம் மோனகுரு'-உடல்19
'சும்மா இருத்திச் சுகங் கொடுத்த மோன !' —உடல். 80

இச் 'சும்மா இருத்தல்'. 'மௌனம் கடைப்பிடித்தல்' எனும் உபதேசம் அறிவுரை சுருதி கண்ட உண்மையாம்;

சும்மா விருக்கச் சுகங்சுகமென்று சுருதியெல்லாம்
அம்மா நிரந்தரஞ் சொல்லவுங் கேட்டு மறிவின்றியே
பெம்மான் மௌனி மொழியையுந் தப்பியென்
 பேதமையால்
வெம்மாயக் காட்டிலலைந்தே னந்தோவென் விதிவசமே
 —பாயப்புலி 36

சுருதி கண்ட தோடன்றிக் கல்லாலின் கீழ் சிவன் உபதேசித்த நிலையிலும் இது நினைக்கப்படுகின்றது.

'மணியேயென் கண்ணேமா மருந்தே நால்வர்க்
 கன்றாலின் கீழிருந்து மோன ஞான,
 மமைத்தசின் முத்திரைக் கடலே....' பன்மால. 8
'ஆரா வமுதென மோனம் வகித்துக் கல்லா னிழற்கீழ்ப்
பேராது நால்வருடன் வாழ் முக்கணுடைப் பேரரசே'
 —பாயப்புலி 20

இதனாற்றான் போலும் சிவபெருமானே மோனசிவன் (உடல். 46, 50) என்றும், வைதிகமாஞ் சைவ மவுனி (எந்நாட். குரு. 12) என்றும் குறிக்கப்பெறுகின்றார்.

இந்நிலையில், சில பாடற்றொடர்கள். இறைவனே இவருக்குக் குருவாக அமைந்தாரோ என்ற எண் ணத்தை எழுப்புகின்றன.

தாராத வருளெலாந் தந்தருள மௌனியாய்த்
தாயனைய கருணை காட்டித்
தாளிணையென் முடிசூட்டி ... சின்மயா. 9

எக்கால முந்தனக் கென்னவொரு செயலிலா
வேழைநீ யென்றி ருந்திட்
டெனதாவி யுடல்பொருளு மௌனியாய் வந்துகை
யேற்றுநம தென்று லன்றே. ஆனந்தமான-10

அகலமீ தென்னை யாட்டி
யாடல்கண்டவனுநீ யாடுகின் றவனுநீ
யருளுநீ மௌன ஞான
தாதாவு நீ பெற்ற தாய்தந்தை தாமுநீ சச்சி-10

வைக்கின்ற வைப்பானன் மௌனதே சிகனென்ன
வந்தநின் னருள்வாழி காண்
சுத்தபரி பூரண வகண்டமே யேகமே
சுருதிமுடி வான பொருளே தேசோ-11

அறிவினின்று குருவா யுணர்த்தியதுவு
மன்றி மோனகுரு வாகியே
யகில மீதுவர வந்த சீரருளை
யைய வையவினி யென்சொல்கேன் சிற்சுகோ-7

தொழுந் தெய்வமுநீ குருவுநீ துணைநீ தந்தைதாயுநீ
—சொலற்கரிய. 5

தேவெனு மௌனி செம்பொற் சேவடி... —ஆசை. 15

வாய்ப்பேசா வூமையென வைக்கவென்றோ நீமவுனத்
தாயாக வந்தருளைத் தந்தாய் பராபரமே
.. பராபரக். 126

உள்ள நிலையில் இறைவனையே குருவாகக் கொண்டார் என்றால் அதுபொருத்தமே. ஆயின் உலக நிலைக்கு ஏற்ப இறைவன் குருவுருவில் வந்தார் எனும் எண்ணமும் அங்கங்குத் தென்படுகிறது. குருவழியாக இறைவன் உதவினார் எனினும் இழுக்காகா.

சின் முத்தி ராக்க மரபிற்
சத்தமற வெனையாண்ட குருமௌனி கையினாற்
றமியனேற் குதவு பொருளே. —சச்சி. 7

பிறியாத தன்னருட் சிவஞானி யாய்வந்து
பேசரிய வாசி யாலே
பேரின்ப வுண்மையை யளித்தனை. —தேசோ. 16

குருவுரு வாகி மௌனியாய் மௌனக்
கொள்கையை யுணர்த்தினை யதனுற். —ஆரணம். 9

தேசிகர் கோனுன திறன்மவுனி. —எந்நாள். நிலே பிரி. 15

இந்நிலேயில், குருவையே தெய்வம் எனக் கூறல், முரணின்றி இயைபு பெற்று நிற்கின்றது.

வடிவனைத்துந் தந்த வடிவில்லாச் சுத்த
வான் பொருளே யெளியனேன் மனமா மாயைக்
குடிகெடுக்கத் துசங்கட்டிக் கொண்ட மோன
குருவேயென் றெய்வமே. —பன்மாலே. 3

இறையையே மௌனத்தின் உருவாகக் கொள்ளுநிலேயினுலும் மௌனத்தையே உபதேசித்த குருவின் ஒருமுகக் கோட்பாட்டாலும் இத்தகு கருத்திணைவு அமைந்ததோ என எண்ண வேண்டியுள்ளது

பேரனந்தம் பேசி மறையனந்தஞ் சொலும்
பெரிய மௌனத்தின் வைப்பை திருவருள். 2

பாராதி யறியாத மோனமே பரிபூர. 8

மௌனத் தோர்பால் வெளியாய் வயங்கா நின்ற
சோதியை பொருள். 11

தேடுதலு மற்றவிட நிலேயென்ற மௌனியே
சித்தாந்த முத்தி முதலே சின்மயா. 8

அதுவென் றுன்னு மதுவு மறநின்று
முதிய ஞானிகண் மோனப் பொருளது
எதுவென் றெண்ணி யிறைஞ்சுவ னேழையன்
பொன்னை. 29

மருளார் தா மறியா மோனமே, முதலே சிவன் 6

நின்று தெளிந்தவர் பேசா மௌன
நியாயத்தை நிறை நிறைவை மண்டலத் 2

மதமாறுங் காணுத வானந்த சாகரத்தை மௌன
வாழ்வை மண்டலத் 3

ஆரண மாகம மெல்லா முரைத்த வருண் மவுன காரண மூலம் —பாயப்புலி 25

சகற்காரணமாம் வல்லாளனுன மவுன சதானந்தமா கடலே —பாயப்புலி 24

சித்திநீ சித்தர்சித்தித் திறமுநீ திறமார் மோன
முத்திநீ முத்திக்கான முதலுநீ —கற்புறு 6

வேதாந்த மோனமே —மலைவளர் 6

என இறைவன் மௌனமே உருக்கொண்டமைந்தவன் என்பது தெற்றெனத் தாயரால் தரப்படுகின்றது.

மௌனேபதேச குருவே (மௌன. 9) கற்றையஞ்சடை மௌனி (சுக. 6), சற்குரு மோனனுமாய் (பாயப். 15), மவுனி திடம்பெற வைத்த மௌனம் (பாயப். 17), பெம்மான் மவுனி (பாயப். 36,) துதிப்பார்கள் மனக்கல் லுங் கரைக்கு மவுன (பாயப். 44,) மோனக் கரும்பே (உடல். 21,) முத்திக்கு வித்தான மோனக் கரும்பு (பராபர. 385,) வல்லவனு மோனகுருவே முழுதினையுந் தானுணர்ந்த ஞான குருவே (உடல். 30,) ஆதிக்க மோன வருட் டாயே! (உடல். 36,) மாமௌனன் (உடல். 61) தனைக்கொடுத்தே ஆசான் மவுனி யளித்தான் (உடல். 72) ஆனந்த மோனகுரு (உடல். 73,) தாயான மோனன் (ஏசற்ற. 6) மோனப் புண்ணியனே (கல். 11,) மோனப் பெருக்கே (பராபர. 4,) மைவண்ணம் தீர்ந்த மவுனி (பராபர. 72,) எங்கள் மோனகுரு (பராபர. 229,) வாரா வரவாக வந்தருளும் மோனர் (பைங். 51) முதலிய எளிய தொடர்களும் மௌன குருவைச் சிறப்பித்துவருகின்றன. இவை யொழிய, அடையின்றி மோனகுரு மவுனி என வருமிடங்களும் சில உள, (உடல். 74, 75, 76; பராபர. 72, 229; எந்நாள். குரு. 13.) இம்மோனகுரு, தாயரைத் தடுத்தாண்டமை சுவையாகச் சுட்டப்படுகின்றது.

……………எனைப்போல வுருவங் காட்டிக்
கோளறவோர் மான்காட்டி மானை யீர்க்குங்
கொள்கையென வருண் மௌன குருவாய் வந்து
வந்தெனுடல் பொருளாவி மூன்றுந் தன்கை
வசமெனவே —ஆகார. 17, 18

என்னறிவை யுள்ளடக்கி யென்போல் வருமவுனி
தன்னறிவுக் குள்ளே நான் சாருநாள்.........எந்நாட். குரு. 9

எனவும்,

படிமிசை மௌனியாகி நீ ஆளப் .... —ஆரண. 7

நீயென நானென வேறில்லை யென்னு நினைவருளத்
தாயென மோன குருவாகி வந்து தடுத் தடிமைச்
சேயென காத்தனையே பரமே —பாயப். 58

வாயொன்றும் பேசா மவுனியாய் வந்தாண்ட
தேயொன்றும் போதாதோ —பராபர. 131

எனவும் விரிக்கப்படுகின்றது.

தடுத்தாளப்பட்டபின் தன் நிலையைத் தாயர் எளிமையாக அழகாகப் படம் பிடித்துக் காட்டுகின்றார்.

அன்பருக் கன்பான மெய்யன்-ஐயன்
ஆனந்த மோன னருட்குரு நாதன்
தன்பாதஞ் சென்னியில் வைத்தான் - என்னைத்
தானறிந்தேன்மனந் தானிறந் தேனே —ஆனந்தக். 10

தன்னை யறிதலே தலைவனை யடைதலின் முன்படி எனும் தத்துவமும் இங்கே விளக்கம் பெறுகின்றது.

குருவருளால் கிடைத்தவை பல. உலகத்தை இந்திர ஜாலம், கனவு, கானல் நீரென நினைக்கும் மனப் பக்குவம் ஏற்பட்டது; இறையைச் சார்ந்து வாழும் வாழ்வு கிட்டியது; புத்தி மகிழ ஆனந்த வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது (பொருள். 6); யான், எனது என்பன அற்றன (மண்டலத். 10); மேல் வாயுவைக் கீழ்படுத்து மூலத்து வெந்தழலை எழுப்பி அமிர்தம் பருகும் தகைமை உருவாயிற்று (பாயப். 28); தத்துவப் பேயோடே தலையடித்துக் கொள்ளாமலிருக்கும் வாய்ப்பு வந்தது (உடல். 29) இன்ப நிட்டை கிட்டிற்று (உடல். 72.)

தாயரைச் சீடராக ஏற்றுக் கொள்ளுமுன் மௌன குரு கொடுத்த வாக்கொன்று உண்டு.

குருவாகித் தண்ணருளை கூறுமுன்னே மோன
உருநீடுயிர் பொருளு மொக்கத் - தருதியென
வாங்கினையே —உடல். 77

உருவும் நீடுயிரும் பொருளு மட்டுமன்றி வேறு பல் பொருளும், உயர்வும், சிறப்பும் அவருக்குக் கிடைத் தமையை அவர் பாடல்களே சுட்டியமை கண்டோம். குருவையே நினைந்து சிந்தித்துப் (உடல். 39) பூசித்து (உடல். 32) நிற்கும்போது 'நிருவிகற்ப நிட்டை நிலை'; (உடல். 32) கிடைக்கின்றது.

அறிவின் முதிர்ச்சியில் மௌனம் ஏற்படுகின்றது; மௌனத்தின் உன்னதத்தில் இறைநிலை பொருந்து கின்றது.

சிற்றரும் பன சிற்றறி வாளனே தெளிந்தான்
மற்றரும்பென மலரெனப் பேரறி வாகிக்
கற்றரும்பிய கேள்வியான் மதித்திடக் கதிச்சீர்
முற்றரும்பிய மௌனியாய்ப் பரத்திடை முளைப்பான்
...ஆசை. 34

சத்தமற மோனநிலை பெற்றவர்கள் உய்யவர்காண்
....சச்சி. 6

மௌனம், 'மறை முடிவான அருள்' நாட்டம் தருகின்றது (ஆனந்த. 4).

இத்தகைய மௌனக் கொள்கையை (ஆரண. 7) கைக் கொள்ளல் வேண்டும். மவுனமவுன மென்றே சொன்னால் போதாது (பாயப். 24) அப்போது கிடைப்பது வானமிர்தம்.

இயலறிந்து வளர் மூல குண்டலியை
யின்றி றைஞ்சியவ னருளினு
னெல்லை யற்றுவளர் சோதிமூலவன
வெங்கண் மோனமனு முறையிலே
ஐயமி குந்துவரு மமிர்த மண்டல
மதிக்குள்ளே மதியை வைத்துநான்

வாய்மடுத் தமிர்த வாரியைப் பருகி
மன்னு மாரமிர்த வடிவமாய்ச்
செயமி குந்துவரு சித்த யோகநிலை
பெற்று ஞான நெறியடைவனே ...சிற்சு. 6

இந்நிலையில் எல்லாமே மோனமாகத் தெரிகிறது புலவருக்கு.

ஆனந்த மோனகுரு வாமெனவே யென்னறிவின்
மோனந் தனக்கிசைய முற்றியதாற் றேனுந்து
சொல்லெல்லா மோனந் தொழிலா தியுமோனம்
எல்லாநன் மோனவடி வே .. உடல் 73

எல்லாமே மோனநிறை வெய்துதலா லெவ்விடத்தும்
நல்லார்கண் மோனநிலை நாடினர் ....உடல் 74

மோன குருவளித்த மோனமே யானந்த
ஞான வருளுமது நானுமது - வானுதி
நின்ற நிலையுமது நெஞ்சப் பிறப்புமது —உடல் 75

இவ்வாறு தான் கொண்ட கொள்கையின் சிறப்பும் தன் குருவின் உயர்வும் மறவாமல் பல்லிடங்களில் நிலை நாட்டிச் செல்கின்றார் தாயுமானவர். அவர் குருவின் ஆற்றலுக்கு ஒரு பாடலைச் சான்றாகத் தருகின்றேன்.

கானக மிலங்குபுலி பசுவொடு குலாவுநின்
கண்காண மதயா னைநீ
கைகாட்ட வுங்கையா னெகிடிக் கெனப்பெரிய
கட்டைமிக வேந்தி வருமே
போனக மமைந்ததென வக்காம தேனுநின்
பொன்னடியி னின்று சொலுமே
புவிராசர் கவிராசர் தவராச ரென்றுனைப்
போற்றிசெய போற்றி யென்பார்
ஞானகரு ணாகர முகங்கண்ட போதிலே
நவநாத சித்தர்களு முன்
நட்பினை விரும்புவார் சுகர்வாம தேவர்முதன்
ஞானிகளு முனை மெச்சுவார்
வானகமு மண்ணகமும் வந்ததிர் வணங்கிடுமுன்
மகிமையது சொல்ல வெளிதோ —மௌன. 7

பதிப்புக்கள் :

1835-ல் அச்சிடப்பட்ட தாயுமானவர் பாடல்களே நமக்குக் கிடைப்பனவற்றுள் பழமையானவை. அதற்குப் பின் ஏறத்தாழ 30 பதிப்புக்கள் வந்துள்ளன. முதலில் மூலம் மட்டுமே வந்தது. உரையுடன் முதன் முதலாக **1921**-ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. **1925**-ஆம் ஆண்டு ஐசக் தம்பையா இதனை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். *1937*-ம்ஆண்டில் அர்னுலெக்மன் (Arna lehman) என்பவரின் ஜெர்மன் மொழிபெயர்ப்பு வெளிவந்தது. இதுவரைத் தாயுமானவர் பற்றி ஏறத்தாழ 48 நூற்களும் 23 கட்டுரைகளும் வெளிவந்துள்ளன. இவையே இவர் பாடல்களின் பெருமையினை உணர்த்தப் போதுமானவையாகும்.

தாயுமானுரின் படைப்புக்கள் 56 பிரிவுகளில் 1452 பாடல்களுடன் 4127 வரிகளில் அமைகின்றன.

தனக்கு முன் வாழ்ந்த சமயக் குரவர்கள் பலரை இப்பாக்களில் சுட்டுகின்ருர் தாயர். அடியார் வணக்கம் என்ற பகுதியில் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர், பட்டினத்தார், பத்திரகிரியார், திருமூலர், அருணகிரியார் போன்ருேரைக் குறிப்பிடுவதிலிருந்து இவர் போற்றுகின்ற பாவாணரையும், அவர் கூறும் கருத்துக்களை ஏற்றுக்கொள்கின்ற தன்மையினையும் நாம் உணருகிருேம்.

தமிழ்ப் பற்று :

தாயுமானவர் இருமொழிப் புலமையுடையவர். 'கல்லாத பேர்களே' (சித்தர். 10) என்னும் பாடல் இதற்கு உட்சான்ருகும். அவர் தமிழ் மொழி, வடமொழி எனும் இரு மொழிகளையும் இரு கண்களெனப் போற்றித் தம் நூலில் பயன்படுத்தியுள்ளார். இருப்பினும் தமிழகத்தின் காலச் சூழ்நிலை காரணமாக, தெலுங்க மன்னர்க

ளாகிய நாயக்கர் பரம்பரை வடமொழியை மிகுதியாகப் போற்றிய காரணத்தாலும், தத்துவ எண்ணங்களை வட மொழி வாயிலாக இவர் மிகுதியாக உணர்ந்ததாலும், வடமொழிச் சொற்களை 60 விழுக்காட்டிற்குமேல் பயன் படுத்தியுள்ளார். இருப்பினும், திருமூலர் மரபில் வந்த மௌனகுரு இவருக்குக் குருவானமையினாலும், இவர் ஆழ்ந்து தோய்ந்தது தமிழ் பக்தி இலக்கியங்களானமை யினாலும், தமிழ் பற்றிய எண்ணங்களையும் பல இடங் களில் சுட்டுகின்றார்.

கன்ன லமுதெனவு முக்கனியெனவும் வாயூறு
  கண்டெனவும் அடியெடுத்துக்
கடவுளர் கடந்ததல வழுதழுது பேய்போற்
  கருத்தி லெழுகின்ற வெல்லாம்
என்ன தறியாமை யறிவென்னு மிருபகுதியா
  வீட்டுதமி ழென்ற மிழினுக்
கின்னல்பக ராதுலக மாராமை மேலிட்
  டிருத்தலா லித்த மிழையே
சொன்னவனி யாவனவன் முத்திசித் திகளெலாந்
  தோய்ந்த நெறியே படித்தீர் —சித்தர் 8

வல்ல தமிழறிஞர் —சித்தர் 10

முத்தமிழ் முழக்குடன் முத்தநகையார்களொடு
  முத்துமுத் தாய்க் குலாவி —சச்சி 6

என்பன இதற்குச் சான்று பகரும்.

தமிழிசையே இறைவன்; தமிழிசைக்கு இறைவன் தலைவணங்குகிறான் என்பதைத் திருஞானசம்பந்தர் திருநாவுக்கரசர் வரலாறுகள் நிறுவுகின்றன. இதனையே தாயுமானாரும் எடுத்தியம்புகின்றார்.

உண்டவர்க் கன்றி யுட்பசி யோயுமோ
கண்டவர்க் கன்றி காதலடங்குமோ
தொண்டருக் கெளியானென்று தோன்றுவான்
வண்டமிழ்க் கிசைவாக மதிக்கவே —பொன்னை 70

தமிழ்ப் பாடல்களை உருக்கத்துடன் உள்ளம் குழைந்து பாடினால் அத்தகைய அடியவர்களை இறைவன் சோதிப்ப தில்லை யெனப் பேசுகிகின்றார் தாயர்.

கொடுக்கின் ரோர்கள்பாற் குறைவையா தியாதெனும் குதர்க்கம்
விடுக்கின் ரோர்கள்பால் பிரிகிலா துள்ளன்பு விடாதே
அடுக்கின் ரோர்களுக் கிரங்கிடுந் தண்தமி ழலங்கல்
தொடுக்கின் ரோர்களைச் சோதியாதது பரஞ்சோதி

—ஆசையெனும் 6

இறைவனின் தமிழ்க் காதலையும் அழகாகப் படம் பிடித்துக் காட்டுகின்றார் தாயர். தாயுமானவர், இறைவனுக்காக ஏங்கித் தவங்கிடக்கின்றார். காதலி காதலனைக் காணத் துடிக்கின்ற பாங்கில். அன்பில் மிகச் சிறந்தது, இதயங்கள் இரண்டறக் கலக்கின்ற காதலன் காதலியரன்பே; அதற்கு மாதவி கோவலன் வாழ்க்கையே எடுத்துக்காட்டு. அத்தகைய நிலையில் அடியாரை, அன்புக்கு ஏங்கும் காதலியாகவும்; இறைவனை, அருளளிக்கும் காதலராகவும் கொண்டு பாடுகின்ற நிலை தமிழ் மரபை ஒட்டி வந்தது. இவர், தாயுமானவர் இறைவனுக்கு ஏங்குகின்றார்; இறைவன் தமிழிசைப் பாட்டிற்கு ஏங்கி, சுந்தரர் பொருட்டு அவரது காதலி பரவையார் மனை வாயிலுக்குத் தூதாக அலைகின்றார் எனப் பாடுகின்றார் தாயர்.

அடியிட்ட செந்தமிழின் அருமையிட்டு ஆரூரில்
அரிவையோர் பரவை வாயில்
அம்மட்டும் அடியிட்டு நடைநடந் தருள்அடிகள்
அடியீது முடியீதென

வடியிட்ட மறைபேசு பச்சிளங் கிள்ளையே —மனைவயர் 1

இவ்வெண்ணத்தை அடியார் வணக்கத்திலும் வெளியிடுகின்றார்.

பித்தரிறை என்றறிந்து பேதைபால் தூனுப்பு
வித்த தமிழ்ச் சமர்த்தர் மெய்ப்புகழ்வ தெந்நாளோ.

—எந்நாள்: அடியார் 3

இவ்வாறு தமிழ்மீது—தம் தாயின்மீது பற்றுக்கொண்டிருந்த தாயருக்கு, இதுவரை முத்தமிழும் மூவர் தமிழும் கேட்டு மகிழ்ந்த இறைவனுக்குத் தம் தமிழ்

இனிக்குமோ என்ற ஐயம் தோன்றுகின்றது அதனை வெளியிடும் வாயிலாகத் தமிழின் பெருமையை முழு நிலையில் கூறுகின்றார் அடிகள்; தன் கவிதையைப் புலம்பலெனத் தாழ்த்துகின்றார்.

தேவரெலாந் தொழச் சிவந்த செந்தாள் முக்கண்
செங்கரும்பே மொழிக்குமொழி தித்திப்பாக
மூவர்சொலுந் தமிழ்கேட்குந் திருச்செவிக்கே
மூடனேன் புலம்பியசொல் முற்றுமோதான்

காலத்தின் கோலத்தால் கருத்துக்களைச் சரிவரக் கருதாதோர்க்குத் தாயுமானார் தமிழ்க் காதலையும் இங்குக் குறிப்பிட்டேன்.

யாப்பு

தாயுமானவர் பாடல் பலதரத்தனவாய்ப் பொருண்மையாலும் பொருள் வெளியீட்டாலும் பாவமைப்பாலும் வேறுபட்டுக் கற்போர்க்குக் கவின் விருந்தாய் அமைகின்றன. பாடல் தலைப்புக்கள் (1) முதல் தொடராகவும் (2) பாடல் தோறும் வரும் ஈற்றுத் தொடராகவும் (3) ஈற்றடிப் பகுதியாகவும் (4) பொருண்மை குறித்தும் (5) யர்ப்பைச் சுட்டியும் (6) யாப்பும் பொருளும் இணைந்த நிலையிலும் அமைந்துள்ளன.

மிகுதியான தலைப்புக்களின் கீழுள்ள பாடல்கள் முழுமையும் ஈறொப்புமையுடனே வன்றி அந்தாதித்தொடர்பு பெற்றே வருகின்றன, அந்தாதி பெறும் பகுதிகள் பெரும்பான்மை மண்டிலம் பெற்றமைகின்றன.

பாடல்களில் நான்கடி பெற்று வருவனவும் (593) ஈரடி பெற்று வருவனவுமே (858) மிகுதி. இவற்றில் 2 சீரடி முதல் 52 சீரடிகள் வரை உள.

தாயுமானவர் பாடல்களிலமைந்த யாப்பு வடிவம் பல தரத்தன. பா - வகை, இனம் பயில்வதோடு சிந்தும் வருகின்றன.

பாவகைகளில் நேரிசை வெண்பாவும் (83) கொச்சகக் கலிப்பாவும் (21) கட்டளைக் கலிப்பாவும் (2) நிலைமண்டில ஆசிரியப்பாவும் (1) காணப்படுகின்றன.

பாவினங்களில், குறள் வெண் செந்துறையில் அமையும் பாடல்கள் எண்ணிக்கையில் மிகுதி (828). பிற பாவினத்தில், ஆசிரிய விருத்தமே மிக்குப் பயின்றது. 52 சீர் (1), 14 சீர் 1), 12 சீர் (128), 8 சீர் (58), 7 சீர் (22), 6 சீர் (90), ஆசிரிய விருத்தங்கள் உள. கலி விருத்தமும் (80), கலித்துறையும் (102) பயிலும் கலி யினங்கள். கலித்துறையில் பெரும்பான்மையும் கட்டளைக் கலித்துறையாம் (59), பாடுகின்ற பனுவல் என்பதன் ஐந்து பாடல்களும் வஞ்சித்துறை யாப்பின (5).

கலியின் வேறுபாடு எனக் கருதப்படும் சிந்து, ஆனந்தக் களிப்பு எனும் பகுதியில் அமைகின்றது.

இவற்றுள், கொச்சகக் கலிப்பா நாற்சீரடிகள் நான்கா லாகிப் பெரும்பான்மை வெண்டளை மட்டும் பெற்றும் (16) சிறுபான்மை கலித்தளை விரவியும் (5) வருகின்றன. அனைத்துப் பாடலிலும் வெண்சீர் வெண்டளையின் பயிற்சியே மிகுதி. இதனால், கொச்சகக் கலிப்பா, தரவு (கொச்சகம்) ஆகத் தனித்து வரும்போது, வெண்டளையோ கலித்தளையுமோ வன்றிப் பிறபெறா என்பது தெளிகின்றது. பிறதளை விரவுவன கலிவிருத்தமாம்

நூலின் 56-ம் மிகுதியான 'அகவல்', 38 அடியும் ஏகார ஈறும் பெற்ற நிலைமண்டில ஆசிரியமாம். இது முழுமையும், பிற்கால அமைப்புப்படி, ஈரடி எதுகையாக அமையவில்லை. மாறாக, அடியெதுகை பெறாத அடிகள் பொழிப்பெதுகை பெறுகின்றன. இதனால், இடையடிகள் குறைந்து வந்த இணைக்குறள் ஆசிரியம் என இதனை அமைப்பினும் தவறின்று.

நூலின் இறுதியில் அமையும் வண்ணத்தை ஆசிரிய விருத்தம் எனக் கூறலாமா என்பது ஐயமே. இவ்வண்

ணம் எட்டு அடியாகப் பதிப்பிக்கப்பட்டும், ஒவ்வோரடி இடையிட்டே எதுகை பெறுவதால் 52 சீருடைய ஆ. வி. எனக் கொள்ளலாம். ஆயின், பிற்காலத்தார் கருதிய வண்ண நிலேயில் விளக்கப்படல் சாலும். சந்தக் குறிப்புப்படி தாயுமானவரின் வண்ணம்,

தனனு - தனதனனு - தனனு - தனதனனு
தனனு - தனதனனு - தனதன - தான

என்ற வமைப்புடைய மூன்று குறிப்பும்

தானதனதன - தானதனனு

என்ற வமைப்பில் ஒரு தொங்கலும் சேர்ந்து உருவாகும் கலேகள் எட்டுடையது. எனவே, இன 'எட்டுக் கலே கொண்டதாய் இடையிட்ட எதுகை யுடைத்தாய்த் தொங்கலும் தொடையும் பலவாகி வரும்' கலேவண்ண மாகலாம். சந்தப்பா வானமையினுல் இஃது ஓசை யொழுக்குப் பெறுகின்றது. அடி தூக்குப்படுமிடத்து அனேத்தும் எதிர்பார்க்கப்படும் மோனே இதன்கண் முழுமையாக அமையவில்லே.

14 சீர் ஆ. வி. பாடல், அரையடிக்கு மா - காய் - மா - காய், மா-காய் விளம் என்ற செறிவான அமைப்புடையது சில 12 சீர் ஆ. விருத்தக்கள் 14 சீராக அலகிட இடனளிக்கின்றன. அவை பெரும்பாலும் மா - காய் - மா - காய் (விளம்), மா - காய் (விளம்) விளம் எனும் சீர்நிலேயின. நான்கும் மூன்றும் சீராகத் தூக்குப்படும் இதன் அடிகள் அவ்விடத்து மோனே பெறுகின்றன.

12 சீர் ஆ. வி, நான்கு சீரும் இரு சீருமாக இருமுறை தூக்குப்பட்டு, 1, 5, 7, 11-ம் சீரில் மோனே பெறுகின்றன. இதன் கண் ஒரு செவ்விய சீரமைப்புத் தென்படவில்லே.

8 சீர் ஆ. வி. இரு நாற்சீராகத் தூக்குப்பட்டு 1, 5, 7-ம் சீர்களில் மோனேயுடன், காய்-காய்-மா-மா; காய்-காய்-காய்-மா ; மா-விளம்-விளம்-விளம் போன்ற சில செவ்விய சீரமைப்பும் பிறவும் பெற்று வருகின்றன.

7 சீர் ஆ. வி. நான்கும் மூன்றும் சீராகத் தூக்குப் பட்டு 1, (3), 5_ம் சீரில் மோனையும், விளம்-மா-விளம்-மா, விளம் (காய்) விளம் (காய்) -மா எனும் சீரமைப்பும் பெற்றுள்ளன.

6 சீர் ஆ. வி. பாடல்கள் முந்நிலையில் தூக்குப் பட்டுள்ளன போலும். இவற்றின் அடிகள் முழுமை யாக நிற்பதோடு, நான்கு மிரண்டுமாகவும் துண்டு படுகின்றன. 1-4-ம் சீர்கள் முதலிரு வகையிலும் 1, (3), 5-ம் சீர்கள் மற்றவகையிலும் மோனைத் தொடர்பு பெறுகின்றன. முதலிரு வகைப்பாடலின் அடிகள் விளம்-மா-மா எனவோ மா-மா-காய் எனவோ இரு முறை வர, பிறிதொன்று காய்-காய்-காய்-காய், மா-மா என்றோ மா-விளம்-விளம்-விளம், விளம்-காய் என்றோ அமைதல் தெளிகின்றது.

கலிவிருத்தம் பெரும்பான்மைப் பொழிப்பும் சிறு பான்மை ஒருஉ, மேற்கதுவாய் மோனையும் பெறு கின்றன. பல் சீரமைப்புநிலை தெளிகின்றன; வரை யறை இன்மையைக் காட்டுகின்றன.

கலி (நிலை)த் துறைகள் 1—5-ம் சீரில் மோனையும் மா-விளம்-விளம்-மா என்ற சீரமைப்பும் பெரும் பான்மை பெறுகின்றன. விளம் வருமிடத்துக் காய் வரலும் உண்டு.

குறள்வெண் செந்துறைப் பாடல்கள், தாழிசை எனவும் கண்ணியெனவும் குறிக்கப்படல் உண்டு. இவற்றுள் எண்சீரடி யிரண்டாய் நடப்பனவும் (777) உள. கண்ணி எனத் தலைப்புக் குறிப்புப் பெறுவன வனைத்தும் (பலவகைக் கண்ணி ஒழிய) அளவொத்த இருநாற் சீரடியாய் (ஒரு பகுதியின வனைத்தும்) தம்முள் ஈரெுப்புமையுடன் செல்கின்றன. இவை வெண் டளையே பெற்று வருகின்றன. இதனால் கண்ணியின்

இலக்கணம் தெளிகின்றது. எண் சீரடிகள் பல்தளையும் விரவி வரும் தாழிசைகளாம். கண்ணிகள் பொழிப்பு மோனையும், தாழிசைகள் 1, 5, 7—ம் சீரில் மோனையும் பெறுகின்றன.

ஆனந்தக் களிப்பு, பல்லவியும் சரணங்களும் மட்டும் பெற்றுவரும் கீர்த்தனையின் சாயல் காட்டி அமையும். இதன்கண் பல்லவி போன்றுவரும் பகுதி முந்நாற்சீரொற்றையாகும், இப்பகுதி தொடர்ந்து வரும் சிந்துகட்குப் பின் மீண்டும் மீண்டும் பாடப்படல் எதிர்பார்க்கப்படுகின்றது. 30 சிந்துக்களும் முந்நாற்சீரிரட்டையாம். ஓசை நயமிக்க இச் சிந்துப் பாடல்கள் உணர்வு வெளியீட்டிற்கு ஏற்ற களனுகின்றன.

வண்ணம், கண்ணி, ஆனந்தக் களிப்பு எனும் வடிவங்கள் சித்தரிடமிருந்து தாயுமானவரால் கொள்ளப்பட்டன எனலாம். பிற, அவருக்கு முற்பட்ட பல இலக்கியங்களிலும் கையாளப்பட்டனவேயாம். எனவே மரபைப் பின்பற்றி மரபு பிழையாமல் செய்யுளியற்றினுர் தாயுமானவர் எனலாம்.

இறையுணர்வு வெளியீட்டுக் கவிதைகளுக்குப் பல்வகைப் பாவடிவும் துணையாக நிற்குமாற்றைத் தாயர் பாடல்களின் யாப்பமைப்பு விளக்குகின்றது.

பிச்சைக்காரரர் முதல் பேராசிரியர் வரைப் பாடி இன்புற்று ஆழங்கண்டு அனுபவிக்கும் தகுதி வாய்ந்தன தாயர் பாடல்கள். அவர் பாடலின் தாக்கமே, டாக்டர் மு. வ. அவர்களின் 'மண்குடிசை' என்ற புதினம். அதன்கண் பல்லிடங்களிலும் தாயுமானுர் கருத்துக்களையும் பாடல்களையும் அவ்வாறே எடுத்தாண்டுள்ளார்.

சங்கர சங்கர சம்பு — சிவ சங்கர சங்கர சங்கர சம்பு

ஆக்கி அளித்துத் துடைத்துத்—தொழில்
அத்தனை வைத்து மெள்ளத்தனை யேனுந்
தாக்கற நிற்குஞ் சமர்த்தன் — உள்ள
காட்சியைச் சிந்திக்கத் தக்கது தோழி.

இவர் கொள்கையைத் தம் கோட்பாடாகக் கொண்ட பத்திரிகையும் இவர் கருத்துத் தாக்கத்தைக் காட்டு கின்றது.

தாயுமானவர் ஒரு சித்தர். ஆயின் தன் சித்துக்களை யெல்லாம் உலகிற்குக் காட்டாது, காட்ட விரும்பாது, இறைவனோடு இரண்டறக் கலக்கும் நிலையையே அவர் விரும்பினார். தாயுமானார் எண்ணப்படி சித்துக்கள் செய்வது எளிது, சும்மா இருப்பது கடினம்.

கந்துக மதக்கரியை வசமா நடத்தலாம்
 கரடி வெம் புலி வாயையும்
கட்டலாம் ஒருசிங்க முதுகின்மேற் கொள்ளலாம்
 கட்செவி எடுத்தாட் டலாம்
வெந்தழலில் இரதம் வைத்தைந்து லோகத்தையும்
 வேதித்து விற்றுண்ணலாம்
வேறொருவர் காணாமல் உலகத் துலாவலாம்
 விண்ணவரை ஏவல் கொள்ளலாம்
சந்ததமும் இளமையோ டிருக்கலாம் மற்றொரு
 சரீரத்தி னும் புகுதலாம்
சலமேல் நடக்கலாம் கனல்மே லிருக்கலாம்
 தன்னிகரில் சித்தி பெறலாம்
சிந்தையை அடக்கியே சும்மா இருக்கின்ற
 திறமரிது சத்தாகி யென்
சித்தமிசை குடிகொண்ட அறிவான தெய்வமே
 தேசோம யானந்தமே — —தேசோ. 8.

ஏட்டுக்கல்வி

சித்துப்பற்றிச் சொன்னவர் கல்வி பற்றியும் கழறு கின்றார். கற்றவர்கள் கற்றதின்படி நடத்தலில்லை: அக்கல்வியால் என்ன பயன் என்பதுதான் தாயர் கேள்வி. இன்றும்கூட மிகுதியாகப் படித்த பலர் இறுதியாகத் துறவியான நிலையைப் பார்க்கின்றோம். தாயர், எல்லா அறிவியல்களையும் கற்றவர்; வல்லவர். இருப்பினும் கற்றலால் மட்டும் பயனில்லை யென்றே பேசுகிறார். அதற்கு அடிப்படைக் காரணம், நாம்

கற்றதைப் பயன்படுத்தும் முறையே. எனவே கற்ருேரைக் காட்டிலும் கல்லாதோரே நல்லவர்கள் என்கிருர். ஏனெனில் கற்றவர்கள் தன் முனேப்பால் தன் ஆற்றலேக் காட்ட வேண்டுமென்று நினேக்கின்ருர்களே தவிர, உண்மையை உணர்த்த வேண்டுமென்று நினேப்பதில்லே. அதற்கு மிக நல்ல உதாரணம் காட்டுகின்ருர். ஞான மார்க்கத்தில் இறைவனே அடையலாம் என ஒருவன் விவாதித்தால், கர்ம மார்க்கமே சிறந்ததென எதிர் வாதம் செய்வேன்; வடமொழி வல்லான் வந்தால், தமிழிலிருந்து சான்று காட்டுவேன்; தமிழில் தேர்ந்த வன் வரின்,வடமொழியிலிருந்து வசனங்கள் காட்டுவேன்; இக் கல்வி யெல்லாம் பிறரை மருட்டப் பயன்படுவனவே யொழிய, முத்திக்குப் பயன்படுமா எனக் கேட்கிருர்.

கல்லாத பேர்களே நல்லவர்கள் நல்லவர்கள்
    கற்று மறிவில்லாத என்
கர்மத்தை என்சொல்வேன் மதியையென் சொல்லுவேன்
    கைவல்ய ஞான நீதி
நல்லோ ருரைக்கிலோ கர்மமுக் கியமென்று
    நாட்டுவேன் கர்ம மொருவ
ருட்டிஞ லோபழைய ஞானமுக் கியமென்று
    நவிலுவேன் வடமொழியிலே
வல்லா ஞெருத்தன் வரவுந் த்ராவிடத்திலே
    வந்ததா விவகரிப் பேன்
வல்ல தமிழறிஞர் வரின் அங்ஙனே வடமொழியின்
    வசனங்கள் சிறிது புகல்வேன்
வெல்லாமல் எவரையும் மருட்டி விடவகைவந்த
    வித்தையென் முத்தி தருமோ
வேதாந்த சித்தாந்த சமரசநன் னிலேபெற்ற
    வித்தகச் சித்தர் கணமே— சித்தர், 10.

விண்ணிலே மேலுலகம் உண்டு எனக் கருதி விண்ணில் ஏற ஒருவன் நூலேணி தயாரிக்கப் பருத்தியை விதைத் தானே யாஞல் எத்தகைய அறியாமையோ, அதைப் போன்றதே ஏட்டுக் கல்வி எனப் பேசுகின்ருர் தாயர்.

நூலேணி விண்ணேற நூற்குப் பருத்தி வைப்பார்
போலே கருவி நன்னூற் போதம் பராபரமே

இவையன்றி வேறு பல்லிடத்தும்,

சின்னஞ் சிறியார்கள் செய்த மணற் சோற்றை யொக்கும்
மன்னுங் கலைஞான மார்க்கம் பராபரமே

வாசக ஞானத்தால் வருமோ சுகம் பாழ்த்த
பூசலென்று போமோ புகலாய் பராபரமே

கேட்டதையே சொல்லுங் கிளிபோல நின்னருளின்
நாட்டமின்றி வாய்பேசல் நன்றோ பராபரமே

போன்ற பல பாடல்கள், மிகுதியாகக் கற்ற இவர் கல்வி பற்றிக் கொண்ட எண்ணங்களை விளக்குகின்றன.

கற்றும் பலபல கேள்விகள் கேட்டுங் கறங்கெனவே
சுற்றுந் தொழில் கற்றுச் சிற்றின்பத்தூ டுசுழலினென்னுங்
குற்றங் குறைந்து குணமேலிடு மன்பர் கூட்டத்தையே
முற்றுந் துணையென நம்புகண்டாய் சுத்த மூடநெஞ்சே.

இலக்கிய நயம்

தாயரின் பாடல்கள், உடல் உயிர் உலகம் இறைவன் என இவற்றைப் பற்றிப் பேசுகின்ற தனிப் பாடல்களே ; கதைப் பாடல்கள் அல்ல. ஆயினும் இவற்றை மனித வாழ்க்கைக் கதையினைக் கூறும் பாடல்கள் எனலாம். அவை பாடுதற்கென்றே அமைந்தவை. பாடுவதற் குரியனவே பாடல்கள். செய்யப்படுவது செய்யுள். கற்பனையோடு கலந்து கவிஞனால் இயற்றப்படுவன கவிதை. தாயர் பாடல் கவிதையாகவும் செய்யு ளாகவும் பாடலாகவும் அமைந்துள்ளன.

இலக்கு என்பது நோக்கம், இயம் ஒலிப்பது, வெளிப் படுத்துவது. நோக்கங்களை வெளிப்படுத்துவது இலக் கியம். இலக்கியத்திற்குப் பல கூறுகள் உள. அவற் றுள் முக்கியமாக நயம் தருவனவாகச் சொல்லப் படுவன உவமை, கற்பனை, ஓசைநயம், முரண் முதலிய சொல்லாட்சி, பழமொழி வழக்குப் போன் றனவாம். ஆயின் இலக்கியங்கள் எளிமை, இனிமை, ஆழமுடைமை என்ற முந்நிலைகளைக் கொண்டிருந்தால் அதுவே போதும் ; அவை பலராலும் படித்து இன் புற்றுப் போற்றப்படும்.

‘ பக்தி இலக்கியம் ’ என்ற தொடரைப் பயன்படுத்து கின்றோம்.

பக்திப் பாடல்களை இலக்கியம் என்று கூறலாமா என்ற வினாக்கூட தற்காலத்து எழுகின்றது. வாழ்க் கையைப் பற்றி, அதற்குரிய கூறுகளோடு கூறுபவை அனைத்தும் இலக்கியங்களே. பக்திப் பாடல்கள் அல் லது சமயப் பாடல்கள் என நாம் பிரிப்பவை அனைத்தும் வாழ்வைப் பற்றித்தான் பேசுகின்றன.

இவ்வுலகில் மிக முக்கியமானவை — அடிப்படை யானவை உயிர்களே. உயிர்களில்லையெனில் உலகில்லை.

இத்தகு முதன்மை வாய்ந்த உயிர்கள் பற்றிப் பேசாத இலக்கியங்களே கிடையாது. இவ்வுயிர்களைத் தாங்கு கின்றவைகளே அல்லது அவ்வுயிரைக் கொள்ளும் பாத்திரங்களே உடல்கள். உயிருடைய அவ்வுடல்கள் வாழ்வதற்குரிய இடமாக இவ்வுலகம் அமைகின்றது. இவ்வுயிரைத் தோற்றுவித்து அதனை இயக்குநிலையில் ஒருபொருள் அமைகின்றது; அதனையே இயற்கை, இறையெனப் பல பெயர்களால் சுட்டுகிறோம். அடிப் படையை நன்கு ஆழ்ந்து நோக்கினல், உலகு, உடல், உயிர், இறை இவற்றுள்தான் வாழ்க்கை அமைந் துள்ளது என்பது தெளியும். எனவே இவற்றைப் பற்றிப் பேசும் பாடல்கள், வாழ்க்கை பற்றிப் பேசும் பாடல் களே எனின் அது பிழையாகாது. ‘இலக்கியம், வாழ்க் கையின் எதிரொலி; சமுதாயத்தின் வளர்ச்சியைக் காட்டும் மைல் கல்; மனித இலட்சியத்தின் உயிர்நாடி’ என்பது இலக்கியம் பற்றிய பொதுக் கருத்து, அத் தகைய வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் இலக்கியமே தாயர் பாடல்கள். இதன்கண் அமைந்த சில இலக்கியக் கூறுகளை இவண் காண்போம்,

தாயரின் பாடல்களில் கற்பனை மிகுதியாகப் பயின்றளது எனக் கூறுவதற்கில்லை. ஆயினும் அவர் கையாளும் சில வருணனைகள் உவமைகள் கற்பனை நயத்துடன் காட்சியளிக்கின்றன.

கற்பனை :

இவ்வுலகம் ஐந்து பூதங்களாலாவது; நிலம், நீர், தீ, வளி, வான் என்பன அவை. இதுபற்றிக் கருத்து வேறுபாடோ ஐயமோ இருக்காது. நம் உடலும் இவ் வைம்பூதத்தால் அமைந்ததுவே. அடியார்க்கு நல்லார் அரங்கேற்றுக் காதையுரையில் மிடற்றை விளக்கும் போதும் இவ்வெண்ணம் தெரிகின்றது, ஆகவே, இவ் வுடலே ஒரு சிறு உலகம்தான், இவ்வுடலாகிய உல கத்தைப் பார்த்தால் பெரிய கடல்நீர் போன்ற பேரளவி

லிருந்து ஓர் உழக்கு முகந்து எடுத்து வைத்ததுபோல் இருக்கின்றதாம். சிறு உலகமாகிய இச்சிறு வீட்டில் ஒன்பது வாயில்கள் இருப்பது அனைவரும் அறிந்ததே. சலிக்கும் இச்சிற்றில், தேரை ஒத்து அமைகின்றது, முப்புர மெரிக்கச் சிவனார் நிலத்தைத் தேராகக் கொண்டமைபோல், காமன் காம விழா நிகழ்த்த நிலம் — அதாவது மண்ணுலாகிய இம் மெய்யே தேராகக் கொள்ளப்படுகின்றது. இங்கு ' மதவேளாக அமைவது ' நான் ' எனும் ஆணவமே. என்புத் தசைப்பொதி வால் அழகுருக் கொண்டவித்தேரை, விழவுக் கிழுத்துச் செல்லக் கயிறாக அமைவன நரம்புகள். ' புறவழகுடைய இவ்வுடல் வெண்ணீரும் செந்நீரும் கண்ணீரும் மலநீரும் புண்ணீரும் பொருந்திய இயல்பால் இறைச்சித் துருத்தி யாகத்தான் அமைகின்றது. அதோடு பிறவிக்கு வித்தாக அமைகின்ற கருவுக்குப், பிறவினை தீர்க்க அளிக்கப்பட்ட உடலெனு நிலையில் (கரு) மருந்திற்குக் கூட்டாக அமைகின்றது இவ்வுடம்பு. ஊனுண்போர் வயிற்றைப் புள்ளுக்கும் விலங்குக்கும் காடாகக் கூறுகின்றார் நாலடியார் (நாலடி - 121), தாயர், விடக்குத் துருத்தியாம் உடம்பைச் சுடுகாடாகவும் அதையே நிலைக்களமாக — நிலமாகக் கொண்டு வளர்கின்ற வேட்கை மரம், முளையிலே கிள்ளாததால் முதிர்ந்து வெட்ட வெட்ட அழியாது மீண்டும் தளிர்க்கின்றமையையும் கற்பனை நயம்பட எடுத்து மொழிகின்றார். வெட்ட வெட்ட தளிர்க்கும் மரம் போன்றன ஆசைகள். அவை அடக்க வடக்கப் பெருகி எழுகின்றன. இத்தகு பொய்யான வுடம்பை மெய்யெனக் கருதுநிலை பொருந்துமா ? இவைகளைச் செலுத்துகின்ற பேரறிவே-மூதறிவே உண்மையென உணராமல் அமைதல் ஏற்புடைத்தோ ? எனக் கேட்கின்றார்.

இலக்கியம் மிகச் சிறந்த கலை. இருப்பதை அவ்வாறே கூறுவது நிழற்படம் போன்ற நிலை (Photographic). இதில் இருப்பதையே தரமுடியும். அதைச் சிறு நிலை

யில் செவ்வைப்படுத்தலாம் என்பது உண்மையே அதையே இன்னும் தம் விருப்பம்போல் சிலைவடிவில் அமைக்க நினைக்கின்றனர். அஃது அடுத்த நிலை. அதனையே நாம் ஓவியமாக்கும்போது நினைக்கின்ற, விரும்புகின்ற சிறப்புக்கள் அனைத்தையும் இணைத்துவிட முடியும். அதுவே சிறந்த நிலை யெனக் கூறலாம். சில இலக்கியங்கள் இருப்பதை அவ்வாறே கூறுகின்றன; இன்றையக் கவிதை போன்று. மாதவிக்குச் சிலை பூம்புகாரில் இப்போது வடித்தது போன்ற அடுத்த நிலையில் சங்க இலக்கியங்களை அடக்கலாம். ஓவியநிலை கம்பன் காவியம் போன்றது. காவியங்கள் இலக்கிய ஓவியங்களாக அமையுநிலையே மிகச் சிறந்தநிலை. இத்தகு நிலையினது தாயரின் மேற்கூறிய கற்பனை.

திக்கனைத்திலும் ஐம்பூதங்களின் ஆட்சி நிலவுகின்றது. அதனை மனிதன் ஆள முயல்கின்றான். பூதங்களின் இணைவாலான தன்னையே அவனால் அடக்க வியலவில்லை. கடலில் அலையாரவாரம்; உணர்ச்சிகள் கொந்தளிக் கின்றன. திடீரென நெருப்புப் பற்றி வருகின்றது; சினத்தீ எழுகின்றது. நில நடுக்கத்தால் ஜப்பான் காஷ்மீர் போன்ற பல பகுதிகளில் பலர் மடிவதைக் கேட்கின்றோம்; மன நடுக்கம் மனிதனின் உறுதியைக் குலைத்து விட்டு அவனைக் கோழையாக்குகின்றது. பெரும் புயல் சுழன்றடிக்கின்றது — அழிவுகள் பல்கு கின்றன; மனம் சூறுவளிபோல் அடக்குவாரின்றி அவனை அலைக்கழிக்கின்றது. இவ்வாறு பூதப் பண்புகளை வெளியிடும் இப் பூவுடல் பொய்; அஃது உண்மை யாகாது; அழிந்துவிடும். அழியாது, அடிப்படையாக அமைவன உண்மை, அறிவு, இன்பம், இவைகளின் முதிர்ச்சியான இறைவன் என்பனவே. இவ்வுடல் அவ்வுண்மையினை உணர, உயிரைத் தாங்கித் துணை புரிகின்றது. அதற்கு மட்டுமே இவ்வுடலைப் பயன் படுத்தலாமே தவிர, உண்மை யெனக் கருதவியலுமா என்பது அவர் கேள்வி.

அறிவியல் கூடம் உள்ளது. அங்கு ஆய்வு செய்கின்றோம். அவ் வாய்வால் உலகம் நன்மை பெறுகின்றது. அவ்வாய்வுதான் முக்கியமே தவிர அக்கட்டிடம் முக்கியமல்ல; நல்ல சுவையான உணவுப் பொருள் பாயாசம். அதை ஒரு பாத்திரத்தில் வைக்கின்றோம். அப்பாத்திரம் அப்பொருளை வைப்பதற்கு மட்டுமே உரியது. பாத்திரம் முக்கியமல்ல. பொருள் தான் முக்கியம். பாத்திரத்தை உண்ண முடியாது. பொருளைத்தானே உண்ண முடியும். ஆயின் அப்பொருள் வைக்கின்ற பாத்திரத்தை அழகாகவும் தூய்மையாகவும் வைக்காவிடின், வைத்த பொருளும் கெட்டுப் போகும். நம் உயிராகிய நற் பொருளை இவ்வுடம்பாகிய பாத்திரத்தில் நற்பண்புகளாம் தூய்மையோடு, அன்பாம் அழகோடு காப்பாற்றுவிடின் அப்பொருள் பயனின்றி, பயன் கொள்ளவியலாது கெட்டுப் போகும். பாடலை முழுதும் பார்ப்போம்:

குடக்கொடு குணக்காதி திக்கினை உழக்கூடு
கொள்ளல் போல் ஐந்து பூதங்
கூடும் சுருங்கிலைச் சாலேகம் ஒன்பது
குலாவு நடை மனையை நாறும்
வடக்கயிறு வெள் நரம்பா லென்பு தசையினால்
மதவேள் விழா நடத்த
வைக்கின்ற கைத்தேரை வெந்நீர் செந்நீர் கணீர்
மலநீர் புண் நீரிறைக்கும்
விடக்குத் துருத்தியைக் கருமருந்துக் கூட்டை
வெட்ட வெட்டத் தளிர்க்கும்
வேட்கை மரம் உறுகின்ற சுடுகாட்டை முடிவிலே
மெய்போலிருந்து பொய்யாஞ்
சடக்கைச் சடக்கெனச் சதமென்ற சின்மயந்
தானாகிநிற்ப தென்றோ
சர்வபரி பூரண அகண்டதத் துவமான
சச்சிதா னந்த சிவமே

பிறவியைக் கடல் போன்றும், அதினின்று கரை யேறுவதை வாழ்வின் இறுதி நோக்கமாகவும், வள்ளுவர் முதல் இக்காலத்தார் வரைப் பலர் கூறி வரு

கின்றனர். வாழ்க்கையே கடல்போன்று பரந்து ஆழ மானது தானே. வாழ்க்கைப் பிணைப்பாக அமையும் அன்பையும் இவ்வாறே விளக்குகின்றது குறுந்தொகை. தான் காணும் பொருளைக் கொண்டுதான் கவிஞன் கருத்துக்களுக்கு விளக்கம் தேடுகின்றான்; விளக்கு கின்றான். அவன் பார்க்கின்ற கோணம், பார்வை முழுப் பார்வையாகக் கற்பனை நயம்பட அமைவதால் அது சிறக்கின்றது; அவன் கவிஞனாகிறான்.

பல்வகைப் பிறவிகள் உள. எப்பிறவியாயினும் அது இருட்கடலாக அமைகின்றது. இருட்டில் கடலில் பயணம் செய்வது போன்றது வாழ்க்கை. அறிவாகிய கைத்தோணியைக் கொண்டு அக் கடலைக் கடக்க முயல்கின்றான். சிற்றறிவு, இவன் அறிவு; எனவேதான் கைத்தோணி என்றார் தாயர். பேரறிவு, இறைவன் நிலை; அதனால்தான் 'வாலறிவன்' எனப் பேசு கின்றார் வள்ளுவர். இறைவன் தாளிணையைப் புணை யாகப் பற்றாது, அறிவைத் துணைக்கொண்டு கடக்க முயலும்போது, 'நான்' 'எனது' என்ற ஆணவச் செருக்காகிய சுறுமீனால் அலைக்கழிக்கப் படுகின்றான். இச் செருக்கை அறுப்பவனே வானோர் உலகம் புகுவான் என்பது வள்ளுவம். இன்றும் மலையாளத்தில், ஒரு வரைப் பற்றிக் கேட்கும் போது 'இத்தேகம் யாராணு?' என்றுதான் வினவுகின்றார்கள். அதினுள் பெரிய தத்துவம் அடங்கியிருப்பதை நான் அடிக்கடி நினைப் பேன். கடலலைபோல் ஒன்றிற்குப் பின் ஒன்றாகப் பல வினைகளை மனிதன் செய்து கொண்டிருக்கிறான். அலை யலையாகப் பெருகி வரும் இவ் வினைகள் அவனை அலைக் கின்றன; அலைக்கழிக்கின்றன. இதனைக் கருதித்தான் 'சும்மா இருப்பதே சுகம்' எனப் பேசினார் தாயர். அலையெழும் அக்கடலில் புயல் காற்று வேறு வீசித் தோணியைக் கவிழ்க்க முயல்கின்றது, மடந்தையர் மயலாகிய சுழல்காற்று அமைதியான வாழ்க்கையைக் கவிழ்க்கும் சூறாவளியே. சீரான காற்றில் நேராகச்

சென்ற சிற்றறிவுத் தோணி திசை திரும்பிச் சுழல்கின்றது. இத்தனைத் துன்பங்கள் போதாது என்பது போல் ஆசைக் கான்யாறும் வான்நதி சுரத்தல்போல் ஓயாது சுரந்து வாழ்வுக் கடலில் கலந்து கலக்குகின்றது; தோணி அலைகின்றது. இந்நிலையில் தோணியைச் செலுத்தும் மூதறிவும் தம்மைக் கைவிட, அதனால் மதி மயங்க வாடுகின்றார். உதவியற்ற அந்நிலையில் பெருந் துன்பமாகக் கடற்கொள்ளைக் காரர்களாம் காலர் (இறப்பு) அத்தோணியைக் கவிழ்க்கப்—பாழாக்க வருவர் என்ற அச்சத்தால் கண்ணீர் சோர ஏங்குகின்றார்; முத்தியாம் முழு நிலைக் கரையை அடைய நீ கருணை செய்யவேண்டுமென்று இறைவனைக் கேட்கின்றார். அதுவும், தம் சித்தத்தில் உறைகின்ற அறிவான தெய்வத்தையே வேண்டுகின்றார். கடல் — பிறவி, அலை — வினை போன்ற கற்பனைகள் பழமையானவையேயாயினும் அவற்றைத் தாயர் தொகுத்துக் கூறும் நயத்திலும் ஓசையிலும் தனியின்பத்தைப் பெறுகிறோம்.

இப்பிறவி என்னுமோர் இருட்கடலில் மூழ்கிநான்
என்னுமொரு மகரவாய்ப் பட்டு
இருவினை எனுந்திரையின் எற்றுண்டு புற்புதம்
எனக்கொங்கை வரிசை காட்டுத்
துப்பிதழ் மடந்தையர் மயற்கண்ட சண்டமாருதச்
சுழல் வந்து வந்தடிப்பச்
சோராத ஆசையால் கானாறு வான்நதி
சுரந்தென மேலும் ஆர்ப்பக்
கைப்பரிசுக் காரர்போல் அறிவான வங்கமும்
கைவிட்டு மதிமயங்கிக்
கள்ள வங்கக் காலர் வருவரென் றஞ்சியே
கண்ணருவி காட்டும் எளியேன்
செப்பரிய முத்தியாங் கரைசேர வுங்கருணை
செய்வையோ சத்தாகி என்
சித்தமிசை குடிகொண்ட அறிவான தெய்வமே
தேசோம யானந் தமே. —தேசோ : 2

இங்கு மணிவாசகரின் திருச்சதகப் பாட்டு நம் நினைவுக்கு வருகின்றது (திருச்சதகம். 27)

எப்போதுமே துன்பம் வரும்போதுதான் மனிதன் இறைவனை மிகுதியும் நினைக்கின்றான்; நாடுகின்றான். தானே தனக்குப் பகையாக அமைந்து துன்புற்றபோது வேறு வழியில் விடுதலை இல்லையென உணரும்போது இறைவனைத் தேடுகின்றான்.

மனிதனுக்கு உட்பகையாக அமைந்து, அவன் அடக்க அடக்க மீறி எழுவன புலனுணர்வுகள். அவன் நல்லறிவு எவற்றை வேண்டாமென நீக்குகின்றதோ - நீக்கக் கூறுகின்றதோ அதனைக் கேளாது அவை செயல் படுகின்றன. ஐம்பொறிகள் வாயிலாக இவை, இவ் வுணர்வுகளாம் வேடர்கள் உள் நுழைந்து, உட்பகை உருவாக்குவதோடு நின்றுவிடாது, தம் சேர்க்கையால் நன்மனத்தையும் தீயதாக்கித் தீமை விளைக்கின்றன; மனத்தைக் காமத்தீயில் வெந்து கருகச் செய்கின்றன; உடலை உயிரோடு உண்கின்றன. இந்நிலையில் உட் பகையை அழிக்க வியலாத சிந்தை - அறிவு நைந்து உருகி இறைவனிடம் முறையிடுகின்றது; தாயில்லாச் சேய்போல் அலைந்து, அலைப்பட்ட தன்னைத் தாயினும் கருணை காட்டி மீட்கும்படி வேண்டுகின்றது. அறிவை யும், பேரறிவாம் இறைவனையும் துணைக் கொள்ளாது புலன்வழிச் சென்று காமத் தீயில் கருகும் மனித வாழ்வும், அதன் இழிநிலையும், ஈடேறவேண்டிய தேவை யும், அதற்குரிய வழியும் கற்பனை நயம்படத் தரப் படுகின்றது :

வாயிலோ ரைந்திற் புலனெனும் வேடர்
வந் தெனையீர்த்து வெங்காமத்
தீயிலே வெதுப்பி யுயிரொடு தின்னச்
சிந்தைநைந் துருகிமெய்ம் மறந்து
தாயிலாச் சேய்போ லலைந்தலைப் பட்டேன்
றாயினுங் கருணையா மன்றுள்
நாயக மாகி யொளிவிடு மணியே
நாதனே ஞானவா ரிதியே —சிவன் : 5

மனத்தை மாசுறச் செய்யும் இத்தகு புலனுணர்வின் இழிநிலைகளைப் பல்லிடத்தில் தாயர் எடுத்துக் காட்டு கின்றார். இந்நிலைக்கு ஒருவரை வீழச் செய்யும் பொருட் பெண்டிரின் தன்மையைச் - செயலைச் கற்பனை நயம் படச் சுட்டுகின்றார்.

நெஞ்சம், பறவை போன்றது; சுதந்திரப் பறவை. உடலாகிய கூட்டிற்குள் அஃது எப்போதும் கட்டுண் டிருப்பதில்லை. எண்ணச் சிறகுகளை விரித்து எதிர்ப்புக் களாம் எதிர்க் காற்றைப் பொருட்படுத்தாது, தன் திண்மை இழக்காது மேலே மேலே செல்கின்றது; உயிரின் உயர்நிலையில் இறைவன் பாதப்படிகளைப் பற்ற வெண்ணி முன்னேறுகின்றது. அந் நேரத்தில் அதற்குத் தன்னிலை பற்றிய இறுமாப்பு எழுகின்றது. சரி, நாம் கடந்து வந்த தூரம்தான் என்ன; பறந்து வந்த உயரம் தான் எத்துணை எனப் பார்க்க விழைகின்றது. திரும்பிப் பார்க்கின்றது; கீழ்நோக்கி நோட்டம் விடுகின்றது, பெருமையோடு. அங்கே, நிலத்தில் பல காத தூரங்கட்கு அப்புறம் அதன் கண்களையும் கருத்தை யும் கவருநிலையில் ஒரு கவின் காடு தென்படுகிறது. காட்டின் பசுமையில் பார்வை சிக்க, அங்குக் கிடைக்க கூடிய கனிகளில் கருத்துச் செல்ல, அவற்றின் இனிமை யில் ஊற நா நினைக்க, வேகம் குறைகிறது; குறிக் கோளை நோக்கிச் சென்ற திண்மை குலைகிறது; உயர்வு நீங்கிக் கீழ்நோக்கி வருகின்றது; காட்டை அடைகின்றது. ஆனால், அந்தோ? அது விரும்பிய கனியோ - விழைந்த இனிமையோ கிடைக்கவில்லை; மறைந்திருந்த கண்ணியில் மாட்டிக் கொள்கின்றது.

> திண்ணியநெஞ் சப்பறவை சிக்கக் குழற்காட்டிற்
> கண்ணி வைப்போர் மாயம்.........எந்நாள் —மாதரை: 2.

இதே கருத்தை மற்றொரு பாடலிலும் பிறிதோர் கற்பனையில் நயம்படப் படைக்கின்றார் தாயர்:

காமத்தைக் கள்ளோடு ஒப்பிடுவது மரபு. ஆரா வன்பு எனும் உயர் பொருள் நிலையில் காமத்தைக் கள்ளினுஞ் சிறந்ததாகக் காட்டினுர் வள்ளுவர். காம வேட்கையை மதுவாகத் - தீதுபயக்கும் கள்ளாகக் கண்டார் தாயர். ஒரு கட்கடை (கள் - கடை); அக் கடையைச் சூழ்ந்து நிற்கின்றனர் கள்ளுண்ண விரும்பும் மக்கள். அவர்கட்கு அக்கடையில் ஊழியம் செய்யும் தொண்டியர் மதுவை மொண்டு மொண்டு கொடுக் கின்றனர். கொடுக்கும்போதே, மதுவால் மயங்குமுன் தம் மொழியால் மங்குவதற்குப் போலும் இன்மொழி கள் பேசுகின்றனர். குழைந்து குழைந்து பேசும் அவர்களின் குளறல்கள், அவர்களே மதி (மது) மயங்கி யுள்ளனரோ என எண்ணச் செய்யலாம். பேச்சின் தன்மையாலும், கொஞ்சும் இனிமையாலும் கண்ணின் கடைப்பகுதி (கட்கடை—கண் கடை, கடைவிழி) வெளி யிடும் அன்புணர்வாலும், தன்னை நீங்காது சுழல் வோர்க்கு வேட்கையை மொண்டளிக்கும் பொருட் பெண்டிரின் காட்சி இத்தகு கற்பனையொன்றைக் கவிஞர்க்குத் தூண்டிற்றுப் போலும் :

> விண்டு மொழிகுளறி வேட்கைமது மொண்டுதரும்
> தொண்டியர்கள் கட்கடையிற் சுற்றுழிவது ....
>
> —எந்நாள் : மாதரை : 14

இத்தகு தொல்லைகளினின்று நீங்க, விடுதலைபெற இறைப் பூசை இன்றியமையாதது ஆகின்றது; சாதாரண பூசை யன்று; சதா காலப் பூசை. துட்ட தேவதையை நீக்க வேண்டும்; அதற்குப் பலி கொடுத்து விடக் கூடாது. சாந்த தேவதைக்கே மறியைப் பலியிட்டுக் கொடுக்க வேண்டும் பலிக்கு மறி தவிர அபிடேக நீர் வேண்டும்; நைவேத்தியம் வேண்டும்; தூபம் தேவை; தீபம் தேவை. புறப் பூசையில் இப் படி நிலைகளைப் பார்க்கும்போது அகப் பூசையின் தேவையைத் தாயர் கருதினுர் போலும். மனமே

பலியாக, கர்மம் விலக்கப் படவேண்டிய துட்ட தேவதையாக, இறைவனே சாந்த தேவதையாக, அன்பே அபிடேக நீராக, ஆவியே நைவேத்தியமாக, ப்ராணன் தூபமும் மதி தீபமுமாக, சதாகால பூசை — அகப் பூசை நிகழுநிலையிற் தாயர் நயம்படத் தருகின்றார்.

துள்ளுமறி யாமனது பலிகொடுத் தேன்கர்ம
துட்டதே வதைக ளில்லை
துரியநிலை சாந்ததே வதையா முனக்கே
தொழும்பனன் பபிடேக நீர்
உள்ளுறையி லென்னுவி நைவேத்தியம் ப்ராண
னேங்குமதி தூப தீப
மொருகால மன்றிது சதாகால பூசையா
வொப்புவித் தேன்............ —கருணை : 28

உவமைகள் :

உவமையோடு இணைந்து வரும் இக் கற்பனைகள் தாயரின் கவியாற்றலுக்குச் சான்று பகர்கின்றன. உவமைகளைக் கையாள்வதிலும் இவர் கைவண்ணம் தெரிகிறது.

இலக்கியம், படித்தவர் மட்டும் படிப்பதாக இருந்தால் எல்லோரும் பயனடைய முடியாது ; கற்றோரே பயன் பெறுவர். தம் கருத்துக்களைப் பொது மக்களும் எளிய நிலையில் புரிந்து கொள்வதற்கு என அவர் கூறும் உவமைகளும் பழமொழிகளும் எண்ணத்தக்கன. படிப்பவர், கேட்பவர் மனங்களில் கருத்துக்கள் பசுமரத்தாணி போல் பதிவதற்கு உவமைகள் சிறப்பாகப் பயன்படுகின்றன.

இலக்கியத்திற்கு மிக இன்றியமையாதது உவமை. உவமையிலிருந்துதான் ஏனைய அணிகளெல்லாம் தோன்றியுள்ளன. அதனால்தான் தொல்காப்பியம், தமிழரின் இலக்கியக் கொள்கை கூறும் பொருளதி

காரத்தில், உவமவியலே வைத்துள்ளது. பின்பு தண்டியிலிருந்து தனி அலங்கார இலக்கண நூற்கள் வளர்ந்தன. நுண்மையான செய்திகளைத் தெளிவுபடுத்த உவமைகள் பயன்படுகின்றன. நாம் தினந்தோறும் காண்கின்ற பொருள்களையே வைத்துத் தொடர்பு படுத்திக் காட்டும் போது, நாம் எளிதில் கருத்துக்களைப் புரிந்து கொள்ள முடிகின்றது. உழவுத் தொழில் நாம் அனைவரும் அறிந்த ஒன்று. நல்ல நிலம் வேண்டும்; நிலத்தைப் பக்குவப் படுத்திச் செந்நிலமாக்கல் தேவை; நன்னிலத்தில் நற்பயன் விளைய உயர்ந்த விதை வகையை விதைக்க வேண்டும்; அதோடு அமைந்து விட்டால் போதாது. நீர்ப் பாய்ச்ச வேண்டும்; எருவிடல் வேண்டும்; வேலியிட்டுப் பறவைகளால் தீமை வராது காத்தால் பயிர் வளரும்; முதிரும் போது நாம் பயன் துய்ப்போம். இத் தொடருவமையைப் பலரும் கையாண்டுள்ளனர். நாவுக்கரசர் பாடல் இங்கு நினைக்கத் தக்கது அது உலக மக்கள் அனைவருக்கும் பயன்படும் பொதுநிலைப் பாடல்.

> மெய்ம்மையாம் உழவைச் செய்து
> விருப்பெனும் வித்தை வித்திப்
> பொய்ம்மையாம் களையை வாங்கிப்
> பொறையெனும் நீரைப் பாய்ச்சி
> தம்மையுள் நோக்கிக் கண்டு
> தகவெனும் வேலி யிட்டுச்
> செம்மையுள் நிற்ப ராகில்
> சிவகதி (நற்கதி) விளையு மன்றே.

என்பது அப்பாடல். இங்கு 'சிவகதி' என்பதை விரும்பாதோர், 'நற்கதி' பெய்து பாடலைப் பொது நிலையாக்கிவிடலாம். மெய்ம்மை உண்மை வாய்மை இவைகளை விளக்குவது தேவையில்லை. இவை, வேறுபட்ட பொருள் உடையன. மெய்ம்மையாகிய நல் நெஞ்சக் களத்தில் அன்பாகிய விருப்ப விதையை விதைத்து, பொய்ம்மை எனும் களைகளைக் களைந்து, பொறுமை எனும் நீர்ப் பாய்ச்சிப் பயிரை வளர்க்கும்

போது தம்மைக் காணுதல் நிகழும் ; நடுவு நிலையாகிய வேலி அமைத்துக் காத்தால் நற்கதி விளையும். இதே போன்ற உழவு உவமையைத் தாயர் எவ்வாறு பயன் படுத்தியுள்ளார் எனக் காண்போம்.

மலையோடு சார்ந்த பெருங்காடு, அதுவும் இருள் பொருந்திய காடு. அக்காட்டை நன்செய் யாக்க முதலில் அடர்ந்து செறிந்த மரங்களை வெட்டி அப்புறப் படுத்தல் வேண்டும் ; பின் அங்குள்ள கற்களைப் பிளந்து நீக்கிச் செவ்வைப் படுத்த வேண்டும். திருத்திய நிலத் தில் நல்விதை விதைக்கப்படுகின்றது. சிறுமுளையாகத் தோன்றிய அப் பயிருக்கு நீரும், வளமும் வளரும் வரைப் பறவை விலங்குகளிடமிருந்து பாதுகாப்பும் அளிக்கப்படுகிறது. பயிரை அழிக்கும் பூச்சிகள் விழாத வாறு காக்கப்படுகின்றது. நல்ல விளைச்சல் கிடைக் கின்றது. இவ்வாறு காத்ததால், விளைந்த போகத்தை உணர்ந்த அன்பர் கூட்டத்தோடு எப்போதும் இருக் கும் நிலையை நீ தந்தால், அதுவே எனக்கு இன்பமாக அமையும் எனப் பேசுகின்றார் தாயர்,

இங்கு மனம் - நெஞ்சம்தான் நிலம். அந் நெஞ்சத் தில் செம்பினில் களிம்புபோல் மண்டிக் கிடக்கின்றது ஆணவப் பெருங்காடு. அதன் மிகுதியும் செறிவும் நெஞ்சை இருளாக்கிவிடுகின்றன. எதற்கெடுத்தாலும் ‘ நான் ’ ‘ நான் ’ என்பதே ஆணவ நிலை. அக்காட்டை வேரறு நிலையில் அறவே களைதல் வேண்டும். அகங்கார மாகிய - அகக் காரணமாகிய கற்கள் உடைத் தெறியப் படல் வேண்டும். இவ்வாறு நெஞ்சத்தை செவ்வை யாக்கி, சமமாக்கி, வெளியாக்கிப் பின்பு மௌனமாகிய விதையை விதைக்க வேண்டும். உலக உயிர்கள் அனைத் திடமும் அம்மோன நிலையிலும் அன்பைச் செலுத்து மளவில் அன்பு நீரைப் பாய்ச்சுதல் வேண்டும். இதற் கிடையே அம்மோனப் பயிர் வளராத வண்ணம் தடுக் கின்ற மாமாயை யாகிய இவ்வுலக மயக்கம், மெய்ம்மை

விளையா வண்ணம் செய்கின்ற மயக்க மெனும் பறவை என்பன வற்றிடமிருந்து அதனைக் காத்தல் வேண்டும். அவ்வாறு காத்தால் அதினின்று இன்ப நுகர்வாகிய பயனைப் பெற முடியும்; இது போன்றே மோனப் பயிர் வளர்த்த அன்பர் கூட்டத்திடையே வாழ முடியும். இவ்வுவமைச் செறிவுடைய பாடலைத் தற்போது பார்ப்போம்.

காராரும் ஆணவக் காட்டைக் களைத்தறக்
கண்டு அகங்கார மென்னும்
கல்லைப் பிளந்து நெஞ்சகமான பூமிவெளி
காணத் திருத்தி மேன்மேல்
பாராதி யறியாத மோனமாம் வித்தைப்
பதித்தன்பு நீரா கவே
பாய்ச்சியது பயிராகு மட்டுமா மாயைவன்
பறவையணு காத வண்ணம்
நேராக நின்றுவிளை போகம் புசித்துய்ந்த
நின்னன்பர் கூட்ட மெய்த
நினைவின் படிக்குநீ முன்னின்று காப்பதே
நின்னருட் பார மென்றும்
ஆராரும் அறியாத சூதான வெளியில் வெளி
யாகின்ற துரிய மயமே
அண்டபகி ரண்டமும் அடங்கவொரு நிறைவாகி
ஆநந்த மான பரமே.

இத்தகு இன்கருத்துக்களை, நுண்மையான கருத்துக்களைப் பருப் பொருளை வைத்து விளக்கும் போது தெளிவு கிடைக்கின்றது. இனிமை பயக்கின்றது; தாயரின் கைவண்ணமும் கவியாற்றலும் உவமை யாட்சியும் தெளிகின்றன.

ஆவணம், கன்மம், மாயைகளால் அலைக்கழியும் இவ்வாருயிர் அறியாமை, இருள், மறப்பு, துன்பம் போன்ற பல் தன்மைகளை யுடையது. பேரறிவாகிய இறைவன், அறிவு, ஒளி, நினைவு, இன்பம் இவற்றை நிலையாகக் கொண்டுள்ளான்.* முழு அறிவு, முழு

* திரு. வி. க. - தாயுமானூரும் கடவுட் காட்சியும்

ஒளி, முழு நினைவு, முழு இன்பம் என எல்லா வற்றிலும் முழுமை தர, எல்லா நிலையிலும் முழுநிலை பெற்ற முழு முதலாலேயே இயலும். ஆகவேதான் இறைவனைப் பேரறிவு, பேரொளி, பேரின்பம் போன்ற பல பெயர்களால் அழைக்கின்றோம். உயிர் அல்லது ஆன்மா இறைவனோடு இணையும் இணைப்பை இரண்டு உவமைகளால் சாதாரண மக்களும் புரிந்து கொள்ளக் கூடிய நிலையில் கூறுகின்றார் தாயர்; அதனையும் அறி யாமையால் செய்வதாகவே கூறுகின்றார்.

குறிஞ்சி நிலத்தில் வேடன் யானையை விரட்டுகிறான். அது அவன் கண்ணிற்கு மறைந்து விடுகிறது. அவன் பின்னும் தேடுகின்றான்; ஒரு குடம் அகப்படுகின்றது. யானை குடத்தினுள் அடங்க இயலாதென உணர வியலாது, அதனை அதனுள் எதிர்பார்த்துக் கையைக் குடத்துள் விட்டுத் துழாவுகின்றானும். அதுபோன்று இருக்கிறது என் அறியாமை; நான், ஆணவம் மாயை வினை போன்ற கூட்டுக்களால் அறியாமையில் மூழ்கிக் கிடக்கின்றேன். அவ்வறியாமை நீங்கித் தீயில் மறைந்த கர்ப்பூரம் போன்றும், நீரில் கரைந்த உப்பைப் போன் றும் இரண்டும் ஒன்றாகும் ஐக்கிய நிலையை விரும்பி நிற்கின்றேன் எனப் பேசுகின்றார்:

ஒருவனவன் யானைகெடக் குடத்துட் செங்கை
ஓட்டுதல்போல் நான்பேதை அப்போ டுப்பை
மருவவிட்டுங் கர்ப்பூர மதனில் தீபம்
வயங்க விட்டும் ஐக்கியம் உன்னி வருந்தா நிற்பேன்
அருளுடைப பரமென்றே அன்று தானே
யானுள னென்றும் எனக்கு ஆணவாதி
பெருகுவினைக் கட்டென்னும் என்னுற் கட்டிப்
பேசியதன்றோ அருள்நூல் பேசிற் றன்றே.

இறையுயிர்க் கலப்புக்கு இதே உவமையைப் பல்லிடங் களில் பயன்படுத்துவது தாயர் இயல்பு.

செப்பரிய தண்கருணை சிற்குகனுர் பூரணத்தில்
அப்பினிடை உப்பாய் அணையும்நாள் எந்நாளோ
தீதனையாக் கற்பூர தீபமென நான் கண்ட
சோதியுடன் ஒன்றித் துரிசறுநாள் எந்நாளோ.

இத்தகைய மிக எளிய உவமைகள் பலவற்ருல் தம் கருத்துக்களை, நுண் பொருண்மைகளை விளக்குந் தாயரின் திறம் எண்ணி இன்புறத் தக்கது. தொட்ட விடமெல்லாம் தட்டுப்படும் உவமைக் குவியல்களால் அவர் பாடல்கள் கவினுற்றுக் காணப்படுகின்றன.

எந்தவொரு பொருளைப் பாட ஆரம்பித்தாலும் உவமையழகு மிளிர விளங்குகின்ருர் தாயர். உலக வழக்கில் இருக்கின்ற, தினசரி காணுகின்ற பொருட் களைக் கொண்டு செய்திகளைத் தெளிவிப்பது நெஞ்சிருக் கும் வரை நினைவிருக்கும் வகையில் அமைந்துள்ளது.

இறைவன், மாசற்ற அன்பர் நெஞ்சில் மாணிக்க மாக வாழ்கின்ருன். ஒளி வீசும் மணியாகிய அவனுக்கு, அவனைப் பெருமையோடு வைத்துக் கொள்ளும் ஒரு பேழை நெஞ்சம் - மாசற்ற அன்பு நெஞ்சம் வேண்டும்;

மாசற்ற அன்பர் நெஞ்சே மாருத பெட்டகமாத்
தேசுற்ற மாமணிநின் தேசினையும் காண்பேனே.

பேறுபெறுநிலையில் பேழையாக மாறும் நெஞ்சத்தின் பாழ்த்த நிலைகளை, நினைவுகளை பல்நிலையில் விளக்கு கின்ருர் தாயர். பரம சுகநிட்டைபெருத மனம் சஞ்சலப்படுகின்றது. அதன் சஞ்சலத்தைப் பாதரசம் அனுபவிக்கும் சலனமாக, அங்கென்று தங்கிநிற்கும் நிலையின்றி சிற்றசைவால் அலைக்கப்படும் அலைக் கழிப்பாகக் காணல் ஏற்புடையதே (பரிபூரண: 6) பேய்மனது (சச்சி: 17) துள்ளு மறியாமனது (கருண 8) என அடைநிலையால் உணர்த்தப்படுவதும் இத் தன் மையே. ஆசையெனும் பெருங்காற்றில் அலையும் பஞ்சு என்பதும் இத்தன்மையினையே விளக்குகின்றது:

ஆசையெனும் பெருங்காற்றூ டிலவம்பஞ்செனவு
மனதலையுங் காலம்...................... ஆசை : 1
பஞ்சாய்ப் பறக்கு நெஞ்சம் பாவியை நீ கூவியையா
அஞ்சாதே யென்றின் னருள்செயவுங் காண்பேனோ—காண்: 21

ஆதாரமற்று அலையும் இந்நிலையை வாலறுந்த பட்டமும், விரைவிழக்கும் பம்பரமும் ஆகிய மிகச் சாதாரணமாகப் பொதுக் காட்டுக்களால் விளக்குகின்றார் தாயர்.

ஒழுங்காக உருவாக்கப்பட்ட பட்டம், காற்று வீசியடிக்கும் போதும் உயர்ந்தெழுந்து மேல் நோக்கிச் செல்கின்றது. ஆயின் அதன் வால் அக் காற்றில் சிக்கி அறும்போது பட்டம் செயலிழக்கின்றது. வாலற்ற பட்டம் பறக்க வியலாது. மனம் எனும் பட்டம் 'வால்' உடையதாகத் - தூய்மை பொருந்தியதாக இருக்கும் போதுதான், இறையை நாடி உயர முடியும் ; மாயை யாகிய திரை விழும் போது தூய்மை கெடுகின்றது; வாலற்ற பட்டத்தின் நிலைக்கு இழிகின்றது. அந்நிலையில் உயிர் உயர்ந்து இறையை அடையுநிலை கிட்டாது கழிகின்றது.

வாலற்ற பட்டமென மாயா மனப்படலங்
காலற்று வீழவுமுக் கண்ணுடையாய் காண்பேனோ - காண்: 7

இப்பாடலைப் பிறிதோர் நிலையிலும் விளக்கலாம் போல் தோன்றுகின்றது. வால் பொருந்திய பட்டம் வான மண்டலத்தில் காற்றுப்பட்டு அலைகின்றது. வால் ஆகிய வினைத் தொடர்பால் ஏற்பட்ட நிலை இது. மாயை யெனும் மனத்திரையே இங்குக் காற்றாகக் கற்பிக்கப் படுகின்றது. மாயை நீங்கியதும், காற்று அற்றதும் (இல்லாது நீங்கியதும்), வாலற்ற நிலையால் பட்டம் கீழே விழுகின்றது. அதன் அலைதல் தீர்கின்றது; இறையடியை அடைகின்றது.

பட்டத்தின் அலைதல் போன்றே காற்றாடியின் சுற்றலும் பம்பரத்தின் சுழற்சியும், மனச் சுழற்சியைக் காட்டுதல் இயல்பு.

' ஆடிய கறங்குபோ லோடியுழல் சிந்தை - சித்தர் : 7 எனவும்

ஆடுங் கறங்காகி யலமந் துழன்று மனம்
வாடுமென் னையாநீ வாவெனவுங் காண்பேனே
—காண்பேனே : 22

எனவும் விரிக்கப்படுகின்றன.

இச் சுழற்சி யகல இறையையே வேண்டலியல்பு. எனவே சுழற்சி ஓய்ந்த கறங்காகச் சஞ்சலமின்றி ஓய்ந்த மனம் சித்திரிக்கப் படுகின்றது ; அந்நிலையில் கறங்கு அசையாநிலை பெறுவது போல் மனமும் இறைவனடி அடைகின்றது.

ஆடாம லோய்ந்திட்ட பம்பரம் போல்விசை
யடங்கி மனம்வீழ............ —தேசோ : 4

ஆடியோயும் மனத்தின் முன் நிலையை இதேநிலையில் பாம்பின் ஆட்டத்தோடும் உவமிக்கின்றார் தாயர்:

வாதனையோ டாடு மனப்பாம்பு மாயவொரு
போதனைதந் தையா புலப்படுத்த வேண்டாவோ
—வேண்டாவோ : 2

இதே நிலையில் குரங்கின் நிலையில்லாத் தாவலுக்கும், அது தன்னிலை யிழந்து செய்யும் அட்டூழியங்கட்கும் ஒத்தமைவது மனத்தின் தன்மைகள் — பண்புகள் என்பதும் சிறப்பிக்கப்படுகின்றன.

பொறியிற் செறியைம் புலக் கனியைப்
புந்திக் கவராற் புகுந்திழுத்து
மறுகிச் சுழலும் மனக்குரங்கு
மாள வாளா விருப்பேனே......... ஆசை : 13

எனவும் ;

பொல்லாத மாமர்க்கட மனமே யெனைப்போ லடுத்த
எல்லா வற்றையும் பற்றிக் கொண்டனையே ..— பாயப் : 49

எனவும் ;

காடுங் கரையு மனக்குரங்கு கால்விட் டோட அதன் பிறகே
ஓடுந் தொழிலாற் பயனுளதோ.... .... காடுஞ் : 1

எனவும் ;

கூறுய ஐம்பூதச் சுமையைத் தாங்கிக்
குணமிலா மனமெனும் பேய்க்குரங்கின் பின்னே
மாருத கவலையுடன் சுழல வென்னை
வைத்தனையே பரமேநின் மகிமை நன்றே (கல்லா : 4)

எனவும் ;

தாவியதோர் மர்க்கடமாந் தன்மைவிட்டே யண்ணலிடத்
தோவியம்போ னிற்கி னெனை யுள்ளுவரோ
பைங்கிளியே (பைங் : 28)

எனவும் ;

மனமான வானரக்கைம் மாலையாக் காமல்
எனையா னடிகளடி யெய்துநா ளெந்நாளோ—எந் : தத்து : 5

எனவும் பல்லிடங்களில் வருகின்றமை புலவரின் ஒரு மனப்பட்ட கருத்து விளக்கத்திற்குச் சான்று பகர்கின்றது. அஃறிணைப் பொருட்களில், உயிரற்றனவான பாதரசம், கறங்கு, பட்டம் என்பனவும் ; உயிருள்ளவையான மறி, பாம்பு, குரங்கு, யானை போன்றனவும் இவரால் பயன்படுத்தப் படுகின்றன.

வட்மிட்டொளிர் பிராணவாயுவெனு
நிகள மோடுகம னஞ்செயு
மனமெனும் பெரிய மத்த யானையை .... அகிலான்: 1

எனும் ஓரிடத்தே கட்டுப்பாடற்றலையும் மதயானை மனத்திற்கு உவமையாகி வருகின்றது.

மனவியல்பின் இத்தகு விளக்கங்கள் தனி உவமை வாயிலாகத் தரப்படுவதோடு அதன் பல் செயல்களின் படிநிலைகள் தொகுத்தளிக்கப்படலும் அருகித் தாயரிடம் காணப்படுகின்றது. எதிர்வாதம் செய்து மல்லர் போல் கூத்தாடும் அதன் இயல்பும், சூதாடுவோர் போல் வாதாடும் அதன் தன்மையும், தேள் கொட்டிய குரங்குபோல் துள்ளும் அதன் பண்பும் தொடர்ந்து வரும் முக் கண்ணிகளில் அமைக்கப்படுகின்றன:

வாதுக்கு வந்தெதிர்ந்த மல்லரைப்போற் பாழ்த்தமனம்
ஏதுக்குக் கூத்தாடு தெந்தாய் பராபரமே ;

சூதாடு வார்போற் றுவண்டு துவண்டுமனம்
வாதாடி னென்னபலன் வாய்க்கும் பராபரமே ;

கொள்ளித்தேள் கொட்டிக் குதிக்கின்ற பேய்க்குரங்காய்
கள்ளமனம் துள்ளுவதென் கண்டாய் பராபரமே
—பராபர : 180, 71, 72.

முதல் உவமை 'மனமே......வாதுக்கு வந்தெதிர்ந்த மல்லரைப்போல் வாதாடினையே' (உடல் : 5) எனப் பிறிதோரிடத்தும் வருகின்றது.

எளிதில் மாற்றவியலா இம் மனவியல்புகளாற் போலும், அவற்றின் கொள் கலமான மனம் செப்பனிடப்பட வேண்டிய பூமியாக (ஆனந் : 6), ஒரு காலத்தும் உருகாத கல்நெஞ்சாக (சுகவாரி -3), கன்னெஞ்சாக (உடல் - 40), பாதகக் கருங்கன் மனமாக (எனக்கென் ; 21) மரப் பான்மை நெஞ்சாக (ஆசை : 2) உருவாக்கப்படுகின்றது. தன் மனதின் இத்தகு இழிநிலையை - இயல்பை எண்ணி, அதை இன்னதென்று விளக்குவது என ஐயுற்றுப் போலும் சில விடங்களில் ஒரே அமைப்புடைய ஐய வுவமைகளைத் தாயர் பயன் கொள்கின்றார் :

இரும்போ கல்லோ மரமோ வென்னிதய மியாதென்
றறியேனே. — தன்னை : 3

எனவும் ;

இரும்போ கல்லோ மரமோ வென்னு நெஞ்சை
—நினைவொன் : 8

எனவும் ;

வன்னெஞ்சோ விரங்காத மரநெஞ்சோ
விருப்பு நெஞ்சோ வைரமான
கன்னெஞ்சோ வலது மண்ணுங்கட்டி நெஞ்சோ
வெனது நெஞ்சங் கருதிற் றுனே — ஆசை : 4

எனவும் ;

> இரக்கமொடு பொறையீத லறிவா சார
> மில்லேனு னல்லோர்க ளீட்டங் கண்டாற்
> கரக்குமியல் புடையேன்பாழ் நெஞ்ச மெந்தாய்
> கருந்தாதோ வல்லுருக்கோ கரிய கல்லோ
> —கல்லா : 30

உவமிக்கப்படும் நெஞ்சம், இறைத் தொடர்பு கொள் ளும் பக்குவம் பெறும்போது மென்னெஞ்சமாக மாறி விடுகின்றது, அதன் அத்தன்மையினை அனலிலிட்ட மெழுகுக்கு ஒப்பிடுகின்றுர் தாயர் :

> நீயுண்டு நின்னேச் சரண்புக நானுண் டென்னெஞ்சமையா
> தீயுண் டிருந்த மெழுகலவோ கதி சேர்வதற்கே—பாயப் : 21

> தாயினும் நல்ல தயாளுவே நின்னேயுன்னித்
> தீயின்மெழு கொத்துருகுஞ் சிந்தைவரக் காண்பேனே
> —காண் : 15

இவ் வுளப்பக்குவநிலையில் இறைக்காதல் வேண்டும் தலைவியாகப் - பிரிவுக் கஞ்சும் பேதையாக நிற்கும் தாயர், பிரிவு நேர்ந்தால் நெஞ்சம் எவ்வாறு வருந்துமோவென அலமந்து அந்நிலைக்கு இதே உவ மையை மொழிகின்றுர் :

> ஓகோ வுனேப்பிரிந்தா ருள்ளம் கனலில்வைத்த
> பாகோ மெழுகோ பகராய் பராபரமே — பராபர : 30

இத்தகு நெஞ்சகத்தில் எழும் சிந்தைகளை விளக்க வரும் தாயரின் உவமை சிந்தனைக் குரியது.

சிந்தைத் துயரென்றெரு பாவி சினந்து சினந்து போர் முயங்க (தன்னே : 7) எனவதனைப் பாவி எனக் கூறுவதோடு, அதனின்று தான் விடுபெற வேண்டு மிடத்துப் பிற உவமைகளையும் கையாளுகின்றுர். கள்ள நினைவுகளுடைய அம்மனம் (பரா : 212, 275) மாம் பழத்து வண்டுபோல் உள்ளே யிருந்து கொண்டே

உயிருக்கு ஊறுகள் செய்வதனுல் போலும் அதனே 'மனமாங் கிருமி' என்ற உவமையால் விளக்குகின்ருர் தாயர். இத்தகைய நினைவுகள் நீங்கினுல் மனம் தூய்மையடையும், உயிர் ஈடேறும் :

நீர்ப்புற் புதமாய் நினை வருட்கே நின்றழியப்
பார்ப்பதலால் வேறுமொன் றைப் பாரேன் பராபரமே ;
நீர்க்குமிழி போலென்னினைவு வெளியாய்க் கரையப்
பார்க்குமிட மெல்லாமென் பார்வை பராபரமே ;
பட்டப் பகல் போலப் பாழ்த்தசிந்தை மாளினெல்லாம்
வெட்டவெளி யாக விளங்கும் பராபரமே ;
பார்க்கினனுப் போற்கிடந்த பழஞ்சிந்தை மாளினென்னே
யார்க்குச் சரியிடலா மையா பராபரமே.
—பராபர : 203, 4; 362, 3

இத்தகு மனச் சுழற்சியைக் - கவலையில் உழலு மன நிலையை,

வாயில் கும்பம் போற் கிடந்து புரள்வேன். (ஆகார : 25)

என்கின்ருர்.

இவ்வாறு சிந்தைச் சுழற்சி கலைந்து மனம் தூயதாகி இறையுடன் கலக்கு நிலையைக் கற்பூர உண்டை தீயினில் கலந்து ஒன்ருவதற்கு இணையாகக் கருதுகின்ருர் தாயர் :

உன்னுமனங் கர்ப்பூர வுண்டைபோ லேகரைய
மின்னுமா னந்த விளக்கே பராபரமே — பரா : 259.

மனத்தையே இத்தகு பல்லுவமைகளால் விளக்கு கின்ருர் தாயர். வேறு எப்பொருளும் - பருப்பொரு ளாயினும் சரி நுண்பொருளாயினும் சரி - இதுபோல் உவமை வழி பெரு விளக்கம் பெறவில்லை என்ருல் அது பொருத்தமாகவே அமையும். மரபு வழி வந்தன வும் புதியனவும், உவமைகளாக இவரால் பயனபடுத்தப் பட்டுள்ளமையும் மேற்கண்ட பகுதிகளால் தெளிவு பெறுகின்றன.

மனதிற்கு இடமாகவும் கொள்கலமாகவும் அமைவது உடம்பு. அதனை விடக்குத் துருத்தியாகவும், கரு மருந்துக் கூடாகவும், சுடுகாடாகவும் கற்பனை நயம்பட விளக்கிய தாயர், சில உவமைகள் வாயிலாகவும் அதன் தன்மைகளை விளக்குகின்றார். மாலையாகப் பல்லுவமைகளைக் கூறி உடலின் இயல்பை விளக்குகின்றார் தாயர். தீநாற்றம் நிறைந்தது இந்த உடல். தன்னிடமிருந்தே தோன்றும் கழிவுப் பொருட்களால்-அழுக்குகளால்தான் அது இந்நிலைக்கு ஆகின்றது. உள்ளழுக்கும் உள்ளத்து அழுக்கும் வெளிப்படு நிலையில் அதற்குள் அமைந்த வாசல்கள் ஒன்பது. அந்நிலையாலும், வாயில்கள் பலவிருந்தும் சலிக்கு நிலையிலிருப்பதாலும் அது நடக்கின்ற ஒரு வீட்டை ஒத்து அமைகின்றது; உளத்தை உயர்த்திக் கொள்ளாமல் தான் மட்டும் வளரும் நிலைக்குத் தன்னைத் தாழ்த்திக் கொண்டு, உணவு உட்கொள்வதையே நோக்கமாகக் கொண்டுள்ள அதனைத் தாயர் வெறும்சோற்றுப் பையாகக் காண்டல் இயல்பே; அதோடு மட்டுமன்றி அது மும்மலமாகிய ஆணவம் கன்மம் மாயைகளைப் பல்லாண்டு காலமாக வைத்துக் காக்கும் பழம் பானையாகவும் தென்படுகின்றது; இன்னும் வேறு பல தீவியல்புகளைப் போற்றிக்கொள்வதால் அது பல்பொருட்கள் வைத்துக் காக்கும் சரக்கறையைப் பலகறையை ஒத்திருக்கின்றது. என்றும் வற்றாதோடும் ஆறுபோன்று வழியிற்படுகின்ற பொருளனைத்தையும் அழித்துவரும் பெருவெள்ளம் போன்று அமைகின்றது அவ்வுடலின் வினைகள், அது இயற்றும் செயல்கள். மனத்தைக் கிருமியாகப் பிறிதோரிடத்துச் சுட்டியவர் இங்கு, உடலைக் கிருமிகள் அடர்ந்து உழலும் சேற்றுக் குழியாகக் காட்டுகின்றார். பாடலில் உவமைச் செறிவு - உவமை அடுக்கு, உடலின் தன்மையைப் பலகோணங்களிலிருந்து விளக்குகின்றது; அதில் முழுமை அமைகின்றது :

நாற்றச் சடலத்தை யொன்பது வாச னடைமனையைச்
சோற்றுப் பசையினை மும்மல பாண்டத் தொடக் கறையை
ஆற்றுப் பெருக்கன்ன கன்மப் பெருக்கை யடர் கிருமிச்
சேற்றைத் துணையென்ற நாய்க்கு முண்டோ கதி சேர்வதுவே
—பாயப் : 18

இங்குப் பாண்டம் எனக் குறிக்கப்பட்ட இவ்வுடல், பிறவிடங்களில் தெளிவான உவமை நிலையில் உப்பிட்ட கலமெனவும் (மலைவளர் : 6), நவ வாயில் பெற்ற பசுமட் கலமெனவும் (பெரிய : 1) பேசப்படுகின்றது. அதோடு, அதுவே புன்புலால் மயிர்த்தோ னரம் பென்பு மொய்த்திடு புலைக் குடிலருவருப்பு எனவும் (சுகவாரி: 4) மும்மலச் சேறு எனவும் (எந்நாட் : யாக் : 8) சோற்றுத் துருத்தி (எந்நாட் : யாக் : 10) எனவும், உள்ளே தானூறு மலக்கேணி (ஏற் ; யாக் : 81) யெனவும் பேசப்படுகின்றது. அதன் அழிவு விரைவாக நிகழ்வதனாற் போலும் நீர்க் குமிழியும் (பைங் : 34) இந்திர ஜாலமும் (எந் : யாக : 7) அது வினைகளால் அலைக்கப் படுவதால் சுழலேறு காற்றினிடை அழலேறு பஞ்சும் (மலைவளர் : 7) அதற்கு உவமையாகின்றன. மெய்யோ புற்றுகவும், குண்டலி சக்தி பாம்பாகவும் காட்டப் படலும் உண்டு (எந் : அன்பு : 4)

இத்தகு பண்புகளை விளக்கு நிலையில் ஓர் உடலுவமை மாலையாக முன் சுட்டியபாடல் போன்றே பிறிதொரு பாடலும் அமைகின்றது. இதன்கண் பண்புகள் விரிந்தும் உவமைகள் செறிந்தும் இலக்கிய நயம்பட அமைகின்றது.

காகமொடு கழு கலகை நாய்நரிகள்
சுற்று சோறிடு துருத்தியைக்
காலிரண்டு நவவாசல் பெற்று வளர்
காமவே ணடன சாலையை
மோக வாசை முறியிட்ட பெட்டியைமு
மலமிகுந் தொழுகு கேணியை
மொய்த்து வெங்கிருமி தத்து கும்பியை
முடங்க லார்கிடை சரக்கினை

மாக விந்த்ரதனு மின்னை யொத்திலக
வேத மோதிய குலாலனுர்
வனைய வெய்யதடி காரனுனயமன்
வந்த டிக்குமொரு மட்கலத்
தேகமான பொயை மெய்யெனக் கருதி ......சிற்சு : 1

உயிர் நீங்கியபின் வீழ்ந்து விடும் உடல், காகம் கழுகு நாய் நரிகட்டு உணவாகு நிலையில் சிறிது பயனுடையது போலும்! அது வரை அவ்வுடல் பல் உணவுப் பொருட்களை தின்று அழித்துக் கொண்டே யிருக்கும் வெறும் சோற்றுத் துருத்திதான். இரு கால்களும் நவ வாயிலும் பெற்று உளவளர்ச்சி யின்றித் தான் மட்டும் வளர்ந்து கொண்டிருக்கும் அவ்வுடம்பு காம வெண்ணங்கள் கட்டின்றி எழுநிலையில் காமவேள் நடம் புரியும் நடனசாலையாகக் காட்சிப் படுத்தப்படுகின்றது. பிறர் கண்கட்குத் தென்படா வண்ணம் அறியவியலா வண்ணம், மோக ஆசைகள் உள்ளே அடைக்கப் பட்டிருக்கும் பெட்டியாக உடல் அமைகின்றது. மும்மல மிகுதியால் நிரம்பி நிறைந்து வழியும் நிலையில், கேணி அதற்குரிய பொருத்தமான மற்றோர் உவமை. அழுக்குகள் மிகுந்தால் கிருமிகள் பல்குவது இயல்பே யன்றோ? எனவே கிருமி தத்து கும்பியாகவும் சரக்கரையாகவும் உடலைக் காண்கின்றார். யமன் அடித்துடைக்கும் மட்கலமாக உவமித்தல் அனைத்திற்கும் முடியாக அமைகிறது. உயிர் உதறிவிட்டுச் செல்லும் இவ்வுடலைச் சட்டையாகவும் (காண் : 32), வெளியிலிருந்து கண்ணிற்குத் தெரியும் வண்ணம் உள்ள, தூண்டுதல்கள் ஒன்றுமின்றிச் செயல்படு நிலையில் சாட்டையிலாப் பம்பரமாகத் தென்படுகின்றது :

சாட்டையிலாப் பம்பரம்போ லாடுஞ் சடசால
நாட்டமற வெந்தை சுத்த ஞானவெளி காண்பேனே
—காண் : 12

உலகையும், உடலையும், மனத்தையும் சாட்டையிலாப் பம்பரமாகவும் இந்திர ஜாலமாகவும் காண்பதில் மரபுப் பழமை - பொதுமை அமைகின்றது.

இந்திரசா லங்கனவு கானலினீ ரெனவுலக
மெமக்குத் தோன்ற .... பொருள்: 6

இந்திரசா லங்கனவு கானனீரா
யிருந்ததுவே யின்னியற்கை யென்னே யென்னே
......தந்தை: 1

என உலகம் நுண் பொருட்களால் விளக்கப்படுவது, அதனை முழுமையாக அறியவியலா நிலையால் போலும்.

தாயர் இவ்வாறு முழு நிலையில் உவமைகள் தருவ தோடு, தனியாக அடை நிலையில் அளிப்பதும் உண்டு; அதனோடு சிறுசிறு உவமை யாட்சிகளால் பொருள் விளக்கப்பெறலும் உண்டு.

குணத்தைப் பேயாகக் (பரிபூர; 1) கண்ட தாயர், அதன் பலவியல்புகளைத் தனித்தனியே ஒன்றும் பலவும் உவமைகள் கூறி விளக்குகின்றார். உயிரைப் பிணித்து இறையை யடைவதைத் தடுக்கும் பாசத்தைக் காடாக வும் (பரிபூ: 1; சொலற்: 3), பெருங்கடலாகவும் (பரிபூ: 10), பிணைக்கும் விலங்காகவும் (நினைவொன்: 4; ஆகாதோ: 13) காணுநிலை தெளிகின்றது. பாசத்தின் மூல காரணமான ஆசை, பேராசை, மோகம், வேட்கை, காமம் என்பன,

சங்கிலியோடு (மௌன: 1)
வெள்ளத்தோடும் (கருணை: 10)
பெருங்காற் றோடும் (ஆசை: 1)
கடலோடும் (பரவை) (பாயப்: 33; பரா; 307;
ஆகாதோ: 12: எங்கும்; 10)
பாழோடும் (எந்: மாத: 13)
மதுவோடும் (எந்: மாத: 14)
விழலோடும் (ஆகாதோ: 6) புலைத்தொழிலோடும்

(எந்: தத்: 13) தீயோடும் (ஆனந்: 25; சிவன்: 5) கானறோடும் (தேசோ: 2) பெட்டகத்தோடும் (சிற்சு: 1) உவமிக்கப்பட்டுள்ளன.

மனதைப் பிணிக்கும் ஆணவம், அறிவற்ற கண்ணி லாக் குழவியைத் தாங்கிய கருவறை யாகவும் (சின்ம: 6) ஆங்கார முளையெனவும் (மௌன ; 1) ஆங்காரமான குலவேட வெம்பேய் (மௌன : 9) எனவும் காடாகவும் (ஆனந் : 6) கல்லாகவும் (ஆனந் ; 6) பேயாகவும் (பரா: 159) மத யானையாகவும் (எந்: தத்:9) உவமிக்கப் பட்டுள்ளது.

மும்மலங்களில் பிறிதொன்றான கன்மம் அல்லது வினையைச் சிங்கத்துக் கொப்பாகக் கண்டு அதனை நீக்கவரு முறையை, அச்சுறுத்தும் சிம்புளாகக் (எண் கால்களையுடைய ஒரு பறவை) காண்கிறார் தாயர் :

> சிங்கத்தை ஒத்தெனைப் பாயவரு வினையினைச்
> சேதிக்க வரு சிலம்புளே...... கருணா : 10

மெய்யினைப் பஞ்சாக அலைய வைக்கும் சுழற் காற்றாகவும் (மலைவளர் : 7) வேராகவும் (எந் : தத் : 18) திரை யாகவும் (தேசோ : 2) இவ்வினை உவமிக்கப்படுகின்றது. பயிர்போன்று வேரூன்றிச் செழித்து வளரு மிதனை வேரோடு களைய இறைவனை வேண்டுமிடத்தும் தாயரின் உவமை மிளிர்கின்றது.

> பைங்கூழ் வினைதான் படுசாவி யாவெமக்கு
> எங்கோன் கிரணவெயில் எய்துநா ளெந்நாளோ :
> —எந்நாட் : தத் : 19

மாயையெனும் மலமும் ஆணவம் கன்மம் போன்று உவமைநிலையில் விளக்கமுறல் அருகி அமைகின்றது. மாயைச்சேறு (ஆசை : 16) மாயாமனப்படலம் (கான் : 7) என்பன அவை. மாலைவியாபார மயக் கென (எந் : யா : 7) வருவதும் மாயையே குறிக் கின்றது போலும். மாயை படையாகவும் தானதன்

இலக்காகவும், இன்னும் சிறிதே விளக்க நிலையில் மாயை புலியாகவும், அதற்குப் பலியாகும் தன்னை மானாகவும் உவமிக்கின்றார்.

பாயப்புலிமுன மான்கன்றைக் காட்டும் படி யகில
மாயைப் பெரும்படைக்கே யிலக்காக வென்னை
வைத்தனையே. பாயப் : 1

இதனோடு ஒத்து ஆயின், சிறந்தே வரும் பிறிதோர் உவமையும் மாயை பற்றியமைகின்றது. இவ்வுலக மாயை கடுங் கோடையாகவும் ; அதினின்று விடுபெறத் தண்ணிழ லருள்வது இறைவன் பொன்னடியென்னும் மீட்சி நிலையாகவும் இணைத்துக் கொள்கின்றார்.

.... மன்றுளாடியகற்
பகமேயுன் பொன்னடி நீழல் கண்டா லன்றிப் பாவக்கிந்தச்
செகமாயை யான அருங்கோடை நீங்குந் திறமிலையே
—பாயப் : 8

மனத்துக்கண் அமைந்த பிறிதோர் மாசான அறியாமை, அவித்தை என்பன இருளாகவும் (தேசோ : 4 ; ஆசை : 17) புலனெனும் பொறிக்கே நேரே பாயும் வெளிமானாகவும் (பாயப் : 10) இவை நீங்கிய நிலையில் தெளிந்த அறிவோ (போதம்) சித்தம் ; ஞானம், விளக்காகவும் (ஆசை : 17) அமைதியுரு நிலையில் திரைக் கடலாகவும் (எந் : தத் : 10), மதயானையாகவும் (எந் : அன் : 14), கலைஞானம் மணற் சோறாகவும் (பரா : 187) பேரறிவாம் இறைவன், தொண்டருளமெனும் தூய கோயிலில் வீற்றிருக்கும் திருமேனியாகவும் (பாயர : 8) உவமிக்கப்படுகின்றன. அவித்தை கலைந்து அறிஞர் சொல்லால் அறிவுறுநிலை - அறிவுபெறு நிலை கல் லெறியப் பாசி கலைந்து தெளிநீர் தென்படுவதனை ஒத்து அமைந்துளதாம் :

கல்லெறியப் பாசி கலைந்து நன்னீர் காணுநல்லோர்
சொல்லுணரின் ஞானம்வந்து தோன்றும் பாாபரமே
—பரா : 214.

கருவறைக் குழவிபோல் கண்ணற்றிருக்கும் அறிவு, அதாவது அறியாமை நீங்குநிலை, மீண்டும் கண்ணொளி பெற்ற இன்பநிலைக்கு ஒத்து அமையுமாறு சுட்டப்படும் பாடல் தாயரின் உவமை யாட்சியில் குறிப்பிடற்குரிய ஒன்று :

காலால் வழிதடவுங் காலத்தே கண்முளைத்தாற்
போலே யெனதறிவிற் போந்தறிவாய் நில்லாயோ

—பலவகை : 20

இவைபோன்றே, புலன்களும் அவற்றின் தன்மையும் உவமை யழகுடன் தரப்படுகின்றன. ஐவரென்ற பலவேடர் (சிற்சு : 4) வாயிலோ ரைந்திற் புலனெனும் வேடர் (சிவன் : 5) பொறியிற் செறி ஐம்புலக் கனி (ஆசை : 13) வேட்டைப் புலப் புலையர் (எந் : நத் : 6) எனவும் அறிவை அகப்படுத்தும் பொறியாகவும் (பாயப் : 10) இவை அமைகின்றன.

அந்தக் கரணமெனு மாகாத பேய்கள் ...... பரா : 251
கன்னங் கரியநிறக் காமாதி ராக்ஷசப் பேய் ...பரா : 265
பூதமொடு பழகிவள ரிந்திரிய மாம்பேய்கள்
புந்திமுத லானபேய்கள்
போராடு கோபாதி ராக்ஷசப் பேய்களென்
போதத்தை யூடழித்து .... மலைவளர், 8

என்னும் பாடலடிகள் எல்லாத் தீயியல்புகளும், அறிவை - மனத்தை மருட்டும் அலைக்கழிக்கும் பேய்களாகப் படைக்கப்பட்டமையைத் தெளிவிக்கின்றன.

தீமைகள் நீங்கும் போது சுகமும் ஆனந்தமும் (இன்பம்) கிடைக்கின்றன. சுகம் வெள்ளமாகவும் (மௌன : 1) துன்பம் இருங்கடலாகவும் ( ) துக்கம் வெள்ளமாகவும் (எனக் : 26) ஆனந்தம், அமிர்தமாகவும் (எனக்கென் : 27) வெள்ளமாகவும்

(பாயப் : 40 ; உடல் : 58 ; ஆகாதோ : 20) பரமானந்தம் வெள்ளமாகவும் (பாயப். 11 ; பரா. 368) இன்பம் வாரியாகவும் (ஏசற். 1) ஆழாழியாகவும் (ஏசற். 2) கடலாகவும் (ஏசற். 4 ; சொலற். 4) வெளியாகவும் (ஏசற். 8) அள்ளக் குறையா அகண்டித ஆனந்த மெனும் வெள்ளம் (வேண் : 4) எனவும் பேச்சுமூச்சில்லாத பேரின்ப வெள்ளம் (ஆனந்த. 1) எனவும் வருகின்றன.

தன்னிலும் இத்தகு குறைகள் - அழுக்குகள் உள என்றுணர்ந்ததனுற் போலும் அடிகள் தன்னையே நாயெனவும் (பொன்னை: 42, ஆசை. 27 ; எனக்கென. 2, பாயப்புலி. 18, இல்லை. 4) பேயெனவும் (ஆசை. 9, 20, பாயப். 47) பாவி எனவும் (எந்நாட். யாக் 6) கூறிக் கொள்கிருர். முன்னிரண்டும் மனமும் உடலும் அலையும் - அலைக்கழிக்கப்படும் நிலைகளை அடிப்படையாகக் கொண்டன போலும்.

இவையொழிய, மலம் நீங்கிய உயிர் இறைவனை அணுகலை, ஊசி காந்தத்தினைக் கண்டணுகல் போலவே (கருணு. 9) எனவும்; காந்தம் இரும்பைக் கவர்ந்திழுத்தல் போல, இறைவன் அன்புளத்தைத் தன்பால் இழுப்பானே எனவும்; (பைங். 17) சமயங்கள் பரமானந்த வெள்ளமாய் இறைவனைச் சேர்தல், ஆறுகள் கடலை அடைதல் போல் எனவும் (பாயப். 11) இறைவனை இரங்க வேண்டுமிடத்து,

> கன்றினுக்குச் சேதா கனிந்திரங்கல் போலவெனக்
> கென்றிரங்கு வாய்கருணை யெந்தாய் ……. பரா. 34

எனவும்; இறையை விட்டு மனதை அண்டிஞல் தாயில்லாப் பிள்ளை போல் பித்தாகவோ (சச்சி. 1) எனவும் ;

இறையிருந்தும் தான் வாடுதல் தாயிருந்தும் பிள்ளை வாடுதல் போல் (பரா. 349) எனவும் ; பாலொடு நீரும் (எந். நிற்கு. 23) அப்பினிடை உப்பும் தீயினிடை இரும்பும், தீபத்திடைக் கற்பூரமும் (எந். நிற்கு. 6, 7, 8) போல் இறையுயிர்க் கலத்தல் அமைகின்றது எனவும் அமைகின்ற சில உவமைநிலைகள் உள. இறைக்காட்சி கண்டு மகிழு மன்பருளம், இரவியையும், முகிலையும், சந்திரனையும் காணக் காத்துத் தவமிருந்து கண்ட போது ஆனந்தமுறும் சரோருகம் போலும் மயில் போலும் சகோரம் போலும் அமைந்ததெனத் தாயர் படைக்கும் உவமைக் காட்சி முருகியல் இன்பம் பயக்கின்றது.

தரக்கரவி கண்ட சரோருகம்போ லென்னிதய
மிக்கவருள் கண்டு விகசிப்ப தெந்நாளோ ;
வானமுகில் கண்ட மயூரபக்ஷி போலவையன்
ஞானநடங் கண்டு நடிக்குநா ளெந்நாளோ
சந்திரனை நாடுஞ் சகோரபக்ஷி போலறிவில்
வந்தபரஞ் சோதியையாம் வாஞ்சிப்ப தெந்நாளோ

—எந் : அன்பு : 1, 2, 3.

இவ்வுலக வாழ்க்கை, இந்திர ஜாலக் கோலம் எனவும் (தேசோ. 3) சொற்பனம் எனவும் (உடல். 13) ஊசற் சுழல் எனவும் (ஏசற்ற. 1) ஆடுங் கறங்கும் திரிகையும் எனவும்; (பாயப். 56) ; இப்பொய்யுலக வாழ்க்கை, புலைச்சேரி வாதனை எனவும் (பரா. 185) கான்ற சோறு எனவும் (நல்லறிவே. 3) ஆடியோய் பம்பரம் எனவும் (பரா. 205) உவமிக்கப்படுகின்றது.

இவ்வுலகத்துப் பிறக்கும் பிறவியை கடலாகக் காணல் மரபு. அம்மரபுவமையும் இவருக்குண்டு (தேசோ. 2).

வாதைப் பிறவி வளைகடலை நீந்த ஐயன்
பாதப் புணையிணையைப் பற்றுநாள் எந்நாளோ.

—எந். அருள். 14

தந்தை, தாய், தமர் உறவினரைச் சந்தைக் கூட்ட மெனவும் (தேசோ. 3), அண்ட கோடியைக் கருப் பவறை யெனவும் (தேசோ. 7) இதயத்தைப் பத்ம பீட மெனவும் (சிற்சு. 6) தத்துவப் பேய் எனவும் (உடல். 29) தத்துவமாம் பாழ்த்த சடவுரு எனவும் (எந். தன்: 3) சொல்லில் பதர்நெல்லின் பதர் எனவும் (பரா. 295) நித்திரை யாகிய சத்துரு எனவும் (எந். தத். 25) கண்ணுடிபோல வெல்லாம் காட்டும் திருவருள் எனவும் (ஆகாதோ. 18) அருகிச் சில உவமைகள் அங்கங்குத் தென்படுகின்றன.

இவை யொழிய ஐயவுவமைகளும் இல் பொருளுவமை களும் இவரிடம் உள. நெஞ்சின் நிலையை ஐயவுவமை யால் விளக்கியமை முன் கண்டோம். இறைவனே.

> கரும்போ தேனே முக்கனியோ வென்னக் கலந்து நலந்
> தரும் பேரின்பப் பொருளே ... —தன்னை. 3

எனவும், தனக்கு மவுனியளித்த அமிர்தமாம்
மௌனத்தை,

> கற்கண்டோ தேனே கனிரசமோபாலோவென்
> சொற்கண்டாதேதெனநான் சொல்லுகேன் ... உடல். 7

எனவும், இறையின்பத்தை

> .... நெஞ்சைக் கனன்மே
> லிட்ட மெழுகா வுருக்கு மின்ப வெள்ள மாகிக்
> கரும்போ கண்டோ சீனி சருக்கரையோ தேனே
> கனியமிர்தோ வெனருசிக்குங்

எனவும் காட்டுமிடங்களிலும் ஐயவுவமை பொருந்து கின்றது.

இல்பொருள் உவமையாகச் சில வருகின்றன. பிரம்மன் நாட்டிய அகில மாயையைக்

> கான்முயற்கொம்பே யென்கோ கானலம் புனலேயென்கோ
> வான்முக முளரியென்கோ மற்றென்கோ விளம்பல் வேண்டும்
> —தேன்முகம். 1

எனவும், நெஞ்சத்தை

மருடீர் முயற்கோடோ வான்மலரோ பேய்த்தேரோ
இருடீர் நீயுறைந்த தெவ்விடமோ காணேனே—ஏசற்ற. 9

எனவும் ஐயநிலையில் உவமிக்குமிடத்து முயற்கொம்பும் ஆகாயப்பூவும் இல் பொருள் ஆக அமைவதாலும் கானல் நீர் பொய்க்காட்சி யானமையினுலும் இல்பொருளு வமைநிலை பொருந்துகின்றது.

பழமொழிகள் :

உலகில் வழங்குகின்ற பல பழமொழிகளையும் இணைத்துக் கருத்தை விளக்குவது தாயரின் மற்ருெரு பண்பு.

உவமையையும் பழமொழியையும் இணைத்து, அதாவது பழமொழியையே உவமையாகக் கையாண்டும் கருத்துக்களைத் தெளிவுறுத்தும் வன்மை உடையவர் தாயர். 'குரங்குக்கைப் பூமாலை', 'பாம்பின் வாய்த் தேரை', 'யானைவாய்க் கரும்பு' எனும் இவை நாம் தினந்தோறும் கேட்டும் பயன்படுத்தியும் இருக்கின்ற பழமொழிகளுள் உவமை நிலைக்களத்தில் தோன்றியவை. மனமாகி மாயையுள் அகப்பட்டு அதன் வழிச் சென்ருல் இறைவனின் ஈடும் எடுப்புமற்ற இணையடிகளைச் சேரவியலாதுதான்.

மனமான வானரக்கைம் மாலை யாக்காமல்
எனையான் அடிகள்அடி எய்துநா ளெந்நாளோ

மனத்தின் மாயையைக் கண்டு, நானே உன்னை நடத்த வல்லேன் எனக் கூறுகின்றது புத்தி. மனத்தைக் காட்டிலும் அமைதியும் ஆற்றலும் உடையவன் யான் என நெஞ்சிடம் கூறுகின்றது. அதில் நெஞ்சம் ஏமாறி (ஏமாந்து) விட்டாலும் இறையடியை அடைய முடியாது தானே.

புத்தியெனும் துத்திப் பொறியரவின் வாய்த்தேரை
ஒத்துவிடாது எந்தையருள் ஓங்குநாள் எந்நாளோ

இங்கு, இவையிவையால் இன்னது ஆகாது; அவனருளால் மட்டும் அவை இயலும் என்ற வண்ணமும் வலியுறுத்தப் படுகின்றது. ஆணவமிருக்கின்றதே, அது செயற்பட முனைந்து, துணிந்தெழுந்து, ஆங்காரமாகிய என்னைச் சேர்; இறைவனிடம் இணைந்து விடலாம் எனச் சூழ்ச்சி செய்கின்றது.

ஆங்கார மென்னு மதயானையின் வாய்க் கரும்பாய்
ஏங்காமல் எந்தையருள் எய்துநாள் எந்நாளோ

இவ்வாறு மனத்தின் பல்நிலைகள் பழமொழி - யுவமையால் விளக்கம் பெறும்போது புதுமை பயக்கின்றன.

மனம் என்று ஒன்று நமக்கு இருப்பதாகவே தெரியவில்லை. பல இடங்களில் சூழ்நிலைக்குத்தக நாம் பேசும்போது நம் மனத்தைத் தனியே கழற்றி வைத்துவிட்டுத் தான் பேசுகின்றோம். 'மன்' நிலைபேறு எனப்பொருள் படும். மன்னுதல் உடையது தான் மனம், மனத்தையுடையவனே மனிதன், மனமில்லாதவன் மனிதப் பண்புகளுடையவன் ஆகான். இத்தகைய மனம் எங்கிருக்கின்றதென்பதே நமக்குத் தெரியவில்லை. அது நம்மைப் படுத்துகின்ற பாட்டினைச் சொல்லில் வடித்துக் கூற இயலாது. சொன்னசொற் கேளாத பிள்ளைபோல் துள்ளுகின்ற மனத்தைத் தாய் தொட்டிலில் படுக்க வைத்து ஆட்டி, பின்பு உணர்வு வரக் கிள்ளுகின்றாளாம். அதோடு எழுநிலைகளில் விழிப்போடு இருக்கின்ற மனம் தலைகொழுத்துத் திரிகின்றது. நனவு, கனவு, உறக்கம், பேருறக்கம், உயிர்ப்படக்கம், கட்புலனும் புள்ளி (விந்து), செவிப்புலனும் ஓசை ஆகிய ஏழு நிலையங்களிலும் தலைசுற்றி ஆடுகின்றது. 'புருஷனுக் கடங்காப் பெண்டாட்டி' போலத் தானே விருப்பம்போல் புறம் போந்து செயற் படுகின்றது. இத்தகைய மனம், காணாத - கேளாதவற்றையெல்லாம் கண்டதாகக், கேட்டதாகக் கபட நாடகம் ஆடுகின்றது. இத்தகு

நிலையுடை மனத்தை யடக்க இயலவில்லை. நீதான் அடக்கல் வேண்டும் என்பது வேண்டுகோள். இங்கும் பிள்ளையைத் தொட்டிலிட்டுத் தொடையினைக் கிள்ளல்' 'வீட்டுக்கடங்கா மனைவி' போன்ற பழமொழிகளைப் பயன்படுத்தி விளக்குகின்றார்.

சொல்லான திற்சற்றும் வாராத பிள்ளையைத்
தொட்டில்வைத் தாட்டி யாட்டித்
தொடையினைக் கிள்ளல்போல் சங்கற்ப மொன்றில்
தொகுக்கும் தொடுத் தழிக்கும்
பொல்லாத வாதனை எனும்சப்த பூமியிடை
போந்துதலை சுற்றி யாடும்
புருஷனி லடங்காத பூவைபோல் தானே
புறம்போந்து சஞ்ச ரிக்கும்
கல்லோ டிரும்புக்கு மிகவன்மை காட்டிடுங்
காணுது கேட்ட வெல்லாங்
கண்டதாக் காட்டியே அணுவாச்சுருக்கிடுங்
கபட நாடக சாலமோ
எல்லாமும் வலதிந்த மனமாயை ஏழையாம்
என்னு லடக்க வசமோ
இகபர மிரண்டிலும் உயிரினுக் குயிராகி
எங்குநிறை கின்ற பொருளே ... —எங்கும். 4

தன்னையே தாழ்த்திக் கொள்ளுதல் தாயரின் பண்புகளுள் ஒன்று. ஆண்டான் முன் அடிமைபோல அடக்கமுடையவராகவே தன்னைப் பாடல்களில் சுட்டுகிறார். பாவியாகிய தான் இவ்வுடலிலிருந்து உய்வுபெற அத்துவிதத்தில் வாஞ்சை கொண்டமை, முடவன் கொம்புத் தேனை இச்சித்தபடி அமைந்தது எனக் காட்டுகின்றார்.

ஆக்கையெனு மிடிகரையை மெய்யென்ன பாவிநா
னத்துவித வாஞ்சை யாதல்
அரியகொம் பிற்றேனை முடவனிச் சித்தபடி ... சின். 2.

'வல்லான் வகுத்ததே வாய்க்கா லெனும்பெரு வழக்கு' என இறைவன் வகுத்த விதியையும் (சுக. 3) 'பொல்லாத சேயெனிற் றாய்தள்ள லிதமோ' என இறைவன்

விலகிவிடலாகாதென்பதையும் (சுக. 3) 'கைத்தலம் விளங்குமொரு நெல்லியங்கனி' என வேதாகமப் புருஷார்த்தமும் (சச்சி. 7) 'உள்ளங்கையி னெல்லிக்கனி, யெனவிண் ணவர் காட்சியும் (ஆகார. 8), 'காயாத மரமீது கல்லேறு செல்லுமோ' வென வினைத் துன்பமும் (சச்சி. 8) 'இடுக்குவார் கைப்பிள்ளை, எனத் தன்னிலையும் (பன்மாலை. 6) 'கன்றுமனத்துடன் ஆடு தழை தின்னல்' எனத் தான்பெற்ற கல்வி கேள்விக் கிடையேயுள்ள குழப்பமும் பழமொழிகளால் விளக்கப் படுகின்றன.

இயலாத காரியத்தைச் செய்துவிடுவோம் என மார் தட்டுவாரை இருபழமொழி இணைத்து விளக்குகின்றார்.

> கல்விற் பசிய நாருரித்துக் கடுகிற் பெரிய கடலடைக்கும்
> அல்விற்றகரிய அந்தகனுர் ... ... —சொல்லற் : 1

வீடுபேறு பெறக் கருதுபவனுக்கு வெளியுலகக் காட்சி 'ஏட்டுக் கடங்காச் சொப்பனம்' ஆனமையும் (சொலற். 10) போதத்தால் அவத்தைத் தேடல் 'நீதியா விளக்கெடுத்து இருள் தேடவும் சிக்காமை' எனவும் (ஆசை. 17) சிவாகமங்களில் கூறப்படும் பொருளை எண்ணல் இயலாது, 'பொருதிரைக் கடலுள் மணல் எண்ணலாம்' எனவும் (ஆசை. 18) மோன முறை யுணர்ந்தார் யாதும் முயலாமை 'நிறை குடந் தான் நீர்கொளுமோ' (உடல். 17) எனவும், இறையை விட்டுப் பிறரை கருத்திற் கொள்ளும் பேதமை 'பூவிற்கும் வான்கடையிற் புல்விற்போர்' நிலை (திட முற. 5) எனவும், உடலுள் உயிரை வைத்தமை காற்றைப் பிடித்துமட் கரகத் தடைத்தபடி (பெரிய. 1) எனவும்; இறையுணர்த்திய அறிவை, சொல்லால் எடுத்து மொழிய நினைத்தல், 'துரும்பு பற்றிக் கடல்கடக்கும் துணிபு' எனவும் (கல்லா. 1) அருள்சித்தி யின்றி நாம் இன்மை, 'வித்தின்றி யாதும் விளைவதுண்டோ' (பரா, 73) எனவும், இறையருள் நாட்டமின்றிப் பேசலைக் கேட்டதையே சொல்லுங் கிளி, (பரா. 189)

எனவும், இறையின்றித் தான் நினைவு நெஞ்சம் எவரும் இன்மையைத்' தாயின்றிச் சூலு முண்டோ' (பரா. 210) எனவும், மாயையோரை எத்துணை அறிவுறுத்தினுலும் பயனின் றென்பது 'வைத்த சுவரலம்பின் மண்போகுமா' (பரா. 294) எனவும், வாய்பேசி இன்பமில்லை என்பது 'வாயாற் கிணறு கெட்டவாறு (பரா. 350) எனவும், அறிவில் வந்த இருள், 'அந்தகனுக்கு எங்கும் இருள்' (எந். தத். 16) எனவும், புறக்கருவி முதலியன முற்றும் கெடுதல், 'போன வழி புல்முளைப்பது' (எந். தத். 15) எனவும், இறையன்பர் பொய்மையாய சொற்கண் டாலோடல் 'கற்கண்டாலோடுகின்ற காக்கை' (எந். அன். 5) எனவும், கர்மங்கள் இறைக் கருணைக்கு முன் நில்லா என்பது 'காகமானது கோடிகூடி நின்ருலு மொரு கல்லின் முன் னெதிர் நிற்குமோ' (எங்கு, 6) எனவும், விழலுக்கிறைத்த நீர் என்பது

மெல்லியலார் மோக விழற்கிறைப்பே னையாநின்
எல்லையிலா னந்தநல மிச்சித்த லாகாதோ —ஆகாதோ.

எனவும் 'பெற்றவருக்குத் தானே பிள்ளை வருத்தம்' என்பது

பெற்றவட்கே தெரியுமந்த வருத்தம் பிள்ளை
பெருப்பேதை அறிவாளோ பேரா னந்தம்
— பெற்றவட் : 1

எனவும் வருகின்றன.

இந்நிலைகள் அவர் பயன்கொண்ட பல் பழமொழி களைக் காட்டுகின்றன.

பழமொழிகளோடு தொடர்புற்ற நிலையில் சில வழக்கு களையும் கையாள்கின்ருர். 'இன்றைக்கிருந்தாரை நாளைக் கிருப்பரென் றெண்ணவோ திடமில்லையே' (எங்கும். 6) 'உண்டவர்க் கன்றி உட்பசியோயுமோ' (பொன்னை. 70) 'ஆயிரஞ் சொன்னுலும் அறியாத' (பரா. 302) 'ஒருரையாய் வாய்க்கு முண்மைக்கு ஓரனந்த

நூல் கோடிப் பேருரை யாற் பேசல்' (பரா. 304) 'தாயிருந்தும் பிள்ளை தளர்தல்' (பரா. 349), 'கடலில் வாழ் துரும்பு, (எந். தத். 14) 'கைவிளக்கின் யின்னே போய் காண்பர்' (எந். பொ. 1) என்பன உலகில் வழங்கும் வழக்கு நிலையில், பழமொழி நிலைக்கு வரா விடினும், பயன்படுத்தப்பட்டுள்ளன.

இவையன்றி, பட்டப்பகல் (கருணை. 4, சச்சி. 11, பரா. 362, எந். நிற்கு. 10) வெட்டவெளி (பரா. 362) வெள்ள வெளி (நினைவொன்று. 6) தேடாத தேட்டினரே (பரா. 234) நெக்குருகுதல் (எங்கும். 5) நெக்காடவே (தேசாா. 5) நெக்குருக (வம்பனேன். 4) கன்னங்கரிய (பரா. 266) சின்னஞ் சிறியேன் (பைங். 22) தன்னந்தனியே (பைங். 22) செக்கச் சிவக்க (ஆனந்த. 3) என வருவன, பேச்சு வழக்குச் சாயல் காட்டி அமைகின்றன.

பாடலுக்கு இத்தகு கற்பனை - உவமை, பழமொழிகள் அழகளிப்பதுபோன்றே ஓசைநயமும் அமைகின்றது. பாவுக்குத் தனி இசையுண்டு. இது செவிக்கினிமை பயக்கின்றது. பாவினங்களனைத்துமே வரையறை நெகிழ்ச்சி காரணமாகப் பாக்களைவிட இனிமை பயப்பனவாய் உள்ளன. இந்நிலையைத் தாயர் பாடலிலும் காணலாம்,

ஓசை நயம் :

பாடல்கள் அனைத்திலும் ஓசை நயமே நம் உள்ளத்தை ஈர்த்துப் பொருள் ஆழத்தையும் உணரச் செய்கின்றது. வெறும் ஓசையோடு தாயர் பாடல் அமைந்து விடவில்லை. சொற்கள் மீண்டும் மீண்டும் வருவதால், பொருள் அழுத்தமும் எண்ண விரிவும் இசையின்பமும் கிடைக்கின்றன.

ஒன்றியொன்றி நின்றுநின்று மென்னையென்னை
யுன்னியுன்னும் .... —பன்மாலை. 6

ஓசைகளிலும் சில முறைகளை, அமைப்புக்களைத் (patterns) தாயர் பயன் படுத்துவதால் அதிலும் தனி இன்பம் நமக்குக் கிடைக்கிறது. ஒரு பாடலில் கேள்விகள் பல தொடுக்கின்றார்; இன்னொன்றில் உடன் பாடாகப் பல செய்திகள் பெய்கின்றார் - தம் கருத்தை விளக்குகின்றார்.

நம்பிக்கைதான் அனைத்திற்கும் அடிப்படையானது, இருகையாலும் செயலாற்றுவதற்கு நம்பி-க்-கை தேவை. நம்பிச் செயலாற்றுவது என்பதே பொருள். இறைவன் - இயற்கை இறந்த ஆற்றல் - நினைத்தால் எதைச் செய்ய முடியாது? தாயுமானாருக்குச் சில வினாக்கள் உள்ளத்தே எழுகின்றன. இக்கடல் எவ்வாறு கரையின்றி அடங்கி நின்று கொண்டிருக்கிறது? - என நினைத்துப் பார்க்கிறார். நஞ்சு அமுதமாவது எப்படி? கடலில் அக்னி நிலையாக இருக்கின்றதே! பூமியினும் பரிமாண அளவில் பெரிதான கோளங்கள் - நட்சத்திரங்கள் எவ்வாறு விழாமல் நிலை நிற்கின்றன? அவை ஈர்ப்பு ஆற்றலால் எவ்வாறு நின்றுகொண்டிருக்கின்றன? 'அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கும்; அளப்பருந் தன்மை வளப்பெருங் காட்சி; ஒன்றனுக்கொன்று நின்றெழில் பகரின் நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன' எனத் திருவண்டப் பகுதியில் மணிவாசகர் விளம்புகின்றார். மேருவையே வளைத்தான் வல்லோன்; அது வளையவில்லையா? மேகங்கள் வச்சிராயுதத்திற்கு அடங்கி ஏவல் கேட்கவில்லையா? இராமன் கால் அடி பட்டுச் சாபம் நீங்கிக் கற்சிலையும் மடமங்கையாக வில்லையா? உலகில் எத்தனையோ சித்திவகைகள் நடைபெறவில்லையா? இன்றுகூட எத்தனையோ வகைச் சித்திகள் நடைபெறலை நாம் பார்த்ததில்லையா? ஆனால் என் மனம் ஒருநிலைப்பட மட்டும் என்னால் செய்ய இயலவில்லையே! நீ செய்யக் கூடாதா? எனக் கேட்கின்றார், தாயர். 'ஒ' என மீண்டும் மீண்டும் வரும் வினாத் தொகுப்பு, ஓசையினிமை யளிக்கின்றது.

ஆழாழி கரையின்றி நிற்கவிலேயே கொடிய
ஆலம் அமுதாக விலேயோ
அக்கடலின் மீது வடவனல் நிற்க விலேயோ
அந்தரத் தகில கோடி
தாழாமல் நிலேநிற்க விலேயோ மேருவும்
தனுவாக வளேய விலேயோ
சத்த மேகங்களும் வச்ரதர ஞணேயால்
சஞ்சரித் திட வில்லேயோ
வாழாது வாழவே இராமனடியாற் சிலேயில்
மடமங்கை ஆக விலேயோ
மணிமந்தர மாதியால் வேண்டு சித்திகள் உலக
மார்க்கத்தில் வைக்க விலேயோ
பாழான என் மனங் குவிய ஒரு தந்திரம்
பண்ணுவ துனக் கருமையோ
பார்க்குமிட மெங்குமொரு நீக்கமற நிறைகின்ற
பரிபூர ஞனந் தமே ... பரிபூரண. 9

எதுகை மோனேகளும் ஓசைக்கு அடிப்படையாக அமைதல் உண்டு. தாயர் பாடல்கள் பெரும்பான்மையும் எதுகை மோனேயுடனேயே அமைகின்றன. அவற்றுடன் சொற்ருெடர்ந்து பொருளமைதியும் சிறக்கும் போது அப்பாட்டு இன்னும் ஏற்றம் பெறுகின்றது.

உழைப்புக்குப் பயன் உண்டு. அப்பயனே அனுபவித்தே யாதல் வேண்டும். வினேகளின் கூட்டை, வங்கியில் பணம் போடுவதோடு இணேத்துப் பேசுவார்கள். பணம் வங்கியில் போடப் போடச் சேர்ந்து கொண்டிருக்கும்; இடையிடையே எடுத்துச் செலவு செய்கின்ருேம். அது கழிக்கப்படுகின்றது. நாம் நல்வினே செய்யின், நல்லதும் - பொன் விலங்கும்; தீது செய்யின், தீதும் - இரும்பு விலங்கும் கிடைப்பதாகக் கூறுவார்கள். வினேகளே, அவை நல்லனவாயினும், தீயனவாயினுந் துய்த்தே யாதல் வேண்டும். இங்கு வள்ளுவரின் 'தீவினே செய்தார் கெடுதல் நிழல் தன்னே வீயா தடியுறைந் தற்று' என்னும் குறள் நினேக்கத் தக்கது. இராமகிருஷ்ண பரமஹம்சர், ரமண மஹரிஷி போன்றவர்களும் தமக்கு வந்த நோயை அனுபவித்தே

முடித்தார்கள் என்பது வரலாறு. இருப்பினும் ‘ ஊழை யும் உப்பக்கம் காண்பர் உலேவின்றித் தாழாது உஞற்று பவர் ’ என்பதற்கு ஏற்ப விதியை மதியால் - முயற்சி யால் வெல்லலாம். ஆயின் அம் மதி மாயையின் மயக்கத்தில் அகப்பட்டு மயங்கும் போது விதிக்குத் தோற்று விடுகின்றது. ‘ விதி ’ ‘ மதி ’ எனும் சொற் களும் ‘ திக ’ர எதுகையும் தொடரும் போது, பொரு ளின்பத்தோடு ஓசைநயமும் இணேகின்றது. விஃனகளேப் பற்றிக் கேள்வி கேட்கும்போது விதை முந்தியதா ? மரம் முந்தியதா ? என்பதற்குரிய நிலேயே அமை கின்றது.

விதியையும் விதித்து என்னே விதித்திட்ட
மதியையும் விதித்தம் மதி மாயையில்
பதிய வைத்த பசுபதி நின்னருள்
கதியை எப்படி கண்டு களிப்பதே

தலேயாகு எதுகையால் ஓசையின்பம் மிகுதலேப் ‘ பொன்னே மாதரை ’ ‘ பாயப்புலி ’ போன்ற சில பகுதிகளில் அமைந்த பல பாடல்கள் எடுத்துக் காட்டு கின்றன.

இயற்கை இறந்த ஆற்றலுடைய இறைவனே வணங்கு வதைக் காட்டிலும் அவனேப் பற்றியே எப்போதும் நினேத்துக் கொண்டிருக்கின்ற அடியவர்களேத் தொழு தாலே போதும் என்கிருர் தாயர். கண்ணுள் ஒளி யாகவும், உள்ளத்துள் கருத்தாகவும், வெறும் வெளி யாகவும் இருக்கின்ற இறைவனே, இரவும் பகலும் உள்ளத்துள் வைத்து உன்னிக் கொண்டிருக்கின்றவர் களேத் தொழுதல் வேண்டும் என்கிருர். இதனேக் கூறும் பாடல் தலேயாகெதுகையாலும் ஓசையினிமை பெறு கின்றது.

கண்ணு ணின்ற வொளியைக் கருத்தினே
விண்ணு ணின்று விளங்கிய மெய்யினே
எண்ணி யெண்ணி யிரவும் பகலுமே
நண்ணு கின்றவர் நான்றெழுந் தெய்வமே

—பொன்னே, 75

பாடலுக்குள் அமையும் 'அந்தாதி' யும் ஒருவித ஓசை யினிமை பயத்தலால் செவிக்கின்பம் அளிக்கின்றது.

ஒளியே ஒளியினுணர்வே யுணர்வி லுவகை பொங்குங்
களியே களிக்குங்கருத்தே கருத்தைக் கவளங் கொண்ட
வெளியே வெளியின்வினை சுகமே சுகர்வீறு கண்டுந்
தெளியேன் றெளிந்தவரைப் போற்றிடே
னென்செய் குவனே —பாயப். 46

ஒருசொல் மீண்டும் மீண்டும் பயில்வதாலும் நயம் ஏற்பட வாய்ப்புண்டு.

பொய்யுலகும் பொய்யுறவும் பொய்யுடலும் பொய்யெனவே
மெய்யநினை மெய்யெனவே மெய்யுடனே காண்பேனு
—காண். 6

இறைவனைப் பற்றிப் பேசுவதற்கு ஒரு சொல்லே போதும். அச் சொல்லுள் அனைத்தும் அடங்கும் எனக் கூறுகின்றார் தாயர். இதனை 'மொழி' என்ற சொல்லை அடுக்கிக் காண்பித்துப் பாடலின் நயத்தை மிகுவிக்கின்றார். இப் பாடலைப் பொதுநிலையில் ஒருவன் படித்தானே யாயின் தமிழ் மொழியின் பெருமை யினையே உணர்த்துவதாகத் தோன்றும். இங்கே தமிழ் தெய்வநிலை பெறுகின்றது.

ஒருமொழியே பலமொழிக்கும் இடங்கொடுக்கும் அந்த
ஒருமொழியே மலம் ஒழிக்கு மொழிக்குமென மொழிந்த
குருமொழியே மலை இலக்கு மற்றை மொழியெல்லாம்
கோடின்றி வட்டாடல் கொள்வதொக்குங் கண்டாய்
கருமொழியிங் குனக்கில்லை மொழிக்குமொழி ருசிக்கக்
கரும்பனைய சொற்கொடுனைக் காட்டவுங் கண்டனைமேல்
தருமொழியிங் குனக்கில்லை யுன்னை விட்டு நீங்காத்
தற்பரமா யானந்தப் பொற்பொதுவாய் நில்லே

எண்களை வைத்துப் பாடலை நயம்பட அமைக்கும் முறையும் அதிலும் பொருளாழங் காணும் நிலையும் உண்டு. ஒன்றுமுதல் ஒன்பது வரை எண்களை அமைத்து, சிறந்த கருத்துள்ள பாடலொன்றை நமக்குத் தருகிறார்

தாயர். எனக்கு எந்தவித ஆற்றலுமில்லை; யான் சிறியேன்; நான் ஒருவன்; இந்த ஒருவனுக்கு நீ வைத்துள்ளவை இருவினைகள், முக்குணங்கள், நான்கு கரணங்கள், ஐந்து புலன்கள், ஆறு பகைகள், எட்டு மதங்கள் என்பன; நீயோ ஒன்பது வடிவங்களில் வருகின்றாய் - என்னே உனது ஆற்றல்! ஒருவனுக்கு ஒன்பதா? என நகைச் சுவையாகப் பேசுவது போன்று எண்களை அமைத்துப் பாடற் சுவையை மிகுவிக்கின்றார்.

கருணைமொழி சிறிதில்லேன் ஈத லில்லேன்
கண்ணீர் கம்பலை என்றன் கருத்துக் கேற்சு
ஒருபொழுதும் பெற்றறியேன் என்னை ஆளும்
ஒருவாவுன் அடிமைநான் ஒருத்தனுக்கோ
இருவினையும் முக்குணமும் கரணம் நான்கும்
இடர்செய்யும் ஐம்புலனும் காமமாதியாறும்
வரவரவும் ஏழைக்கோர் எட்ட தான
மதத்தொடும் வத்தெதிர்த்த நவவடிவ மன்றே.

ஏழு என்ற எண் ஏழை என்பதிலும், ஒன்பது என்ற எண் நவ வடிவ மெனவும் வருகின்றன. இருவினை - தீவினை, நல்வினை; முக்குணம் - அமைதி, ஆட்சி, அழுந்தல் (சாத்துவம், தாமதம், ராட்சசம்) அல்லது ஆணவம், கன்மம், மாயை; கரணம் நான்கு - நாட்டம், மனம், எழுச்சி, இறுப்பு; ஐம்புலம் - சுவை, யொளி, ஊறு, ஓசை, நாற்றம்; காமாதி ஆறு - செருக்கு, சினம், சிறுமை, இவறல், மாண்பிறந்த மானம், மாணுவுவகை; மதம் எட்டு - குலம், உருவம், இளமை, கல்வி, செல்வம், தற்பெருமை, உதவி, இயல்பு; நவ வடிவம் - அத்தன், அன்னை, ஓசை, எழுத்து, அருளோன், ஆசான், அரி, அரன், அயன் என இவ்வெண்கள் விளக்கம் பெறுகின்றன. இவ்வாறு எண்களின் பயிற்சியாலமையும் அழகு 'எண்ணு வண்ணம்' எனப்படும். இதுவும் இலக்கிய நயம் பயக்கின்றது.

ஒலிக்குறிப்புச் சொற்களை அங்கங்கே பெய்தும் நயம் மிகுவிக்கின்றார் தாயர். மொகுமொ கென வரு விழிநீர்

(பொருள். 4) ஒன்றை மெணமெணன் றகம் வேறதாம் வித்தை (ஆனந்த. 3) திமிதி மென்று வரவும் (வண்ணம்) என்பனவும், வெடுக்கென்றசைத் தெடுத்தால் (சுக வாரி. 5) அம்மம்ம (தேசோ. 4, 10) என்பனவும் இத்தகையன.

அடுக்குத் தொடர்ப்பயிற்சியும் இனிமை தரும் வண்ணம் அங்கங்கே பொருந்தி வருகின்றன. உய்ந்தே னுய்ந்தேன் (வம்பனே. 1) இருக்கிலே னிருக்கிலேன் (வம்பனே, 2) என் செய்வே னென்செய்வேன் (எனக்கென் 22) என வினை முற்றுக்களும்; ஈட்டியீட்டி (சிவன் செயல். 2) இடைந்திடைந்து (சிவன். 3) எழுந் தெழுந்து (சிவன். 3) உடைந்துடைந்து (சிவன். 3) போல் எச்சங்களும்; மௌன மௌனம் (பொன்னை. 42) மவுனம் மவுனம் (பாய்ப். 24) அபய மபயம் (பாயப். 44) என்பன போல் பெயர்களும்; ஐயமிலை ஐயமிலை (பரா. 315) எனத் தொடரும் அடுக்கி நயம் காண்கின்றார்.

முரணுடைச் சொற்களைப் பயன்கொள்ளும் போதும் நயம் கிட்டுகின்றது. இன்று, சமுதாயத்தில் இயல்பாகவே முரணில் - மாற்றத்தில் இன்பத்தைக் காண்பதைப் பார்க்கிறோம். ஆடவர், பெண்டிர் போன்று முடி வளர்த்துக் கொள்வதும்; பெண்டிர், ஆடவர்போல் ஆடை யணிவதையும் காணும்போது, 'குற்றியோ, மகனோ இத்தோன்றுகின்ற உரு' எனச் சொல்லதிகாரக் தில் படித்த இலக்கணம் நினைவுக்கு வரும். 'ஆணோ பெண்ணோ இத்தோன்றுகின்றவர்' என்று சில வேளை களில் கேட்கத் தோன்றுகின்றது. மன அமைப்பில் ஏற்பட்ட முரணே இதற்குக் காரணம். தாயர் பாடல் களில் இம் முரண் அணி அல்லது அழகு மட்டும் ஏறத் தாழ 200 இடங்களில் காணப்படுகின்றது.

இவர் ஆட்சியில் இருவகை முரண் பயிற்சிக்கு இட முண்டு. எதிர்மறைத் தொடரும் உடன்பாட்டுத் தொடரும் தொடர்ந்து வந்து பின்னதை முன்னது

சிறப்பிக்கும் நிலையொன்று. இதனையே சில பகுப்பாகத் தரினும் இழுக்கின்று. முதற்பகுப்பு தூங்காமற் தூங்கி (பைங். 30, காண். 10)' புல்லாமற் புல்லி (எந். அருள். 16) பாராமற் பார்த்து (எந். நிற்கு. 25) தூண்டாமற் தூண்டி (எந். நிற்கு. 27). நோக்காமல் நோக்கி (காண். 26) சேராமல் சேர்ந்து (ஆகாதோ. 17) என வருவன. இவை பருப்பொருணிலையில் புலனுணர்வுக்கு அப்பாற்பட்டு நுண்ணுணர்வு நிலையில் அறிதலை உணர்த்துகின்றன போலும். இன்னோர் பகுப்பு கல்லாத் அறிவு (தேசோ. 9) அறியா அறிவு (எந். அறிஞ. 2) அறிவோ டறியாமை யற்ற அறிவு (எத். நிற்கு. 2) வடிவில்லாவடிவு (ஆரணம். 10) வாரா வரவு(பைங். 51) காணுத காட்சி (பைங். 16) என்பன போன்றன. பொய்யென்ற மெய்யர் (பரா. 379) அரு வுருவம் (எந். பொருள். 10) கண்டும் காணேன் (எந். அன்பு. 9) என்பனவற்றையும் இதன்கண் அடக்கலாம். இவை அறிந்தவற்றை விளக்கவியலா நிலையினை அடிப்படை யாகக் கொண்டனவோ எனத் தோன்றுகின்றது திரையில்லாக் கடல் (பன்மாலை. 9) திரையில்லா நீர் (ஆசை. 14) திரையற்ற நீர் (எந். அறிஞ. 11) வெப்பிலா ... விளக்கு (ஆரணம். 4) என்பன இயற்கையை அதன் தன்மைகளிலிருந்து இயல்புகளிலிருந்து மாற்றிச் சுட்டி வேறுபடுத்தும் நிலையில் வருவன. சொல்லாடா வூமர் (பரா. 76) சொல்லறியாவூமர் (எந். ஆனந். 4) வாயென்றும் பேசா மவுனி (பரா. 181) பேசாத மோன நிலை (பரா. 284) என்பன வற்றில் வரும் எதிர்மறைத் தொடரும் சொல்லைச் சிறப்பிக்க வருவனவாம். சொல் லழகில் ஒருவகைப் பொருளாழத்தோடு அமைந்தவை இம் முதல்வகை.

இரண்டாவது வகை பொய்ப்பணி - மெய்ப் பணி, புன் மலம் - நின்மலம், மண்ணகம் - விண்ணகம், ஆதி யந்தம் தீதெனவும் - நன்றெனவும், இன்பமும் - துன்பமும்

தன்னை உன்னை, நன்னெஞ்சம் - வன்னெஞ்சம் போன்றவை.

இறைவன் இல்லாத பொருளே இல்லை. அதோடு பகைப்பொருள்களிலும் இருக்கின்றான். 'சோதியனே துன்னிருளே', 'ஆதியனே அந்தம் நடு ஆகி அல்லானே', 'இன்பமும் துன்பமும் அல்லானே உள்ளானே, யாவையுமாய் அல்லையுமாய்' போன்ற மணிவாசகர் வாக்கும் நினைக்கத்தக்கது. ஒரே பாடலில் மிகுதியான விடத்தும் முரணை அடக்கிப் பேசுகின்றார் தாயர்.

சுத்தமும் அசுத்தமும் துக்க சுகபேதமும்
    தொந்தமுடன் நிர்த்தொந்தமும்
ஸ்தூ லமொடு சூட்சுமமும் ஆசையும் நிராசையும்
    சொல்லுமொரு சொல்லின் முடிவும்
பெத்தமொடு முத்தியும் பாவமொடு அபாவமும்
    பேதமொடு அபேத நிலையும்
பெருமையொடு சிறுமையும் அருமையுடன் எளிமையும்
    பெண்ணினுடன் ஆணும் மற்றும்
நித்தமும் அநித்தமும் அஞ்சன நிரஞ்சனமும்
    நிட்களமும் நிகழ் சகளமும்
நீதியும் அநீதியும் ஆதியொடு அநாதியும்
    நிர்விடய விடய வடிவும்
அத்தனையும் நீயலதென் அத்தனையும் இல்லையெனில்
    யாங்களுனை யன்றி யுண்டோ
அண்டபகி ரண்டமும் அடங்கவொரு நிறைவாகி
    ஆனந்த மான பரமே.

(ஸ்தூலம் - பருமை; சூட்சுமம் - நுண்மை, பெத்தம் - கட்டு; முத்தி - ஒட்டு; பாவம் - உள்ளல்; அபாயம் - உள்ளாமை; அஞ்சனம் - குற்றம்; நிரஞ்சனம் - குற்றமின்மை; சகளம் - நிர்விடயம், காணப்படாதவை; விடயவடிவம் - காணப்படுபவை)

இவ்வாறு பாடல் முழுவதும் முரணுகு நிலையில் வேறு சில பாடல்களும் வருகின்றன (சின்மயா. 8; ஆனந்த. 2; எங்கு. 1; ஆகார. 6, 13; எனக்கென். 23;

மண்டலம். 6; பாயப்புலி. 32; உடல். 47; பரா. பொருள். 4) இத்தகு முரணுக்கு நூலிறுதியில் வரும் வண்ணமும் மிகுதியாக இடன் அளிக்கின்றது. முன் பின்னொடு கீழ்மேல் நடுப்பக்கம் (எங்கு. 11) மெய்போலிருந்து பொய்யாம் சடக்கை (சச்சி, 2) நீண்ட நெடுமை அவலக் குறுக்கு (ஆகார. 13) தனைமறந்து உனை மறவா (தன்னை. 2) குற்றம் குறை குணம் மேலிட (பரா. 303), பொய்யகல மெய்யான தேகநிலை கண்டோர் (பரா. 315) அறியாமை ஈதென்றறிவித்த (பரா.372) கவலை தொலைத்துத் தொலையா இன்பம் (பைங். 31) இன்பணைந்தார் ... வாழ்விழந்தேன் (பைங். 32) நான்கருதின் வர நாடார் ...... தானே யணைவர் (பைங். 33) பச்சை நிறமாய்ச் சிவந்தபாகம் (எந். தெய்வ. 7) ஆதியந்தமில்லாத வாதி யநாதி (எந். ஆனந். 6) ஆடலைக் காட்டி ... ஆடல் ஒழித்து (எந். நிற்கு, 22) முன் நினைக்கப் பின்மறக்கும் மூடவிருள் (பல. 11) மவுனியாய்த் தோன்றி ... சொல்லாத வார்த்தையைச் சொன்னால் (ஆனந்தக். 1) பற்றிய பற்றற ... பற்றச் சொன்னால் (ஆனந்தக். 3) பேசாத காரியம் பேசினன் (ஆன்ந்த 3) சிந்தை பிறந்தது மங்கே ... சிந்தை இறந்து தெளிந்தது மங்கே (ஆனந்தக். 20) போன்ற முரண்தொடர்கள் எண்ணியெண்ணி இன்புறத் தக்கன.

முரண்டொடர் அமைப்புப் போன்றே பிற வகைத் தொடர் அமைப்புகளும் நயம் பொருந்த வருவதுண்டு. ஒளிகண்டு ஒளிகின்ற இருள் (எங்கும். 11) அறிந்தநீ அறிவை அறிவிலி அறிகலேன் (ஆசை. 32) பாராசையற்றிறையைப் பற்றற நான் பற்றி நின்ற (பைங். 39) காலால் வழிதடவுங் காலத்தே கண்முளைத்தாற் போலே (பலவகை. 20) கைத்தல நகப்படை விரித்து புலி சிங்கமொடு கரடி (சச்சி. 6) போன்றன.

இத்தகு நயங்கள் அமைந்த தாயர் பாடல்களில் இலக்கிய மரபுகளும் பின்பற்றப்படுகின்றன.

உலக உயிர்கள் அனைத்துக்கும் தலைவனாக - நாயகனாக இறைவன் அல்லது இயற்கை இறந்த ஆற்றல் அமை கின்றது என்பது பொதுக் கருத்து. ஒரு குடும்பம், அக் குடும்பத்தில் 18 குழந்தைகள்; அக்குழந்தைகள் அனைத் திற்கும் பெற்றோரின் அன்பு, முழுநிலையில் தரப்படு கின்றதே தவிரப் பகிர்ந்து 18 பங்காக வைத்து அன்பு செலுத்தப் படுவதில்லை; ஆயின் பொருள் அவ்வாறே பகிர்ந்து கொடுக்கப்படுகின்றது. உயிர்கள் அனைத்தி னிடமும் இறைவன் ஒரே விதமான அன்பை - முழுநிலை அன்பைச் செலுத்துகிறான். அவ்வன்பிலும் சிறத்த அன்பு - உயிர் இரண்டறக் கலக்கின்ற அன்பு, காதலன் காதலியர் அன்பே. சிற்றின்பத்தின் வழிப் பேரின்பத்தை உணர்த்துவது பொதுவான இயல்பு. சிற்றின்பம் புரிந்த இன்பம்; பேரின்பம் புரியா இன்பம். அதனால்தான் இறையடியார் பெரும்பான்மையோரும், தம்மை நாய கியராக்கிக்கொண்டு இறைவனை நாயகனாகக் கருதி நாடும்நிலை உருவாகியது போலும்! இத் தமிழ்மரபு வழியில்தான் தாயுமானாரும் செல்வதைப் பார்க்கிறோம்.

சிற்றின்பத்தின் வழிப் பேரின்பத்தை உணர்த்துவ தற்கும் வித்திட்ட முதல் இலக்கியம் சிலப்பதிகாரமே. சிலம்பில் ' குன்றக் குரவை ', சிற்றின்ப வழிப் பேரின் பம் உணர்த்தும் பகுதி. ஏற்கெனவே கோவலன் - கண்ணகி, கோவலன் - மாதவி காதல், சிற்றின்ப வாழ்வெல்லாம் புகார்க் காண்டத்திலேயே முடிந்து விட்டன. மறுபடியும் குன்றக் குரவையில், குறிஞ்சி நில மக்களின் வாழ்வைக் கூறவந்த அடிகள், சிற்றின் பத்தையே பேசுகின்றார் என்பது பொருத்தமாகத் தோன்றவில்லை. பேரின்பத்தை எவ்வாறு பேசுகின்றார் எனப் பார்ப்போம். கண்ணகி கூண்டோடு மேலுலகம் சென்றதாகக் கூறுவது குன்றக் குரவையில்தான். வினை கள் அனைத்தும் நீங்கிய உயிர், இறைவன் அடியை அடை கின்றது; இயற்கையோடு இரண்டறக் கலக்கின்றது. கண்ணகி இயற்கையோடு - இறையோடு இரண்டறக்

கலந்தமையையே குன்றக் குரவை பேசுகின்றது. தலைவி பாடுவதாக அமையும் பாடல்கள் பல.

> எற்றென்றுங் காணேம் புலத்தல் அவர்மலைக்
> கற்றீண்டி வந்த புதுப்புனல்
> கற்றீண்டி வந்த புதுப்புனல் மற்றையார்
> உற்றாடி னோந்தோழி நெஞ்சன்றே ;
> என்னென்றுங் காணேம் புலத்தல் அவர்மலை
> பொன்னாடி வந்த புதுப்புனல்
> பொன்னாடி வந்த புதுப்புனல் மற்றையார்
> முன்னாடி னோந்தோழி நெஞ்சன்றே ;
> யாதொன்றுங் காணேம் புலத்தல் அவர்மலை
> போதாடி வந்த புதுப்புனல்
> போதாடி வந்த புதுப்புனல் மற்றையார்
> மீதாடி னோந்தோழி நெஞ்சன்றே.

இங்குத் தலைவன் அருள்மலை; அம் மலையினின்று அருட்புனல் பொழிகின்றது. இந்தத் தலைவி அதனைத் தனக்கே உரியது என நினைக்கின்றாள்; அவ் அருட் பொழிவில் பிறர் தனக்கு முன் ஆடுவதை விரும்ப வில்லை. இவ்வாறு முதலில் 'கல்' லாக இருந்தது இவ்வுயிர் நிலை ; அது பக்குவப் படா நிலை. பின்பு அவ் அருள் வெள்ளந்தான் பொன்நாடி - பொன் ஆடி வந்தது. 'கல்நெஞ்சு', பொன்போன்ற உலகப் பக்குவ முடைய நெஞ்சமாக மென்மை பெறுகின்றது. அதைத் தட்டி நீட்டி வளைத்து அணியாக்குநிலை பயன்பாட்டுப் பக்குவத்தையும் சுட்டுகின்றது. அடுத்த நிலை, நெஞ்சு போதாகி இறைவனுக்கு அருச்சனை செய்யும் மலர் போன்று ஆதல்; அந்நிலையில் அது இறைவனுக்கு உரிய மலராக அமைந்துவிடுகின்றது. இங்குக் கல், பொன், போது என்பன தன்மைகளையே குறிப்பிடுவதாகத் தெரிகிறது, புகார்க் காண்டத்தில் காதலில் மூழ்கிய அடிகள், மறுபடியும் ஏன் குன்றக் குரவையில் காதலைப் பற்றிப் பேசுதல் வேண்டும்? அதோடு குறிஞ்சியில் சிற்றின்பம், தலைவன் தலைவி இணைவு, அதேபோன்று தான் உயிர் அல்லது ஆன்மா இறையோடு இணையும்

இணைப்புப் பேரின்ப மாகின்றது. கானல்வரி போன்று, குன்றக் குரவை முழுவதும் உள்ளுறை இறைச்சிப் பொருள்களில் அமைந்திருக்குமோ என்ற ஐயம் எழுகின்றது.

தாயுமானவர் தன்னையே தலைவியாக்கிக் கிளியைக் காட்டித் தூதனுப்பும் காட்சி - பேசும் பேச்சு நம் நெஞ்சை உருக்குகின்றது. இறைத்தலைவனைக் கொண்டமையும் இந் நாயகன் நாயகி 'பாவம்' தூதிலக்கிய மரபைக் காட்டுகின்றது. கிள்ளையைத் தூதனுப்புகின்றாள் தாயுமானவர் தலைவி. இக் கிளிக்கு, சுகம் என்ற பெயருண்டு ; அது சுகத்தைத் தருவதனால் போலும் !

அகமேவும் அண்ணலுக்கென் அல்லலெலாஞ் சொல்லிச்
சுகமான நீபோய் சுகங்கொடுவா பைங்கிளியே
ஆவிக்குள் ஆவியெனும் அற்புதனார் சிற்சுகந்தான்
பாவிக்குக் கிட்டுமோ சொல்லாய்நீ பைங்கிளியே ;
ஆருமறி யாமலெனை அந்தரங்கமாக வந்து
சேரும் படிஇறைக்குச் செப்பிவா பைங்கிளியே.

ஏற்கனவே இறையோடிணைந்து இடையறுவின்பத்தைப் பெற்றிருக்கின்றார் அடிகள், மணிவாசகர் போன்று.

கண்ணுள் மணிபோல் இன்பங்காட்டி எனைப்பிரிந்த
திண்ணியரும் இன்னம்வந்து சேர்வாரோ பைங்கிளியே ;

இறைவன் விரைவில் வந்தடைதலை விரும்பிய நிலை,

நீர்க்குமிழி போன்றவுடல் நிற்கையிலே சாசுவதஞ்
சேர்க்க அறியாமல் திகைப்பேனோ பைங்கிளியே

என்பதில் தெரிகின்றது. இங்கும், இவ்வுடல் இருக்கும் போதே உருவ சித்தியோ, அருவ சித்தியோ, அருவுருவச் சித்தியோ அடைதல் வேண்டும் என்ற எண்ணத்தைத் தாயர் வெளியிடுகின்றார்.

பச்சை கண்ட நாட்டிற் பறக்கு முனைப் போற்பறந்தேன்
இச்சையெல்லாம் அண்ணற் கிளம்பிவா பைங்கிளியே.

மெய்ப் பொருள்

தாயர், 'பொருள் வணக்கம்' என்ற தலைப்பில் 12 பாடல்களும், எந்நாட் கண்ணியில் பொருள் இயல்பு என்பதுபற்றி 19 கண்ணிகளும் கூறுகின்றார். பொருள் என்ற சொல்லைப் பல்பொருள்களில் 100 இடங்கட்கு மேல் எடுத்து ஆளுகின்றார். மூன்றே இடங்களில், 'மெய்ப் பொருள்' என்ற சொற்றொடரைப் பயன் படுத்துகின்றார்.

பொருள் எது? மெய்ப்பொருள் எது? என்பன இக்குறிப்புகளிலிருந்து ஓரளவு விளக்கம் பெறுகின்றன; தாயர் கருத்துக்கள் தெளிகின்றன.

மெய்ப்பொருள் பற்றி நினைக்கும்போது எனக்கு இந்தப் பல்கலைக் கழகம் பற்றியோர் எண்ணம் எழு கின்றது. இப் பல்கலைக் கழகம் இந்தவிடத்தில் தோன்றுவானேன்? செட்டிநாட்டு - வள்ளல் அண்ணு மலை அரசர் செட்டி நாட்டிலேயே இப்பல்கலைக் கழ கத்தை அமைத்திருக்கலாமே; அல்லது தொன்மூதூ ராகிய மதுரையில் நிறுவியிருக்கலாமே; இவ்வாறு அடிக்கடி எண்ணுவதுண்டு. நானே ஒரு காரணத்தைக் கற்பித்துக் கொள்வதும் உண்டு. கொற்றவங்குடி உமாபதி சிவாச்சாரியார் உலவிய இடம் இந்த இடம். அந்த, என்றும் நிலைபெறுகின்ற மெய்ப் பொருளைப் பற்றிப் பேசிய இடத்தில், மெய்ப்பொருளைக் காண ஒரு பல்கலைக் கழகம் தோன்றுவித்தது - தோன்றியது பொருத்தமானது என எண்ணுவேன்.

நமக்கு மெய்ப் பொருளை உணர்த்தியவர்கள் எல்லாம் நிலையாமையால் மறைந்து விட்டார்கள்; மெய்ப் பொருளோ என்றும் நிலைபெறுகின்றது. அந்த மெய்ப் பொருளை உணர 'எனக்கு வாய்ப்புத் தா இறைவனே' என வேண்டுகின்றார் தாயர். மெய்ப்பொருளை அறிய விரும்பாத ஓர் ஏழையாக நான் மட்டும்தான் இருக்கிறேன்- வேறு யாரேனும் இருப்பாரோ? எனக் கேட்கின்றார்.

மின்னைப் போன்றன அகிலமென் றறிந்து மெய்ப்பொருளாம்
உன்னைப் போன்றநற் பரம்பொரு ளில்லையென் றோர்ந்து
பொன்னைப் போன்றநின் போதங்கொண்டு உன்பணி
பொருந்தா
என்னைப் போன்றுள ஏழைய ரையவிங் கெவரோ.

மெய்ப்பொருளை அறிய வழியேது என அடுத்ததாக அவர் சிந்தனை செல்கின்றது, தெரிய வேண்டிய ஒன்றைத் தெரிந்து கொள்ள 'மை' போட்டுப் பார்ப்பது ஒரு பழக்கம். இதனால் அனைத்தையும் தெரிந்து கொள்ளலாம். இப் பழக்கம் தாயர் காலத்தில் இருந்திருக்க வேண்டும். பேரறிவாகிய 'வெளி ஞானம்' என்னும் மை கிடைத்தால், அதன்வழி இறையாகிய மெய்ப்பொருளைப் பார்க்க இயலுமே என ஏங்குகின்றார் தாயர். எனவே இறையை அறிய - மெய்ப் பொருளை உணர, காரண அறிவு முதிர்ச்சியே வழி என்பது தெளிவாகின்றது.

ஈனமில்லா மெய்ப்பொருளை இன்மையிலே காண வெளி
ஞானமெனும் அஞ்சனத்தை நான்பெறுவ தெந்நாளோ

'என்னால் இயலும்' என்ற ஆணவத்தோடு தன்னம்பிக்கை மிக்க ஒருவன் மெய்ப் பொருளைத் தேடுவானாயின் அவன் தேடியதை அடைவானா என்பது கேள்வி. இல்லை. அம் மெய்ப் பொருளைக் காண்பதற்கு அவன் புலன்கள், புறக் கண்கள் போதா. இறைவன்

திருவருளாகிய கண்ணை அவன் முதலில் பெற்றால்தான் அவன் விரும்புவது கிடைக்கும். அதுவும், அத் திரு வருட் கண்களே மெய்ப்பொருளை அவனுக்குக் காட்ட வேண்டும். 'அவனருளாலே அதன் தாள் வணங்கி' எனும் தொடர் இங்கு உன்னற் பாலது.

காட்டுந் திருவருளே கண்ணாகக் கண்டு பர
வீட்டின்ப மெய்ப்பொருளை மேவுநாள் எந்நாளோ

மெய்ப்பொருளாம் ... நற் பரம்பொருள், ஈனமில்லா மெய்ப் பொருள், பர வீட்டின்ப மெய்ப்பொருள் என்பன பேரறிவாகிய, (utlimate truth) உண்மையின் முடிபாகிய இறையையே குறிக்கின்றன.

இவை சொல்லாராய்ச்சி யாகிய புறச்சொல் ஆராய்ச் சியால் கிடைத்த செய்திகள், தாயர் பாடல் முழுவ திலும் அமைந்துள்ள 'பொருட்' கருத்துக்களைப் பார்த்தால், எது பொருள், எது மெய்ப்பொருள் என்பது புலனாகும்.

பொருள், நிலையாமை யுடையது; அழிவது. அதனைப் பலவாறாக, அதன் பண்புகளைப் பல் அடையோடு விளக்குகின்றார். ஆவியுடல் பொருள் (ஆனந்தமான. 10) உடல் பொருள் ஆவி மூன்றும் (ஆகார. 18) உடல் பொருளும் யானும் (தன்னை. 10) உன்னை உடலை உறு பொருளை (உடல். 71) உருநீடுயிர் பொருளும் ஒக்க (உடல். 77) வைத்த பொருள் உடலாவி (பெற்றவட். 7), உள்ள பொருளாவியுடன் மூன்றும் (பரா. 236) என உடைமைகளாகிய பொருட்கள் - நிலையற்ற பொருட்கள் குறிக்கப்படுகின்றன. இவற்றின் தன்மை, பொய்ப் பொருளில் வாஞ்சை (ஆனந்தமான. 10) நில்லாப் பொருளை நினையாதே (உடல். 55) சொல்லாப் பொருட் டிரள் (உடல். 55) எனக் குறிக்கப்படுகின்றது, இவை யொழிய செல்வம் என்ற நிலையில் மட்டுமன்றிப் பொது வாகவும் பொருள் பயன்படுகின்றது. எப்பொருட்கும்

எவ்விடத்தும் (பொருள். 5) நல்ல பொரு ளின்பம் (உடல். 69) அறமாதி பொருள் உரைப்ப (தேசோ. 10) பயனருளப் பொருள்கள் பரிவார மாகி (ஆகார ; 10) பெரு பொருள் (ஆகார. 27) செறியாப் பொருள். (தன்னை. 7) பொருளைப் பூவைப் பூவையரைப் பொரு ளென்று (தன்னை 8) வாய்ந்த பொருள் (ஆசை. 21) என்னைப் பொருளாகப் பண்ணி (கல்லா. 29) என்பன இத்தகையன. பொருண்மை எனும் (meaning) பொரு ளிலும் இச்சொல் தாயரால் ஆளப்படுகின்றது. சன் மார்க்க ஞானமதின் பொருளும், வீறு சமய சங்கேதப் பொருளும் (ஆகார. 12) சொல்லும் பொருளுமற்றுச் சும்மா இருப்பதற்கே (பரா. 50) சொல்லால் தொடர் பொருளால் (பாயப். 29) சொல்லும் பொருளும் தொடரா அருள்நிறைவில் (பரா. 230) என.

இவையொழிய வரும் 'பொருள்' குறிப்பு அனைத் தும், மெய்ப் பொருளாகத் தாயர் எதைக் கருதினரோ அதனையே சுட்டி வந்ததாகத் தோன்றுகின்றது. அருகி 'மௌனியும்' நட்பு போன்றனவும், பெரும்பான்மை இறைவனும் இங்குப் பொருளாக, நிலைபெறும் பொரு ளாகக் கருதப்படுகின்றனர் போலத் தெரிகின்றது. மோனம் பொருள் எனக் கண்டிட (பாயப். 15) என அறிவின் எல்லையான மௌனத்தையும், நாடும் பொரு ளான நட்பே (பரா. 16) என நட்பையும் உருவக நிலையில் இறையாக்கினர் எனக் கூறின் அது மிகை யாகாது.

இறைவனைக் குறிக்க வரும்போது மிகப் பல அடை களோடு இறையின் இயல்புகள் எடுத்தியம்படு நிலையில் குறிப்புக்கள் காணப்படுகின்றன.

பேசரு மனந்த பத ஞான வானந்தமாம் பெரிய பொருளைப் பணிகுவாம் (திருவருள். 2) துரிய நடுவூ டிருந்த பெரிய பொருள் (பொருள். 8), பெரிய பரி பூரணமாம்; நித்த நிர்மல சகித நிஷ்ப்ரபஞ்சப்

பொருளை (திருவருள். 3) என அது இப் பிரபஞ்சத்துக் குரியதல்ல என்பதும், தெரிவரிதாய்க் கலந்த தெந்தப் பொருள் அந்தப் பொருள் (பொருள். 3) என அது எங்கும் நிறைந்தமையும்; பொருளாகக் கண்ட பொருள் எவைக்கும் முதற்பொருளாகி (பொருள். 7), தன்னையன்றி யொரு பொருளிலதா எப்பொருட்குந் தான் முதலாய் (மண்டல. 2) என அனைத்திற்கும் மூலமாயினமையும், இருள்தீர விளங்கு பொருளியா தந்தப் பொருளினை யாம் இறைஞ்சி நிற்பாம் (பொருள். 7) என அதுவே ஒளிப்பிழம்பாயினமையும், தீதில் பரமாம் பொருளை (பொருள். 5) உன்னைப் போன்ற நற் பரம்பொருள் இல்லை (ஆசை. 19) சாந்தப்பதப் பரம்பொருளே (ஆசை. 21), மனக் கோதகற்றும் பரம்பொருளே (பாயந் 16) விளங்கு பரம் பொருளே (கல்லா. 25) என அதன் பரத்தொடர்பும் தன்மையும், அருமறையின் சிரப்பொருளாய் (பொருள். 8) சுருதி முடிவான பொருளே (தேசோ. 11) என அது வேதமுடிவாயினமையும்; வாக்குமன மணுகாத பூரணப் பொருள் (தேசோ. 10) பரிபூரணமாம் பொருள் (ஆகார. 28) பொருளே நின் பூரணம் மேலிட்ட காலம் (கல்லா. 12) என பூரணவியல்பும், வடிவில்லாச் சுத்தவான் பொருளே (பன்மாலை. 3) மறை முடியிருந்த வான்பொருளே (ஆசை. 37) வான்பொருளாகி யெங்கு நீயிருப்ப (ஆசை. 38) சுகவான் பொருளே (பாயப். 43) உள்ள வான்பொருட்டோற்கவோ வந்தேனுன் (ஆனந்தக். 25) எனவதன் உயர்வும்; போக்கு வரவற்ற பொருளே (சின்மயா. 4; எந். பொரு. 4) மன்னைப் பொருள் (தன்னை. 1) எனவதன் நிலைபேறும்; சூழ் வெளிப்பொருள் (வம்பனேன். 6) வெட்ட வெளிப் பொருள் (எந். அருளி. 9) எனவதன் தன்மையும்; தனிவளர் பொருளே (வம்பனேன். 10) ஒரு தனிப் பொருள் அளவை (ஆசை. 18) நீக்கமின்றித் தங்கும் தனிப்பொருள். (எந். பொருளி. 13) என அதன் ஒப்பற்ற நிலையும்; உயிர்த் திரளை யாட்டும் விழுப்

பொருளே (ஆகார. 7) அடியர்கள் களிக்க நின்றுடும் விழுப்பொருளே (பாயப். 54) என விழுமையும்; சமயா தீதப் பழம் பொருள் (காடுங். 1) பழம் பொருளே (எந். அன்பு. 9) பந்தத் துயரற்றவர்க் கெளிய பரமா னந்தப் பழம் பொருளே (தன்னே. 7) எனப் பழமையும்; பேரின்பப் பொருளே (தன்னையொரு. 3) பேரின்ப மதாய்ச் செறியும் பொருள் நீ (தன்னே. 4) ஆனந்தமா யிருந்த பொருளோடு (ஏசற்ற. 9) என இன்ப நிலையும்; குன்றுப் பொருள் (அகவல். 4) எனப் பெருமையும்; தானே மேலாடுஞ் சுகப்பொருள் (எந். பொரு. 2) சொல்லுக்கடங்கா சுகப்பொருள் (உடல். 25) என அது தரும் சுகமும்; எங்கு நிறைபொருளே (ஆசை. 2) நிறை பொருளளவை யார் காண்பார் (ஆசை. 11) எங்கு நிறைகின்ற பொருளே (எங்கு 1. 11) என எங்கும் நிறை தன்மையும்; தீன் பொருளான அமிர்தமே (ஆசை. 38) என அதன் என்று முயிரளிக்கின்ற நிலையும்; களங்க ரகிதப் பொருளே (பெற்றவம். 10) எனவதன் தூய்மையும்; பொருளாகியப் பொருளை யறி பொறியு மான (ஆனந்தமான. 2) பொருளலாப் பொருள் (ஆனந்தமான. 8) பொருளனைத்தும் தரும் பொருளே (ஆகார. 7) எப்பொருளு நீயெனவே எண்ணி (பரா. 69) சிந்தை மறந்து திருவருள்பாற் நிற்பவர்பால் வந்த பொருள் (எந். பொருளி. 8) அருவுருவ மெல்லா மகன் றதுவாயான பொருள் (எந். பொருளி. 10) அறிவூ டறிவாய் வந்த பொருளே (எந். பொருளி. 16) அவ் வாறாய் நின்ற பொருட்கு (எந். பொருளி. 17) தேட் டாலே தேடு பொருள் (எந். அன்பர். 3) அடுத்தோர் அடுத்த பொருள் (எந். அன்பர். 4) தற்போதம் அற்ற வர்கட் கற்ற பொருள் (எந். அன்பர், 7) அனைத்துமாம் அப்பொருள் (எந். அறிஞ. 7) அறிவை யறிவதுவே யாகும் பொருள் (எந். அறிஞ. 14) என்னும் பல்குறிப் புக்கள் தவிர, சிவனே அப்பொருள் எனக் குறிக்கும், நிகரில் பசுபதியான பொருளை (பொருள். 12), வெண் பொடி பூத்த மேனிச் சுகப்பொருளே (பாயப்புலி. 7)

புவனத்தை யுண்டு பண்ணிப் பாங்கா னடத்தும் பொருளே யகண்ட பரசிவமே (பாயப்புலி. 9) அஞ் செழுத்தி னுண்மை யதுவான அப்பொருளை (எந். நிலை பிரிந்தோர். 13) எனவும் அமைகின்றன.

தாயர் பாக்களில் ஊடுருவிச் செல்கின்ற கருத்தோட் டத்தில் கிடைக்கும் இறைவனுகிய மெய்ப்பொருள் பற்றிய செய்திகள் எண்ணி யெண்ணி இன்புறத் தக்கன. 'பொருள்' எனவும் குறிக்கும் அம் மெய்ப்பொருளாம் இறையைப் பல்வேறு இன்மொழிகளால் குறித்து, அழைத்து இன்புறுகின்முர் தாயர். அவர், 'அகவலில்' விளியாக இறைத் தன்மைகள் அனைத்தையும் கூறு கின்முர்.

> திருவருள் ஞானஞ் சிறந்தருள் கொழிக்குங்
> குருவடி வான குறைவிலா நிறைவே
> நின்ற ஒன்றே நின்மல வடிவே
> குன்முப் பொருளே குணப்பெருங் கடலே
> ஆதியு மந்தமு மானந்த மயமாஞ்
> சோதியே சத்தே தொலைவிலா முதலே ... அகவல். 1-6,

இறைவனைப் பொதுமைத் தொடர்கள் பயன்படுத்தி அழைக்கின்றமையே இவர் பாடலில் மிகுதி. அந்நிலை, இவரை ஒரு சர்வசமய சமரச வாதி என்பதை உறுதிப் படுத்துகின்றது.

இன்பப் பெருக்காகப் பொழிகின்முன் இறைவன். எனவே அவ்விறையை, ஆனந்த மாமழை பொழியு முகில் (திருவருள். 1) பரம இன்ப வெள்ளப் பெருக்கு (தன்னையொரு. 2) கரையிலா இன்ப வெள்ளப் பெருக்கு (தன்னையொரு. 2) கரையிலா இன்ப வெள் ளங் காட்டிடு முகில் (ஆசை. 14) ஆனந்த வெள்ளப் பேராறே (பரா. 4) இன்பப் பெருக்கு (பரா. 5, 14) எனவும்; ஆரா அமுதனைய ஆனந்த வாரி (பலவகை. 24) காதலித்த இன்பக் கடல் (பரா. 37) கரையிறந்த இன்பக் கடல் (பரா. 6) ஆனந்தக் கடல் (சிவன். 8)

எனவும் நீரோடும் கடலோடும் சார்த்தி மொழி கின்றார்.

பேரின்பமாம் அவ் விறைவன், அருட் கடலாகவும் கூட அமைகின்றான். அருள் சுரந்து மொழி கருணை முகில் (தேசோ 11) அருள் கூரும் கருணை விண் (ஆகார. 6) கருணை வான் முகிலே (ஆரணம். 4) அருளைப் பொழியும் குண முகிலே (தன்னையொரு. 8) கருணைமழை (பரா. 3) எனவும்; பொங்கும் கருணைக் கடலே (ஆரணம். 2) சுகவாரிதியே (சொலற்கரிய. 1) பெருகிய கருணை வாரிதியே (சிவன் செயல். 8) தெளி வற்ற தெளிவான சுத்த சுகக் கடல் (எந். ஆனந்த. 2) எனவும் இவை அமைகின்றன.

நற்சுகமே இறைவனாவதுபோல, பெரு ஒளியும் இறை யைக் குறிக்க வந்துள்ளது. பரஞ்சோதி (எங்கும். 5) குன்றிடாத கொழுஞ்சுடர் (பொன்னை. 67) வெய் விலாத் தண்ணருள் விளக்கே (ஆரணம். 4) சுடர்க் கொழுந்தே (சொலற்கரிய. 1) சொரூபானந்தச் சுடர் (மண்டலத். 5) விளக்கு (பரா. 18) உளத்து இருளைச் சூறையிட்டு நின்ற பரஞ்சோதி (எந். பொரு. 15) நினைப்பு மறப்புமற நின்ற பரஞ்சோதி (எந். பொரு. 19) ஆதியாம் வாழ்வா யகண்டிதமாய் நின்ற பரஞ்சோதி (ஆகாதோ. 15) கண்ணிறைந்த சோதி (நல்லறிவே. 1) அடிமுடி காட்டாத சுத்தவம்பரமாஞ் சோதிக் கடுவெளி (எந். பொரு. 14) பரையெனும் கிரணஞ் சூழ்ந்த பானு (ஆசை. 14) எனவும் ஒளி நிலையில் இறைவன் படைக்கப் படுகின்றான்.

இங்குக் கடுவெளியாகக் காட்டப்பட்ட (எந். பொரு. 14) இறைவனை, சுகாரம்பப் பெருவெளி (பொருள்வகை. 1) தூவெளிப் பரப்பு (ஆரணம். 4) அகண்டப் பரப்பான ஈசா (சொலற்கரிய. 3) பெரு வானமே (சிற்சுகோ. 3) துரியங் கடந்த வொன்று தூவெளியாய் நின்ற பெரிய நிறைவே (காண். 3)

சோதியே நந்தாச் சுகவடிவே தூவெளியே (ஆகாதோ. 8) எனப் பல்லிடங்களில் வெளியாகக் காண்கின்ருர் தாயர்.

மௌனத்தின் வைப்பு (திருவருள். 2) மோனப் பெருக்கே (பரா. 4) கண்ணிறைந்த மோனக் கருத்தே (காண். 29) என இறையே மௌனத்தின் முழுமை யானமையும்; ஞான சஞ்சீவியே (சின்மயா. 3) அமிர்த சஞ்சீவி (சுகவாரி. 4) எனச் சாகாவரமளிக்கும் தன்மை யனுனதும்; ஞான வாரிதி (சிவன். 5) ஐக்யபதத் தினி திருந்த விவேகம் (மண்டலத். 6) என அறிவும்; புந்திக் குள் நின்ற வருட் பொற்பே (பரா. 301) உள்ளத் தெளிவே (பரா. 0) என இறையே அறிவுக் கறிவாயி னமையும் தாயுமானுரால் குறிக்கப் பெறுகின்றன.

அறிவானந்தத் தாரமுது (தன்னை. 8) ஆரா அமிர்தம் (தன்னை. 9) ஆனந்தத் தேன் (பரா. 7) கடலமுது (பரா. 32) சிந்திக்குந் தோறும் தெவிட்டா அமுதே (காண். 1) அண்டனே அண்டர் அமுதே யென் ஞருயிரே (வேண்டாவோ. 5) எனவும்,

> கன்னலுடன் முக்கனியுங் கற்கண்டுஞ் சீனியுமாய்
> மன்னுமின்ப ஆரமுது ... (எந். ஆனந்த. 10)

எனவும், அமுதானமையைத்,

> தேனுகிப் பாலாகிக் கனியாய்க் கன்னற்
> செழும்பாகாய்க் கற்கண்டாய் திகழ்ந்த ஒன்றே,
> (பன்மாலை. 5)

எனவும், சிந்தையினுக் கெட்டாத சிற்சுகம் (எந். குரு.2),

> தண்ணருங் கருணை பூத்த இனிய கற்பகம் (வம்ப. 10)
> இன்பவருட் காவலன் (காண். 2)

பேரானந்தச் சித்து (தன்னை. 9) இன்ப வெற்பு (பரா. 2) ஆனந்த வியப்பு (பரா. 10) தெய்வச் சுருதி சொன்ன அற்புதம் (பரா. 249) ஆவிக்குள் ஆவியெனும்

அற்புதனூர் (பைங். 3) மணியே யென் கண்ணே மாமருந்தே (பன்மாலே, 8) வளர் நெல்லிக்கனி (பரா. 8) ஆவித்துணேயே அருமருந்தே (பலவகை, 15) எனவும் பலவாருக இறையை வருணித்தும் அவன் பெருமை யைச் சொற்களில் வடித்தும் தருகின்ருர் தாயர்,

ஆவல் மிகுதியால் தாயர் இறைவனேத் தாயினும் நல்ல தயாளு (காண். 15) அன்னே போல அருள் மிகுந்து மன்னு ஞான வரதன் (பாடுகின்ற. 5) சத் தான உண்மை (நல்லறி. 5) நின்மலனே (ஆகாதோ, 9) அத்தா விமலா அருளாளா ஆனந்த சித்தா (காண். 30) சித்தி முத்தி விளேக்கின்ற பூமி (தேசோ. 11) கருணே நீதி (சிற்சுகோ. 3) நற்றவத் துணே (சிவன். 8) அருத நட்புக் கலப்பு (சிவன். 8) அருள் வேந்தன் (பைங், 17) எனச் சிறு அடைகளோடும்;

நவங்கொள் தத்துவத் திரையெறி கடலெனும் நலத் தோய் (எனக்கென். 27) உள்நின் றுணர்த்தும் உலப் பிலா ஒன்று (காண். 24) எள்ளுக்குள் எண்ணெய்போல் எங்கும் வியாபகமாய் உள்ள ஒன்று (எத். பொரு, 9) பெண்ணுன் அலியெனவும் பேசாமல் என்னறிவின் கண்ணூடே நின்ற ஒன்று. (எந். பொரு. 18) எனச் சிறு தொடர்களாகவும்;

முத்தே பவளமே மொய்த்தபசும் பொற்சுடரே
சித்தேயென் னுள்ளத் தெளிவே பராபரமே — பரா. 9
கண்ணே கருத்தேயென் கற்பகமே கண்ணிறைந்த
விண்ணேயா னந்த வியப்பே பராபரமே, பரா. 10.

எனச் சிறு பாடலிலும்;

வாழ்வனேத்தும் தந்த வின்ப மாகடலே நல்லமிர்தை
மணியைப் பொன்னேத்
தாழ்வறவென் னுளத்திருந்த தத்துவத்தை யத்துவித
சாரந் தன்னேச்
சூழ்பெரும் பேரொளியை யொளிபரந்த வெளியே
யின்பச் சுகத்தை மாரு
ஏழுலகுங் கலந்தின்ருய் நாளேயா யென்றுமா
மியற்கை தன்னே. —மண்டலத். 4

என்பதுபோலப் பல்லிடங்களிலும் (மண்டலத். 7) விரிவாகப் பாடியும், அவ்விறையினை முழு நிலையில் விளக்க வியலாது என்பதால் போலும்

காரேனுங் கற்பகப்பூங் காவேனும்
உனக்குவமை காட்டப் போமோ ... மண்டலத். 11

என முடிக்கின்றார்.

இவ்வாறு அமையும் மெய்ப் பொருளிடம் தன் விண்ணப்பத்தைத் தாயர் கூறும்போது இறையினிடம் அவர் கொண்ட அன்பு தெளிவாகின்றது,

அருள்பழுத்த பழச்சுவையே கரும்பே தேனே
ஆரமிர்தே என்கண்ணே அரிய வான
பொருளனைத்தும் தரும்பொருளே கருணை நீங்காப்
பூரணமாய் நின்றவொன்றே புனித வாழ்வே
கருதரிய கருத்தனுட் கருத்தாய் மேவிக்
காலமுந் தேசமும் வகுத்துக் கருவியாதி
இருவினையுங் கூட்டி உயிர்த்திரளை யாட்டும்
விழுப்பொருளே யான்சொலும் விண்ணப்பம் கேளே.

இத்தகைய மெய்ப்பொருளை அறிய, உணர மனிதர்க்குக் கசக்கவா செய்யும்? இம் மெய்ப் பொருளே இவ்வுலகத் தோற்றத்திற்குக் காரணமாக அமைகின்றது.

உலகம்:

இவ்வுலகத்தைப் பார்க்கின்றோம். இவ்வுலகில் பல பொருட்கள் உள. அளக்க வியலா ஆற்றலுடைய பொருட்களாக, நம்மால் அடிமைப்படுத்த முடியாத பொருட்களாக, ஐவகைப் பெரும் பொருட்கள் அமைந்துள்ளன. இவற்றையே ஐவகைப் பூதம் எனக் கூறுகின்றனர். அவை நிலம், நீர், தீ, வளி, வான் என்பன. இவற்றின் தோற்றம் பற்றிப் புறம் 2-வது பாடல் கூறுகிறது. இவற்றின் விளக்கம் பற்றிச் 'சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்ற ஐந்தின் வகை தெரிவான் கட்டே உலகு' என்ற குறட்பாவும் அதற்கமைந்த

பரிமேலழகர் உரையும் தெளிவாகப் பேசுகின்றன. இவையே முதலில் தோன்றின, அல்லது தோற்று விக்கப்பட்டன. இவை ஏன் ஐவகையாகப் பகுக்கப் பட்டன? அறுவகையாக இருக்கக் கூடாதா? எழு வகையாக இருக்கலாகாதா? இவ்வாறு ஐவகையாகவே வகைப்படுத்தக் காரணம் என்ன? - என்பதற்கெல் லாம் விடை காண்பதும் கடினமே. இவ் ஐவகைப் பூதங்களைக் கொண்டதே இப் பேரண்டமாகிய உலகம், அப் பேரண்டத்தில் இருநிலையில் பொருள்கள் உள்ளன. ஒன்று இயங்கும் பொருள், பிறிதொன்று இயங்காப் பொருள். இவ் வகைப் பாகுபாட்டைப் பார்க்கின் றோம்; பார்த்து உணர அறிவையும் வகுத்துள்ளான். அவ்வறிவு ஐம்பூத உடலின், ஐம்புலன் (பொறி,) வழி யாய்ப் பெறுகின்றன அறிவு. இவ்வைந்தறிவால் முளைத்த, கிளைத்த பகுத்தறிவையும் வகுத்து, இவை களைப் பற்றி முழு அறிவை உணர்வதற்குப் பழங் காலத்திலிருந்தே பலவகை நூல்களும் தோன்றின. அந்நூல்களும் பொருள் அடிப்படையில் வகுக்கப்பட் டுள்ளன. இவைகளைப் புறநிலையில் பார்ப்பதற்கு நம் கண்ணொளியும் புறக் கதிரொளியும் தேவை. கண் ணொளி மட்டுமிருந்து கதிரொளி இல்லையெனில் பொருள் களைக் காணமுடியாது. கண்ணொளியை உயிராகவும் கதிரொளியை இயற்கை ஆற்றலாகவும் கொள்ளலாம். இதுபோன்று இப்பூதங்கள் இவ்வுயிர் இவற்றின் தோற் றம் இயக்கம் மறைவு போன்றவற்றைக் கற்கும்போது அங்கே சமயங்கள் - மதங்கள் தோன்றுகின்றன. அவை களும் கூறுகின்ற கருத்தடிப்படையில் வகைப்படுத்தப் படுகின்றன. ஆனால் இச்சமயம் கடந்த மோன சமரச மும் அமைந்துள்ளது. இதை ஓர் உதாரணத்தால் காட்டலாம். வடமொழியில் இறைவனை வணங்கல் வேண்டுமென்றோ, தென்மொழியில்தான் வழிபடல் வேண்டுமென்றோ, உலகப் பொதுமொழியாம் ஆங் கிலத்தில் தான் ஆக வேண்டுமென்றோ இல்லை, பல மொழியினர் - நாட்டினர் ஒன்றாக இணைந்து நெஞ்சில்

நினைந்து நெக்குருகி மொழியின்றி மௌன வழிபாடாக வழிபடுகின்றோமே - இதுவே, 'சமயங் கடந்த மோன சமரசம்' என்று கூறலாம்.

நாம் தாயிடமிருந்து தோன்றியுள்ளோம். தாயின் பண்புகளை நமக்கு அவள் தரும் அன்பால் அருளால் செயலால் உணருகின்றோம். தாய்க்கு, நீ குழந்தை யிடம் அன்பு செலுத்து என யாராவது கூறுதல் வேண்டுமா? குழந்தையிடம் நீ தாயிடம் அன்பு செலுத்து எனச் சொல்லுதல் தேவையா? தேவை யில்லையே. இவை இயல்புணர்வுகள். தாயிடமிருந்து தோன்றிய நாம், தாயை உணர முயல்வது போல், இவ் வுலகைத் தோற்றுவித்த இயற்கையை - அறிய விழை கின்றோம். தாயை அணுகுதல் போல், உலகையும், இயற்கையையும் - இறையையும் அணுகுகின்றோம். அதற்குக் காரணம் தாயின் அருள்தானே. இவை யனைத்தையும் புறக்கண் இல்லாதவன் புறநிலையில் பார்க்க முடியாது. அகக்கண் இல்லான் அகநிலையில் நோக்க வியலாது. 'புறந் தூய்மை' - 'அகந் தூய்மை' என வள்ளுவர் பேசுவது இங்கு நினைக்கத் தக்கது.

அகந்தூய்மை வாய்மையால் காணப்படும். வாய்மை யில்லா அகத்தால் உண்மைக் காட்சியைக் காண வியலுமா? அதைத்தான், 'பொய்வளரும் நெஞ்சினர் கள் காணாத காட்சியே' எனப் பேசுகின்றார். அறி யாமை, இருள், மறப்பு, துன்பம் இந்நான்கைக் கொண்டுள்ள நாம் அறிவு, தெளிவு, நினைவு, இன்பம் என்ற முழுநிலையாக அமைந்துள்ள பொருளைப் பார்க் கின்றோம். அப்பொருள், நம்மைப் போன்று தோன்றி மறைகின்ற பொருள் அன்று; அந்தமும் ஆதியு மில்லாதது; முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம்பொருளாய் உள்ளது; பின்னைப் புதுமைக்கும் பெயர்த்தும் புதுமைப் பொருளாய் உள்ளது. இத்

தகைய பொருள் முழுநிலை யுடையது; பேரறிவுடையது; வரையறை யற்றது. அப்பொருளே முடிந்த பொருள்; பிரணவ ரூபத்தில் இருக்கும் பொருள்; அறிவெல்லை முடியும் நிலையிலுள்ள பொருள் எனப் பேசுகின்றார் தாயர். ஒவ்வொரு பாடலில் இயற்கை அல்லது இறைவன் தன்மையினையும், அதனைக் காணும் நோக்கம், விருப்பம் என்பன உடைய உயிர்கள் பற்றியும் பேசுகின்றார்.

ஐவகை எனும் பூதமாதியை வகுத்து அதனுள்
அசர சர பேதமான
யாவையும் வகுத்து நல்லறிவையும் வகுத்து மறை
ஆதி நூலையும் வகுத்துச்
சைவமுதலாம் அளவில் சமயமும் வகுத்து மேல்
சமயங் கடந்த மோன
சமரசம் வகுத்தநீ யுன்னைநான் அணுகவுந்
தண்ணருள் வகுக்க இலையோ
பொய்வளரும் நெஞ்சினர்கள் காணாத காட்சியே
பொய்யிலா மெய்ய ரறிவில்
போதபரி பூரண அகண்டிதா காரமாய்ப்
போக்குவர வற்ற பொருளே
தெய்வமறை முடிவான பிரணவ சொரூபியே
சித்தாந்த முத்தி முதலே.
சிரகிரி விளங்கவரும் தக்ஷிண மூர்த்தியே
சின்மயா னந்த குருவே.

எல்லாத் தீமைகட்கும் அடிப்படை பொய். 'ஒன்றாக நல்லது கொல்லாமை; மற்றதன் பின்சாரப் பொய்யாமை நன்று' என்பது வள்ளுவம். 'பொய்யாமை பொய்யாமை ஆற்றின், அறம்பிற செய்யாமை செய்யாமை நன்று' என்பதும் வள்ளுவர் வாக்கு. வள்ளுவர் கொல்லாமைக்கு முதலிடம் தந்தார். இளங்கோ 'வாய்மையின் வாழாது மன்னுயிர் ஓம்புநர்க்கு யாவது முண்டோ எய்தா அரும்பொருள்' என வாய்மைக்கு முதலிடம் தருகின்றார். வாய்மையுடையோருக்கு அனைத்தும் சித்தியாகும். உயிர் ஈடேறும்; மீட்புக் கிடைக்கும்.

தாயுமானுர், இந்தப் பிறவியிலேயே இறைவனை அடைய வேண்டும் என்ற துடிப்புடையவர் என்பதை அவர் பாடல்கள் காட்டுகின்றன. பிற சமயங்களையோ பிற கடவுளரையோ பழித்துப் பேசவில்லை. ஞான சம்பந்தர், நாவுக்கரசர், மணிவாசகர் போன்ருேரிடம் பிறமதப் பழிப்புண்மை வெளிப்படை. அதுபோன்றே, இவர் திருமால், பிரமன், இந்திரன் இவர்களைப்பற்றி மிகுதியாகக் குறிப்பிடவில்லை. மாருக, சைவமே சிறந்தது என்ற பொருள்படப் பேசுகின்ருர்.

உயிர் :

தாயர் பாடல்களில் உயிரின் தன்மை பற்றிய எண்ணங்கள் மிகுதியாக இல்லை. மலரின் மணம், எள்ளில் எண்ணெய், உடலில் உயிர் என அமைக்கின்ருர். ‘சொல்லரிய உயிரிடை’ என உயிரைச் சொல்லுதற்கு, விரித்தற்கு அரியதாகவே படைக்கின்ருர். ‘இகபரமிரண்டினும் உயிரினுக் குயிராகி எங்கும் நிறைகின்ற பொருளே’ எனவும் இறைவன் உயிருக் குயிராக இருக்கின்ருன் என்பதை ஏறத்தாழ 70 இடத்திலும் பேசுகின்ருர். ஆவியை இறைவனுக்கு நைவேத்தியமாக அளித்தல் வேண்டும் (8).

உயிர் எல்லாக் காலங்களிலும் இறைவனேடு இரண்டறக் கலக்கும் வரைச் செயற்படுகின்றது. சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் என்று ஐந்து நிலைகளிலும் எவ்வெக் கரணங்கள் எவ்வெவ்வாறு செயற்படுகின்றன என்பது பற்றித் தாயர் தரும் இரு பாடல்கள் உயிரியக்க நிலையினைச் சுட்டுகின்றது எனலாம்.

சாக்கிரமா நுதலினில் இந்திரியம் பத்துஞ்
சத்தாதி வசனுதி வாயு பத்தும்
நீக்கமில் அந்தக் கரணம் புருடனேடு
நின்ற முப்பான் ஐந்து நிலவும் ; கண்டத்து

ஆக்கிய சொப்பன மதனில் வாயுபத்தும்
அடுத்தன சத்தாதி வசனாதி யாக
நோக்கு கரணம் புருடன் உடனே கூட
நுவல்வர் இருபத்தைந்தா நுண்ணி யோரே
—ஆசை. 25.

சுழுத்தி இதயந்தனிற் பிராணஞ் சித்தம்
சொல்லரிய புருடனுடன் மூன்ற தாகும்
வழுத்திய நாபியில் துரியம் பிராணனோடு
மன்னு புருடனுங்கூட வயங்கா நிற்கும்
அழுத்திடு மூலந் தன்னில் துரியா தீதம்
அதனிடையே புருடனொன்றி அமரும் ஞானம்
பழுத்திடும் பக்குவர் அறிவர் அவத்தை ஐந்திற்
பாங்குபெறக் கருவி நிற்கும் பரிசு தானே
—ஆசையெனும். 26.

உடல் :

இவ்வுயிருக்கு இடமாக அமைவது உடல் என்பதை முன்பே நினைந்தோம். அவ்வுடல் பற்றிய தாயரின் எண்ணங்கள், இறையை மெய்ப் பொருளாகக் காட்டுவ தால், உடலைப் பொய்ப் பொருளாகக் காட்டுகின்றன.

இவ்வுடலை நாம் எப்பொழுதும் பார்த்துக்கொண்டே இருக்கின்றோம். இவ்வுடல் முதலில் அணு போன் றிருந்தது ; இன்று இந்த நிலைக்கு - $5\frac{1}{2}$ அடி உயரமும் 38 அங்குல அகலமுடைய மார்பையும் கொண்டு இயங்கு கிறது. உடல் சிறுவயது முதல் வளர்ந்து கொண்டிருக் கின்றது. உலக உயிர்கள் அனைத்தின் உடல்களும் ஒருநிலைவரை வளருகின்றன. குறுக்காக வளருகின்ற உடல்கள் இருக்கின்றன, மேல் நோக்கி வளருகின்ற உடல்களும் உள. குறுக்கே வளரும் உடலையுடைய உயிர்களை விலங்கு என்கிறோம். ஏற்கெனவே கூறியதன் படி, இவ்வுயிருக்குப் பாதுகாப்பாக இவ்வுடல் அமைந் துள்ளது. குழந்தை பிறந்த ஒரு மாதத்தில், ஒரு மீட்டர் துணியில் 12 சட்டை தைக்கும் நிலையில்தான் உடல் உள்ளது. இன்று $2\frac{1}{2}$ மீட்டர் தேவைப்படுகின்றது

ஒரு சட்டைக்கு. இது உடல் வளர்ச்சி. இதனுள் ஐம்புலன்கள் வழியில் வளர்ந்த அறிவு வளர்ச்சியும், உடல் வளர வளர வளர்ந்து கொண்டிருக்கின்றது, ஒரு நிலை வரை. ஆயின் இவ் வைம்புலன்களையும் அவற்றது அறிவையும் பகுத்து அறியும் பகுத்தறிவு அதன் பக்குவத்திற்குத்தக சிறந்த இடத்தைப் பெறுகின்றது.

ஏழு வயதுப்பையன் - ஜப்பான் நாட்டுப் பையன் ஒருவன் - அமெரிக்காவுக்கு எம். எஸ். ஸி. பௌதிகம் படிக்கச் சென்றான்; அது அவனுடைய பகுத்தறிவு வளர்ச்சியால். மூன்று வயதில் ஞானசம்பந்தர் பாடினார்; காரணம், பகுத்தறிவு வளர்ச்சியோடு உயிரோடிணைந்த ஆன்ம வளர்ச்சியே. 'ஒருமைக்கண் தான் கற்ற கல்வி ஒருவற்கு எழுமையும் ஏமாப்புடைத்து' என்பது வள்ளுவர் வாக்கு. உண்மையான கல்வி பிறவிதோறும் வருகின்றது. இவ்வுடல் மாறும் நிலையுடையது; தளரும் நிலையுடையது; அது ஆசைகளின் பெட்டகம். இவ்வாறெல்லாம் கூறுகின்றனர்; நாமும் அதைக் காண்கிறோம்,

'உடல் பொய்யுறவு' என்ற தனித் தலைப்பில் 83 வெண்பாக்களில் உடல் இயல்பு, அதன் நிலையாமை என்பனவற்றைத் தருகின்றார் தாயர். உடல் உயிரைத் தாங்குவதற்குரிய பாத்திரமே தவிர, உயிருக்கு உறவாகாது. உயிருக்கு உறவானது, உயிரினில் இருக்கும் இயற்கை இறந்த ஆற்றலே - மீமானுட இயல்பே. நம்மோடு தொடர்புடைய ஊர்கள் பல; தொடர்புடைய உறவுகள் பல. அதே போன்று நம் உயிரோடு தொடர்புடைய உடலங்களும் பல. அதனை, 'ஊர் அனந்தம் பெற்ற பேர் அனந்தம் சுற்றும் உறவு அனந்தம் தம் தம் வினையினால் உடல் அனந்தம்' எனக் காட்டுகின்றார். பல உடல்களையும் இவ்வுயிர் தம் வினைகளுக்குத்தகப் பெறுகின்றது.

'எண்ணரிய பிறவிதனில் மானிடப் பிறவிதான்
யாதனினும் அரிதரிது காண்
இப்பிறவி தப்பினுல் எப்பிறவி வாய்க்குமோ
எதுவரு மோவறிகி லேன் ... '

இம் மானிட உடல் பெறுகின்ற உயிர், நல்ல உயிரே ; நற் பிறவியே. பல்பிறவிகள் உண்மையை வள்ளுவமும் ஏற்றுக் கொள்கின்றது ; 'பிறவிப் பெருங்கடல்' 'எழுமை எழுபிறப்பும்' 'எழுபிறப்பும் தீயவை தீண்டா'. இவ்வாறு வருகின்ற பிறவியை அறுத்தற்கு இவ்வுடல் இருக்கும் போதே அவ்வுடலேப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்பது அறிவாளர் கருத்து. பட்டினத்தார் பிறப்பறுத்தல் வேண்டுமென இவ்வாறு பாடுகிறுர்.

மாதா உடல்சலித்தாள் வல்வினேயேன் கால்சலித்தேன்
வேதாவுங் கைசலித்து விட்டானே —நாதா
இருப்பையூர் வாழ்சிவனே இன்னுமோர் அன்னேக்
கருப்பையுள் வராமற் கா.

மனிதப் பிறவி, மனம் நினேவு இவற்றையுடைய பிறவி. தொடர்ச்சியாக எண்ணுகின்ற ஆற்றல் ஏனேய உயிர்களுக்கு இல்லே. 'ஆன்மா' மனிதப் பிறவிக்கு மட்டுமே உரியதென்பது பொதுக் கருத்து. அத்தகைய இப்பாத்திரமான உடலே எவ்வாறு பேண வேண்டும், எவ்வாறு வைத்துக் கொள்ளுதல் வேண்டும் என்பன பெருங் கேள்விகளாக அமைகின்றன. நாம் நம் உடலே எவ்வெவ்வாருக வெல்லாம் புறநிலேயில் பேணுகின்ருே மென்பதே நமக்குத் தெரியும். இதனேத் திருமூலர் மிகச் சிறப்பாகக் கூறியுள்ளார் :

உடம்பார் அழியின் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானஞ் சேரவு மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயர்வளர்த் தேனே

இவ்வுடல் மிக இன்றியமையாதது. இவ்வுடலோடும் இயற்கை நிலை முத்தி நிலை - இறைநிலை அடைய முடியும். 'இதனைக் கூண்டோடு கைலாசம்' என்ற சாதாரணச் சொற்றொடர் நமக்கு விளக்கிக் காட்டு கின்றது. இங்குக் கண்ணகியின் நிலையை நீங்கள் நினைத்துப் பார்க்கலாம்: 'கட்புலங் காண விட்புலம் போயது, இறும்பூது போலும்' என்று பேசுகின்றார். இதனைத் தத்துவ நிலையில் 'உருவமுத்தி' எனப் பேசுவார்கள். அதனைப் பின்னர் விளக்குவேன்.

அதனால், துறவியர் உடலைப் பழித்துத் தாழ்ந்த நிலையில் கூறிக்கொண்டிருக்கின்றனர் என எண்ண வேண்டாம். உடல், இயற்கையை அணுகும்போது, அந்நிலையில் எப்போதும் கர்ப்பூர வாசனையுடனேயே இருக்கும். தாயரின் உடல்பற்றிய கருத்தைக் கூறும் பாடல்களில் ஒன்றைப் பார்ப்போம்.

> உடலைப் பழித்திங்கு உணவும் கொடாமல்
> விடவிடவே நாடுவரோ மெய்யை — படபடென
> வேண்டுவேன் இந்தவுடல் மெய்யுணராப் பொய்யன்நான்
> ஆண்டநீ தானே அறி.

இதில் 'வேண்டுவேன் இந்த உடல்' என்றே பேசு கின்றார். நாவுக்கரசர், 'மனித்தப் பிறவியும் வேண்டு வதே இந்த மாநிலத்தே' என்று பாடிய பாடலும் இங்கு நினைவு கூரத் தக்கது.

இறைவனை அடையுமட்டும் இவ்வுடல் வேண்டு மென்பதே தாயர் எண்ணம். அறியாமை முழுவதை யும் அகற்றி அறிவாய் நின்று ஆனந்தமும் பெற்று, குறியே இன்றி இருந்தால் இவ்வுடல் வேண்டாம். அதுவரை இவ்வுடலை வேண்டுவல் என்றே பேசு கின்றார்.

அறிவில் அறியாமை அற்றறிவாய் நின்று
பிறிவற ஆனந்தமயம் பெற்றுக் — குறியவீழ்ந்தால்
அற்றைக் குடல் வேண்டாம் ஐயாஇவ் வாக்கையையே
எற்றைக்கும் வேண்டுவனே யான்.

நம் உடலைப் பயன்படுத்துகின்ற வழிகள் பல. உடலி லுள்ள உறுப்புக்களையும் இறைவனைக் காண, கேட்க, சுவைக்க, வழிபடப் பயன்படுத்துகின்றோம். அப்பரின் அங்கமாலை இங்கு நினைவுகொளத் தக்கது. 'கோளில் பொறியில் குணமிலவே எண்குணத்தான் தாளை வணங்காத் தலை' - எனக் கேளாத செவி போலவும் பார்க்க இயலாத கண் போலவும், வணங்காத - இறை வ(னை)னுக்கு வணங்காத - தலை பயனற்றது எனப் பேசுகின்றார் வள்ளுவர்.

தாயர், மௌன நிலையில் நிருவிகற்ப சமாதி நிலையில் இருப்பதற்கு இவ்வுடல் பயன்படவில்லை யெனில், இவ் வுடலால் என்ன பயன் என்று கேட்கின்றார். நிருவி கற்ப சமாதி என்பது மூச்சோட்டத்தையும், நெஞ்சத் துடிப்பையும் நிறுத்தி, இறந்த பிணம் போன்று இருக் கின்ற நிலை. ஒன்றுமற்று அவ்வாறு இருக்க இயலுமா என்று கேட்டால், 'ஆம்' என்பதே என் பதிலாக இருக்கும். இன்றும் ஆந்திராவில் 'பாலயோகி' என் றொருவர் இருக்கிறார். அரசின், ஆட்சியின் நேரடிப் பார்வையில் அவர் இருக்கின்றார். ஊண் உறக்கம் ஒன்றும் கிடையாது. ஆண்டுக் கொருமுறை, சிவ ராத்திரியில் அவரைப் பார்க்கலாம். இந்நிலை பெற்றால் தான் உடல் கர்ப்பூர மணத்தைப் பெறுகின்றது. இராமலிங்க சுவாமிகள் இந்தநிலை யுடையவர் என்ப தனைப் பலரும் அறிவார்கள்.

ஏதுக் குடற்சுமை கொண்டேன் இருந்தேன் ஐயனே
ஆதிக்க மோன அருள்தாயே — சோதியாம்
மன்ன நிருவிகற்ப ஆனந்த நிட்டையிலே
பின்னமற நில்லாத பின்.
சித்த நிருவிகற்பஞ் சேர்ந்தார் உடற்றீபம்
வைத்த கர்ப்பூரம்போல் வயங்கும் பராபரமே.

தாயுமானுர் இராமேசுவரத்திற்குச் சென்று போர்த்துக்கீஸியரைத் தம் ஆன்ம பலத்தாலும் ஆட்பலத்தாலும் வென்ற பின்பு ஒரு மரமடர்ந்த சோலையில் இந் நிருவிகற்ப சமாதியில் இருந்தார். அங்கு, மூச்சில்லை ; பேச்சில்லை ; ஒன்றுமற்ற நிலை. அவர் மீது மேலேநின்ற மரத் தழைகள், செத்தைகள் வீழ்ந்து அவரை மூடிவிட்டன. பழங் குப்பைகளாகிய செத்தைகளை எரித்தார்கள். எரித்தபோது அவரும் சேர்த்து எரிக்கப்பட்டார். தாம் எரிந்ததை உணர்ந்தார் என்பது ஒரு சாரார் கூற்று ; உணராதே அந்நிலையிலேயே சமாதி அடைந்தார் என்பது மற்ருெரு சாராார் கருத்து.

உடலின் இழிநிலையைப் பல்லுவமைகளால் விளக்குவதை நாம் உவமைகளின் கீழ் முன்பே கண்டோம்.

இவ்வுடல் பொய்யுடலே. ஒன்பது வாயில்களும் அழுக்கு நீரும் உடைய உடலே ; இருப்பினும் இது தேவை.

பொய்யெல்லாம் ஒன்ருய் பொருத்தி வைத்த பொய்யுடலை
மெய்யென்ருல் மெய்யாய் விடுமோ பராபரமே
மின்னனைய பொய்யுடலை மெய்யென்று நம்பி ஐயோ
உன்னை மறக்க நெறியோ பராபரமே
நித்தியமென் றில்லாத நீர்க்குமிழி போன்ற வுடற்கு
இத்தனைதான் துன்ப முண்டோ பராபரமே
உண்டோ நமைப்போல வஞ்சர் — மலம்
ஊறித் ததும்பும் உடலை மெய்யென்று
கொண்டோ பிழைப்பதிங் கையோ — அருட்
கோலத்தை மெய்யென்று கொள்ள வேண்டாவோ ?

எனப் பலபல பாடல்களில் உடலின் நிலையாமை நினைக்கப்படுகின்றது. நிருவப் படுகின்றது.

உடலை வருத்தும் துறவு வாழ்க்கை தேவை என்பது தாயர் கருத்தன்று. துறவால் வாழ்வு சிறக்கும் என்றும் அவர் பேசவில்லை. தானும் மெய்ப் பொருளை உணர்ந்த பின்பு, இல்லறத்திலிருந்து துறவுக்கு வந்தவர்.

மிக இனிமையான இல்வாழ்வு, அறவாழ்வு வாழ்தல் வேண்டும், அவர் வாழ்ந்தது போல். அவ்வாறு வாழும் போதும், அதன் அழியும் தன்மைகளில் நாட்டம் கொள்ளலாகாது; ஆழ்ந்துவிடக் கூடாது. மாருக, என்றும் நின்று நிலைபெற்றுத் தன் தண்ணருளைப் பொழிகின்ற, இயற்கை இறந்த ஆற்றலுடைய சக்தியை இடையருது நினைத்துக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதே அவர் வேண்டுகோள்.

கொந்தவிழ் மலர்ச்சோலை நன்னிழல் வைகினும்
குளிர்தீம்புனல் கை அள்ளிக்
கொள்ளுகினும் அந்நீரிடைத் திளைத்தாடினும்
குளிர்சந்த வாடை மடவார்
வந்துலவு கின்றதென முன்றிலிடை உலவவே
வசதிபெறும் போதும் வெள்ளை
வட்டமதிப் பட்டப்பகற் போல நிலவுதர
மகிழ்போதும், வேலை அமுதம்
விந்தை பெற அறுசுவையில் வந்ததென அமுதுண்ணும்
வேளையிலும் மாலை கந்தம்
வெள்ளிலை அடைக்காய் விரும்பி வேண்டிய வண்ணம்
விளையாடி விழி துயிலினும்
சந்தமும் நின் அருளை மறவாது வரந்தந்து
தமியேனை ரட்சை புரிவாய்
சர்வ பரிபூரண அகண்ட தத்துவமான
சச்சிதா னந்த சிவமே

இறைவன் உயிருக்குயிராய் இருக்கின்ருன். ‘உயிருக்குயிராய் எந்நாளும் ஓங்கா நிற்பர்’ (ஆகார. 14) உயிர்களுடைய எண்ணிற்கு அளவில்லை யாதலாலும், எண்ணிறந்த உயிர்கட்குத் தலைவன் இறைவனொருவனே யாதலாலும், ‘அளவிலாத ஆருயிர்கட்கோருயிராய் அமர்ந்தாய்’ (ஆசை. 12) எனச் சுட்டுகின்ருர். எல்லாத் தத்துவங்கட்கும் வேருக நிற்கும் நம் உயிரினை நாம் அறிதல் தேவை என்பர் தாயர்.

தத்துவமாம் பாழ்த்த சடவுருவைத் தான் சுமந்த
சித்துருவாம் எம்மைத் தெரிசிப்ப தெந்நாளோ
(எந். தன். 3)

இதிலிருந்து தத்துவங்கள் யாவும் சடமென்பதும், உயிர் அவற்றின் வேருகிய அறிவுப் பொருள் என்பதும் தெரிகின்றன.

உடலுக்கு உயிர் இன்றியமையாதது. உயிர் ஈடேற்றத்துக்குத் தடையாக அமைவது மனம்; மும்மலங்களாலும் மாயையாலும் இறைக்கும் உயிருக்கு மிடையே திரையமைத்து விடுகின்றது.

இம்மனத்தின் இயல்புகளும் செயலும் பற்றி மிகப் பலவிடங்களில் பேசுகின்ருர் தாயர். மெய்ப்பொருளை உணராவண்ணம் அமைகின்றது மனம். அதுவே பக்குவப்படும்போது மெய்ப்பொருட்கு இடம் ஆகின்றது.

உலகப்பற்று மில்லாது கடவுட்பற்று மில்லாது நின்றவிடத்து மனம் கேவல நிலையில் விழுந்துவிடும்.

> பற்றி னதைப் பற்றும் எந்தாய் பற்றுவிட்டாற் கேவலத்தில்
> உற்றுவிடு நெஞ்ச முனே ஒன்றிநிற்ப தெப்படியோ
>
> —பலவகை. *18*

எல்லாவிதமான நினைவிற்கும் மனம் இடமாக விருக்கின்றது. உலகிற் கண்டவற்றை மனம் தன்னில் பதிவு செய்து, உயிர் மீண்டும் அவற்றை நினைப்பதற்குக் காரணமாயிருக்கின்றது. இவற்ருல் அதனைப் பெரியதொரு மாயா தத்துவமாகக் கூறுகின்றனர். மனத்தை ஒடுக்காது உலகத்திற் செல்ல விட்டால், அது அலைந்து எங்கெங்குந் தாவிச் சென்று அறிவுடைப் பொருளாகிய உயிருக்கும் பல்வகை இன்னல் விளைத்து அதனைச் சீர்குலைக்கும் (எந். தத். 5; பரா. 172, காடுங். 1. கல்லால். 4) என்பது தாயர் கருத்து.

இதயம், உள்ளம், நெஞ்சம், நெஞ்சு, நெஞ்சகம், மனம் போன்ற சொல்வடிவங்கள் ஒரு பொருள் குறித்து வருவனபோல் தோன்றுகின்றன. ஆயின்,

'தொடக்குமென் னெஞ்ச மனமற்ற பூரணத்
தொட்டிக்குளே' — பாயப். 12.

என்ற தொடர், நெஞ்சம் என்பதன் உள்ளிருந்து அதனைச் செலுத்தி ஆட்டிப்படைப்பது மனம் என்ற எண்ணத்தை உருவாக்குகின்றது. எனினும் இதனை விளக்குதல் எளிதன்று.

'மனம்' இல்லாத, இழந்த நிலையைத் தூயநிலை எனத் தாயர் கருதுவது தெரிகின்றது. இந்த 'இன்மை', மனதின் செயலற்ற நிலையாக இருக்கவேண்டும். இதனைத் தாயர் பாடல்களின் சில அடிகள் தெளிவுறுத்துகின்றன. மறிந்த மனமற்ற மவுனம் செறிந்திடவே ... (உடல், 76.)

உள்ளதே போது நானுனெனக் குளறியே
யொன்றைவிட் டொன்று பற்றிப்
பாசக் கடற்குளே வீழாமல் மனதற்ற
பரிசுத்த நிலையை யருள்வாய் .. பரிபூரண. 10

வாடுதலு மற்றுமே லொன்றற் றிரண்டற்று
வாக்கற்று மனமு மற்று ...... சின்மயா. 8

மனமில்லை அம்மனத் தினமில்லை வேறுமொரு
வரவில்லை போக்கு மில்லை ...... ஆனந்த. 10

இத்தகு, மனதற்ற பரிசுத்த நிலை பெற வழியும் கூறுகின்றார் நம் தாயர். ஆசை யறுத்தல், யோகம், பிராண லயம் என்பனவற்றால் இந்நிலை உறும் என்பது தெரிகின்றது.

பற்றுவன வற்றிடு நிராசை யென் றொருபூமி
பற்றிப் பிடிக்கு மியோகப்
பாங்கிற் பிராணலய மென்னுமொரு பூமியிவை
பற்றின் மனமறு மென்னவே ... சுகவாரி. 6.

இவ்வாறு, மனதை இல்லாமற் செய்தல், செயலற்ற தாக்குதல், உயர்நிலை அதாவது முத்திக்கு முன்படிநிலை எனலாம்.

மனதை இல்லாமலாக்குவது மிகக் கடினம் என்பது மேற்கூறிய பாடலடிகளால் தெளிவுறுகின்றது. மனதை அடக்குவதும் (ஆனந்த. 4) ஒத்த நிலையில் கடினமான செயலே.

பல்வகைப் பற்றுக்கள் உடையது மனம். அது, ஒன்றைவிட்டு ஒன்றைப்பற்றி யுழல்கின்றது (மௌன. 10); ஒன்றை நினைந்து ஒன்றை மறந்து ஓடுகின்றது. (பரா. 87). அந்த உறழ்ச்சியையே விதவிதமாகப் படைக்கும்போது பலகோணக் காட்சியாக மனம் தென்படுகின்றது. தெருளாகி மருளாகி யுழலுவது அதன் இயல் (ஆனந்த. 2); சாண் வயிற்றின் பொருட்டாக மண்டலமும் விண்டலமும் மொன்றாகி மன துழன்று மயங்குதலும் உண்டு (ஆனந்த. 3). அம் மறுகிச் சுழலும் மனக்குரங்கு மாள வேண்டும் (ஆசை. 13) எத்தனை விதங்கள் தான் கற்றாலும் கேட்டாலும் எந்தன் இதயம் ஒடுங்கவில்லை (ஆனந்த. 9); கல்லாத மனம் ஒடுங்கி யுபரதி பெற வியலாது (எங்கு. 8); அம் மனதென்பது தன் வசமாய் வராது நிற்பதாக எடுத்து மொழிகின்றார் (தள்ளை. 5) தாயர். பலமுறை எடுத்துக் கூறினும் உணராது அமைகின்றது மனம் (ஆசை. 8; எண்ணாத தெண்ணித் துயருறுகின்றது (பாயப். 13); பொல்லா மயக்கத்தில் ஆழ்கின்றது, பயனற்று அமிழ்கின்றது (பாயப். 45); தன்னை அடுத்து வந்த எல்லாவற்றினையும் பற்றிக் கொள்கின்றது (பாயப். 49) நிலையாமைக் கருத்தைத் தன் அறிவில் வைத்துக் கொள்ளாத புன்மை நெஞ்சு அது (பாயப். 51) மெய்யைப் பொய்யெனவும் பொய்யைத்தான் மெய்யெனவும் கூறும் இயல்புடைய அந்நெஞ்சை, மெய்யனையாப் பொய்ந்நெஞ்சு எனல் (உடல். 67) ஏற்புடைத்தே. அத்தகு நெஞ்சின் பின்னே ஓடலால் பயன் இன்று (காடுங். 1); அக்குணமிலா மனம் எனும் பேய்க் குரங்கின் பின்னே மாறாத கவலையுடன் சுழலும் வண்ணம் எனை ஏன் வைத்தாய் (கல்லா. 4)? அந் நெஞ்சமோ ஆயிரஞ்

சொன்னாலும் அறியாத வஞ்ச நெஞ்சமாய் இருக்கின்றது (பரா. 195); ஒன்று மறியா அவ்விருளாம் உள்ளம் (பரா. 300), வன்னெஞ்சம் (பைங். 32), நாதரைச் சேர்ந்து வாழும் வாழ்வை இழக்கச் செய்கின்றது என வருந்துகின்றார் தாயர்.

பல சிறு சிறு தொடர்களாலும் அடைகளாலும் மனத்தின் பல்வேறு உணர்வுகளை - செயல்களை எடுத்து மொழிதல் அடிகள் இயல்பு. மனிதனின் செயற்பாட்டிற்கனைத்தும் மனமே காரணம்; அவன் வினைக் கூட்டிற்கும் அதுவே அடிப்படை (வினை ...... மனதால் விளைந்ததால் - சச்சி. 10) என்பன இவ் விளக்கங்களால் தெரிகின்றன.

அச்சம் என்பது மனத்தின் ஒரு பண்பு. உயிரச்சம், அதாவது மரணம் வருமென்ற எண்ணத்திற்கே அஞ்சுமச்சம், 'தேக நீங்குமென வெண்ணிலோ நெஞ்சம் துடித் தயருவேன்' (பரிபூரண. 1) எனச் சுட்டப்படுகின்றது. 'இறப் பொடு பிறப்பை யுள்ளே எண்ணினல் நெஞ்சது பகீரெனும்' (சின்மயா. 5) அவ் வெண்ணத்தால் இரவு பகல் உறக்கமின்றி யிருந்தன இருவிழிகள் என்கிறார். வினைப் பந்தத்தால் உள்ளம் பதைபதைக்கிறது (சுகவாரி. 11). இறைவனை நெருங்கும்போது, 'படபடென நெஞ்சம் பதைத்து உள்நடுக்குற' (கருணா. 9) அமைந்தமையையும் காட்டுகின்றார்.

இவ்வாறு அஞ்சும் உள்ளம், கள்ளமும் நிறைந்தது; மனக் கள்ள மெத்தனை (ஆனந்த. 1) பொய்வளரும் நெஞ்சு (சின்மயா. 4), கள்ள மனத் துறவு (நினைவு. 6) கள்ளம் பொருந்து மடநெஞ்சு (பாயப். 41);

வஞ்சமும் நிறைந்தது - 'கண்டாய் வஞ்ச நெஞ்சே' (ஏசற்ற. 3) அறியாத வஞ்ச நெஞ்சு (பரா. 195) மறப்பு நினைப்புமாய் நின்ற வஞ்ச, மாயா மனம்

(ஆனந்த. 11) களம்பெறு வஞ்ச நெஞ்சினர் (ஆரணம். 3); ஆழாழி யென்ன வளவுபடா வஞ்ச நெஞ்சப் பாழ் ... (எந். மாத. 11)

இவையும், இன்னும் வேறு பல்விதத் தீமைகளும் இம் மனத்திற்குடைமை அங்கங்கே தொகுத்தும் சுட்டப்படுகின்றது. எல்லாம் தீமையும் வல்லது அது (எங்கு. 4).

கொலை களவு கட்காம மாட்சியாக்
காதலித் திடு நெஞ்சமும் —மௌன. 9
வஞ்சனை பொறாமை லோபம்
வைத்த மனமாங் கிருமி —தேசோ. 3
வஞ்சனை யழுக்கா றுதி வைத்திடும் பாண்ட மான
நெஞ்சனை —வம்ப. 4
ஏதமிகு
மோகாதி மல்லலிலே மூழ்கினையே நெஞ்சே — உடல். 17
வஞ்சனையும் பொய்யு முள்ளே வைத்தழுக்கா றுயுளறும்
நெஞ்சனுக்கு .... —பரா. 40

இவ்வாறு தொகுத்துத் தருவனவற்றையே அங்கங்குத் தனியே தரலும் காணப்படுகின்றது. இவை அவர் உணர்ச்சிப் போக்கில் மனம் பற்றிக் குறிப்பிட்டன வாகவும் கருத்தாழத்துடன் கூறியனவாகவும் உள.

மனக் கோதகற்றும் பரம்பொருளே —பாயப் 16
அழுக் கார்ந்த நெஞ்சுடையேன் —பாயப் 34
அற்ப மனமே —உடல் 13
அல்லேறு நெஞ்சன் —உடல் 15
பாழ் நெஞ்சே —தன்னை 1
ஏங்கி யிடையு நெஞ்ச ஏழை —பரா 319
மனதின் பண்புமோ சற்றுமிலை —மலைவளர் 6
பேரின்பமோ சேரவென்றாற் கள்ள
மனதுமோ மெத்தவுஞ் சிந்திக்குது —மலைவளர் 6
எள்ளத்தனையு மிரக்கமிலா வன்பாவி
உள்ளத்து —காண் 17

மாசான நெஞ்சினவன் வஞ்சன் —பலவகை 6

பொய் குவித்த நெஞ்சன் —பரா. 292

அழுக்காற்று னெஞ்ச மழுங்கிய புன் மாக்கள். பரா.—297

என வருகின்றன.

தன்னையே நொந்து கொள்ளுநிலையிலும், தன்னெஞ்சினை அறிவுறுத்து நிலையிலும் மனதின் செயல்கள், விளைவுகள் என்பன தெரியவருகின்றன.

அறிவு வயப்பட்ட மனது, தெளிவாகச் சிந்திக்கும் இயல்பினது. தெளிந்த அறிவு நிலையில் மனதிருக்கும் போது, இடையே மடமை பகையாக வந்து புக, சிந்தனை தெளிவற்றுத் தேவையற்று நீளுகின்றது. மலம், மாயை, கன்மங்கள் மீண்டும் வருமோ? பிறப்புத் தொடருமோ? - என்பனவே அச் சிந்தனைகள் (பரிபூரண. 5). தெளிவான நினைவில் இறைவன் குடி கொண்டிருப்பதாகத் தாயர் எண்ணுகின்றார் போலும்.

யாது மன நினையு மந்த நினைவுக்கு நினைவாக
யாதின் பாலும்
பேதமற நின்று
தீதில் பரமானந்த சித்தாந்த பேரொளியைச்
சிந்தை செய்வாம். —பொருள். 2

இக்கருத்து,

நெஞ்சத்தி னூடே நினைவாய் நினைவூடும்
அஞ்சலென வாழுமென தாவித்துணை நீயே
—திடமுறவே. 8

என்பதாலும் விளக்கமுறுகின்றது. கள்ள மனதின் சிந்தனை பற்றி முன்பும் நினைந்தோம் (மலைவளர், 6). இறைவனை யன்றி நினைவுமட்டுமன்று நெஞ்சமே இல்லை என்ற கருத்தும் தாயர் பாடலில் உண்டு (பரா. 210)

இம் மனது நிகழ்பவைக் கணைத்தும் சாக்ஷியாகவும் நிற்கிறது (பரிபூரணு. 8), அவ்வாறு அது நிற்கு நிலையும் தந்தது இறையே என்பது தாயர் கருத்து. அவ்விறைவனுலேயே அம் மனமலர் மொக்கவிழ்கின்றது (பொருள். 3); மணம் கமழ்கின்றது; அடியர் மனம் மகிழ்கின்றது (மௌன. 2); மனம் குறைகள் தீர் கின்றன. (மௌன. 8). மனக் கிலேசம் மாறுகின்றது (பொன்னே. 16; வம்பனேன். 6) மயக்கம் நீங்குகின்றது (பொன்னே. 51) மனம் பல செயல்களைச் செய்யும் இயல்பினது. சிறு போதையைப் பெரிதாக்கும், நீண்ட காலம் நிலை நிறுத்தும்; மிகச் சாதாரணமான இவ் வுலகை ஏதோ உலகமென எண்ணச் செய்யும்; சிற் றின்பமே உயர்ந்ததெனத் தவருக உணர்த்தும்; தேவையற்ற சுமையைச் சுமக்க நமையாளாக்கித் தான் சும்மாடு ஆகும்; அதோடு நில்லாது, நாளும் துர்ப் புத்தி புகுத்தி நற்புத்தியைச் சூறையிட்டு இந்திர ஜாலக் கோலம் காட்டும் (சச்சி. 4). பொன், புவி, மடப் பூவையரை மெய்யெனக் காட்டி நம்மைக் கவர்ந் திழுக்கும் (தன்னே. 1). வாதனை பெருக்கும்; வசம் செய்து துன்மார்க்க போதனை செய்யும் (கற்புறு. 4). பள்ளம் தோறும் புனல் பரவுவது போல, அவ்வுள்ளம் உலகிலெல்லாம் பரக்கும் (பலவகை. 10).

இத்தகு செயல்களுடைய நெஞ்சை, அளவளாவு நெஞ்சாகவும் (மௌன. 10), துன்றும் கவலை பொருந் திய தாகவும் (ஆகார. 30) சட மொத்த தாகவும் (நினைவொன்று. 9) உகந்து நேசிக்கு நிலையிலும் (பொன்னே. 17) நன்னர் நெஞ்சாகவும் (ஆசை யெனும். 24) அடியார் தொடர்பு கிடையாமையால் வாடிய நெஞ்சாகவும் (திடமுறவே. 7) நேய நெஞ் சாகவும் (எந். அன்பர். 10) பழுத்த மனமாகவும் (எந். அன்பர். 11) காட்டுகின்றுர் தாயர்.

மனம் அறியாமையுடையது. எனவே மடநெஞ்சம் எனப்படுகின்றது (நினைவொன்று. 4; ஆசையெனும். 8, 11; பாயப்புலி. 17). சில நிலைகளில் திண்மையும் வலியும் உடையது (எந். அடியார், பைங். 32). வன்மை இழந்து குழையும்போது, உள்ளிருந்த கள்ளம் குழைகின்றது (பரா. 361); உள்ளக் கொதிப்பு அகலும்போது இறைவன் கருணை பூக்கின்றது (பரா. 368). வன்னெஞ்சத்தால் இழந்த வாழ்வு மீண்டும் கிடைக்கின்றது.

இறைவன் குடிபுகும் போது, அகண்டவெளியாம் அவனைப்போன்றே மனமும் வெளியாகின்றது (பொருள். 10). அப்பர வெளியின் உண்மை காட்டும்போது அது பற்றுவிட்டு மனவெளி யாகின்றது (சுகவாரி. 8). இந்நிலைக்கு முன்னோடியாகப் போலும் அது செயலிழக்கு நிலையில் பலியாகின்றது (கருணு. 8)

இவ்விறை நிலையடைய, மனம் பல படிநிலைகளைக் கடக்கின்றது. முதற்படியாக, அவ்வுயர்வுக்கு இதயம் ஏங்குகின்றது; அருகணைதல் கிட்டாமையால் வாடுகின்றது.

எந்தநாள் கருணைக் குரித்தாகு நாளெனவு
மென்னிதய மெனை வாட்டுதே —சுகவாரி. 11
இனியே தெமக்குனருள் வருமோ வெனக்கருதி
யேங்குதே நெஞ்ச மையோ —சச்சி. 5
புண்ணுளர் போனெஞ்சம் புலம்பி யுள்ளே
நீராள மாயுருகிக் கண்ணீர் சோர —ஆகார. 24

அடுத்ததாக விருப்பத்தை வெளியிடுகின்றது,

கையினுற்றொழு தேத்திக் கசிந்துளம்
மெய்யி னுலுனைக் காண விரும்பினேன். —பொன்னை. 59

தன்னிலையை எடுத்து மொழிகின்றது.

...கற்பகமே சோதியே தொண்டனே னின்னை
இரந்து நெஞ்சுடைந்து சண்டுயில் பெரும லிருந்ததும்
—ஆரணம் 5

..........வினைத்

> தடையாற் றளையிட்டு நெஞ்சம் புண்ணாகத் தளர
> —பாயப்புலி 55
> எண்ணாத எண்ணமெலா மெண்ணியெண்ணி
> யேழைநெஞ்சம்
> புண்ணாகச் செய்தது போதும் ... ... —பரா. 33

குறைகளைச் சுட்டி, விழைவை எடுத்து மொழிகின்றது.

> அருண் மோன வள்ளலையே — நித்தமன்பு
> பூணக் கருது நெஞ்சு ... —உடல். 29
> அடிமை மனம் விகசிப்பது எந்நாளோ .... சித்தர். 8

என இவ்வாறு பல்நிலைகள் கடந்து தீதற்ற நெஞ்சத்தில் இறைவன் வீற்றிருக்கின்றான். நல்லோர் நெஞ்சம் மன்றாக இறைவன் இன்பக் கூத்தாடல் (பன்மாலை. 8 ; எனக்கென். 12) பற்றிய குறிப்பு இதனைத் தெளிவுறுத்தும். இறையமிர்தத்தை நெஞ்சக் கிண்ணத்தில் பருகும் அந்நிலையை அழகாகச் சித்திரிக்கின்றார் தாயர்.

> ... ... கோதிலா அமிர்தமே நின்னை
> வாட்டமில் நெஞ்சங் கிண்ணமாச் சேர்த்து
> வாய்மடுத் தருந்தின னாங்கே .... ஆசை. 39.

நெஞ்சம், இதயம், உள்ளம் என்பன பெரும்பாலும் நற்பண்புகளுடன், நன்மையுடையனவாக - சிறந்தவையாகவே காட்டப்படுகின்றன. ‘மனம்’ என்பது அவ்வாறு அன்றி எதிரிடையாகவே காட்டப்படுகின்றது என ஓரளவுக்குக் கூறலாம்.

நான் - நீ யென்று இரண்டிலை எனக் கூறி நடுவே முளைத்த மனதைக் கட்டவியலாது வாடும் நிலை உண்டு. (கருணா. 4). இத்தகு மனதைச் சாராமைக்கு வழியொன்றுண்டு. இறைவன் அருளும் அறிவின் நிருவிகற்பாங்கமாம் சாசுவத நிட்டையே அது (சச்சி. 1). மனமாயையைக் குடிகெடுக்க, முற்றிலும் அழிக்க இறைவனாலேயே இயலும் (பன்மாலை. 3) அந்நிலையில்

நெஞ்சம் தேட்டம் அற, இறைவனின் அருட்செயலில் நிற்றல் வேண்டும் (ஆசையெனும். 3) மனம் தன்னுடைய வழியற்று என்னுழை கிடப்ப இறைவன் தண்ணருள் வேண்டும் என்பர் (ஆசை. 40). அந்நிலையில் மன அழுக்குகளை நீக்கி இறைவன் அவன் விருப்பப்படித் தனக்கருள வேண்டுகின்றார் (எனக்கென். 1). மாயை தரு மனம் தன் புரைகள் தீரும் போதுதான் உயிர் ஈடேற்றம் பெற முடியுமென எண்ணுகின்றார் (மண்டலம். 8). அம் மனமற்ற நிலையில் பரமானந்த வெள்ளம் பெருகும் (பாயப். 12); பூரண நிட்டையில் ஆழ முடியும் (பாயப். 24).

வாழ்க்கையின் பிறப்பையும் இறப்பையும்கூட மனத்தை வைத்து விளக்குகின்றார்.

> மறக்கின்ற தன்மை இறத்தலொப்பாகு மனம தொன்றிற்
> பிறக்கின்ற தன்மை பிறத்தலொப் பாகும். —பாயப். 47.

இதனாலேயே, இப் பேய்ப்பிறவி இருக்கின்ற பிறக்கின்ற எல்லைகட்களவில்லை என்றும் மொழிகின்றார். எனவே உடல்நிலை பிறப்புக்கு அப்பால் ஒரு மனநிலைப் பிறப்பிறப்பு இருக்கும் உண்மையும் புலப்படுகின்றது,

நெஞ்சமே - மனமே இப் பிறப்பிறப்புக்கு அடிப்படையாயினமையைப் பிறிதொரு பாடலும் நிறுவும்.

> உன்னை உடலை உறுபொருளைத் தாவெனவே
> என்னை யடிமைக் கிருத்தினன் — சொன்னவொரு
> சொல்லை மறவாமற் றேய்ந்தால் நெஞ்சே உன்னால்
> இல்லை பிறப்பதெனக் கே. —உடல். 71

குரு சொன்ன சொல், 'மௌனம்' என்பது மிகத் தெளிவான கருத்து. எனவே, பிறப்பற வேண்டுமானால், குரு சொற்படி நிற்றல் தேவை என்பது பெறப்படுகின்றது.

மோன குருவளித்த மோனமே யானந்த
ஞான வருளுமது நானுமது — வானதி
நின்ற நிலேயுமது நெஞ்சப் பிறப்புமது
என்றறிந்தே னனந்த மே. —உடல். 75

நெஞ்சச் சுத்தம் உடற்பிறவியை அறுப்பதைப் பிறி தோர் இடத்தும் சுட்டுவர் தாயர்.

நித்தன் பரமகுரு நேசத்தாற் — சுத்தநிலே
பெற்ருேமே நெஞ்சே ! பெரும்பிறவி சாராமற்
சுற்ருேமே மோனக் கரு. —உடல். 83

இதே உய்தி நிலேயை, மனமிறத்தல் என்பதாகத் தாயர் நினேத்தமையை முன்பு சுட்டினேம். அவர் பாடல் முழுமையிலும் இக் கருத்து பயின்று வருகின்றது.

'நான்' எனும் ஆணவ மயக்கம் இருக்கும் வரை, மனம் இறையோடு கலந்த வெளி யாவதில்லே. அத்தகு மாய மனம் இறக்கும்போது, மாயை விலகும் போது ஞானசுகம் கிடைக்கின்றது.

வைத்த மவுனத்தாலே மாயை மனமிறந்து
துய்த்துவிடு ஞான சுகம். — உடல். 81

மனம் இறக்கும் போது, மவுனம் மட்டுமே மீந்திருக் கின்றது. (மறிந்த மனமற்ற மவுனம் - உடல். 76)

இத்தகு மனத்தைத் தாயர் வென்றமையை அவர் கூறுவது, வாழ்க்கை வரலாற்றுச் செய்தியாக அமை கின்றது எனில் மிகையாகாது.

உள்ளபடி யாதுமென வுற்றுணர்ந்தே னக்கணமே
கள்ளமனம் போனவழி காணேன் பராபரமே — பரா. 75

அந்நிலேக்கு முன்நிலேயாக மனதைப் போக்கலின் தேவையும், அதை அறியாமையும், அறியாமல் அலேந்து மையும் அவரால் அழகுறச் சுட்டப்படுகின்றன.

சினமிறக்கக் கற்றாலுஞ் சித்தியெல்லாம் பெற்றாலும்
மனமிறக்கக் கல்லார்க்கு வாயேன் பராபரமே— பரா. 169
பூராய மாய்மனதைப் போக்க அறியாமல் ஐயோ
பாரா யலைந்தே னரசே பராபரமே — பரா. 168.

மனம் இறத்தல் - இழத்தல் பற்றித் தாயர் பேசும் போது, மனம் ஒரு நிலையற்ற - நிலையாமையுடைய பொருள் எனத் தோன்றுகின்றது; அதாவது மெய்ப் பொருளல்லாத, மெய்ப்பொருளிலிருந்து மாறுபட்ட ஒரு பொய்ப் பொருள் என. உயிர், உடலில் இணையும் போது அல்லது புகும்போது மனமும் அங்கே தங்கி விடுகின்றது; உயிர் உடலோடு கலந்திருக்கும் கால மனைத்தும் மனதும் அங்கேயே குடியிருக்கின்றது. அந் நிலையில் இறைவன் சித்தாக அவற்றை நடத்துகின்றான் போலும்.

எந்நாளு முடலிலே யுயிரா முனைப்போ
  லிருக்க விலையோ மனதெனு
மியானு மென்னட்பாம் பிராணனு மெமைச்சடம
  தென்றுனைச் சித்தென்றுமே
அந்நாளி லெவனோ பிரித்தான் .... சுகவாரி. 12.

அறிவு மனத்தைச் செலுத்தும் போது, மனம் எதிர்க் கிறது; ஏசுகின்றது. இடையே அகப்பட்ட நெஞ்சம் கருகுகின்றது; இறையருளை நாடுகின்றது.

.... அதைக்கேட்ட
  வன்றுமுத லின்று வரையு
மறியாய மாயெமை யடக்கிக் குறுக்கே
  யடர்ந்தரசு பண்ணி யெங்கண்
முன்னாக நீயென்ன கோட்டை கொண்டாயென்று
  மூட மன மிகவு மேச
மூண்டெரியு மனலிட்ட மெழுகா யுளங்கருகன்
  முறைமையோ பதினுயிரஞ்
சொன்னாலு நின்னரு ளிரங்கவிலை யேயினிச்
  சுகம்வருவ தெப்படி சொலாய் ... சுகவாரி. 12.

இத்தகைய மனவேறுபாடுகள் ஒழியும் போதுதான் அல்லல் ஒழிகின்றது ; பேரின்பம் கிடைக்கின்றது.

ஒருமை மனதாகியே யல்லலற நின்னருளி
லொருவனுன் வந்திருக்கின் ... ... எங்கு. 17
பிறியாத தன்னருட் சிவஞானி யாய்வந்து
பேசரிய வாசி யாலே
பேரின்ப வுண்மையை அளித்தனை யென் மனதறப்
பேரம்பலக் கடவுளாய் ... தேசோ. 6

அதற்குப் பல்வகையில் இறையை வேண்டுகின்றார். வேண்டியமை கிடைக்கும் போது, மனம் தனக்கென வழியற்று ஓய்ந்து கிடக்கின்றது (ஆசை. 40) அந்நிலையில் இறைவன் விருப்பப்படி யனைத்தும் ஆகின்றது (எனக் கென். 1). அதற்கு மவுனம் மவுனம் என்று சொன்னால் போதாது ; மவுனங் கடைப்பிடிக்கப்படல் வேண்டும் ;

சொல்லால் மவுனமவுன மென்றே சொல்லிச்
சொல்லிக் கொண்ட
தல்லான் மனமறப் பூரண நிட்டையி லாழ்ந்த துண்டோ
— பாயப், 24

கல்வியால் இவ்வுயர்வு கிடைத்ததெனக் கூறின் நெஞ்சம் கொதித்தெழும் (பரா. 37) அந்நிலையில் அது தீயுண்ட மெழுகுபோலப் பக்குவப்படுகின்றது (பாயப். 21). சின்முத்திரையையே மெய்யாகத் தெளிகின்றது (பாயப். 42) உள்ளம் ஞான ஒளி பெறுகின்றது (உடல். 44) மனம் மதிப்பிழந்து விடவேண்டும். (உடல். 72. 4)

மெய்ப் பொருளோடு யானிருக்கும்போது நெஞ்சம் போய் ஒலிக்கின்றது (ஏசற்ற. 9) இறைவன் தண்ணருள் கிடைத்த விடத்து, நெஞ்சம் தேடினாலும் காணப்படாது (ஏசற்ற. 10).

இத்தகு மனவடக்கத்தால் கிடைப்பன பல. அவற்றை எடுத்து மொழிவர் தாயர்.

வட்ட மிட்டொளிர் பிராண வாயுவெனு
　　நிகள மோடுகம னஞ்செயு
மனமெ னும்பெரிய மத்த யானையையென்
　　வசம டக்கிடின் முமண்டலத்
திட்ட முற்ற வளராச யோகமிவன்
　　யோக மென்றறிஞர் புகழவே
யேழை யேனுலகி னீடு வாழ்வனினி
　　யிங்கி தற்குமனு மானமோ
பட்ட வர்த்தனர் பராவு சக்ரதர
　　பாக்ய மானசுப யோகமும்
பார காவிய கவித்வ நான்மறை
　　பராய ணஞ்செய்மதி யூகமும்
அட்ட சித்தியுந லன்ப ருக்கருள
　　விருது கட்டியபொ னன்னமே …… அகிலாண்ட : 1

உள்ளத்தினுள்ளே சிவானந்த வெள்ளம் ஊறுகின்றது (எந். ஆனந்.) மயக்குறு மனம் மயக்கம் தீர்கின்றது (கல். 24) நெஞ்சம் இளகிக் கரைந்து அன்புருவாய் நிற்கின்றது (பரா. 21).

இத்தகு சிறப்புகட்கெல்லாம் காரணமாக உள்ளத்திற்கு அறிவுரைகள் கூறும் நெஞ்சறிவுறூஉப் பாடல்கள் பல அமைந்தமை, பிறர் மன வீடேற்றத்திற்கும் வழிகாட்டி அமைகின்றன (பொன்னை. 73, 77; ஆசை. 8; பாயப். 23, 35, 50, 51, 57; உடல். 5, 23, 70; ஆனந்தக். 25; ஏசற்ற. 1, 3, 5, 6. 8 முதலியன)

உயர்நிலை: இறைவன் அல்லது இயற்கையொடு இரண்டறக் கலக்கும் நிலையாகும்.

தாயுமானுர் முத்தி, சித்தி எனப் பல விடங்களில் பேசுகின்றுர். இறைவனைச் 'சன்மார்க்க முத்தி முதலே' என விளிக்கின்றுர். முத்தியாவது யாது? முக்தி என்ற வடசொல் விடுதலை என்னும் பொருளது. மோஷம், முக்தி என்பன ஒரு பொருட் கிளவிகள்.

முத்தி என்பது நிலை முன்னுறு சாதனம்
அத்தக என்ற என் அருட்பெருஞ்சோதி எனவும்

சித்தி என்பது நிலை சேர்ந்த அனுபவம்
அத்தக என்ற என் அருட்பெருஞ் சோதி எனவும்

இராமலிங்க அடிகள் விளக்கியுள்ளனர். மேலும் அவர் "புடையுறு சித்தியின் பொருட்டே முத்தியை அடைவது என்ற என் அருட்பெருஞ்சோதி" என்கிறார். ஆதலின் முத்தி என்பது ஒரு நிலை, அதாவது தளைகளினின்றும் விடுதலை பெற்ற நிலை ஆகும். சித்தி என்பது அந்த முத்தி நிலைக்கண் சேர்ந்த அனுபவம் ஆகும்.

தேகம் யாதேனு மொரு சித்திபெறச் சீவன்முத்தி
ஆளுநெறி நல்ல நெறி ஐயா பராபரமே

தாயர் தேகமிசை யாதேனும் ஒரு சித்தியைப் பெறுதல் வேண்டும் என்பார். அதிலும் நமது இப்பூதவுடலிடத்தே மூவகையான சித்திகளைப் பெறக்கூடும் என்கிறார். அவை அருவச்சித்தி, உருவச்சித்தி, அருவுருவச் சித்தி எனப்படும். இவற்றுள் மணிவாசகப் பெருந்தகை அருவச்சித்தி பெற்றவர் என்றும், அப்பர் மூர்த்திகள் உருவச்சித்தி எய்தினர் என்றும், ஞான சம்பந்தர் அருவுருவச்சித்தி யடைந்தனர் என்றும் கூறுப. தாயர் இவற்றுள் யாதானுமொரு சித்தி யடைய விழைந்தனர். ஆண்டவனை வேண்டுகின்றார். மேல்நிலை அனுபவங்களைப் பல படியாகப் பேசுகின்றார். சிந்தையும் மனமும் செல்லாத பேரனுபவ நிலைகளை எல்லாம் விரித்துப் பாடுகின்றார். எனினும் அவரது வேண்டுகோளை ஒரு திருப்பாவிலே வைத்துக் காண்பாம்:

இன்னம் பிறப்பதற்கு இடமென்னில் இவ்வுடலம்
இறவாதிருப்ப மூலத்
தெழும் அங்கி அமிர்தொழுகுமதி மண்டலத்திலுற
என்னம்மை குண்டலினிபால்
பின்னம் பிறக்காது சேயென வளர்ந்திடப் பேயேனை
நல்க வேண்டும்

பிறவா நெறியெனக் குண்டென்னின் இம்மையே
பேசுகர்ப்பூர தீபம்
மின்னும் படிக்கு மகண்டாகார அன்னைபால்
வினையேனை ஒப்புவித்து
வீட்டுநெறி கூட்டிடுதல் மிகவும் நன்று, இவையன்றி
விவகாரம் உண்டென்னிலோ
தன்னந்தனிச் சிறியன் ஆற்றிலேன் போற்றிவளர்
சன்மார்க்க முத்திமுதலே
சர்வ பரிபூரண அகண்டதத்துவமான சச்சிதானந்த சிவமே

இப்பாடலில் முதற்கண் தாயர் இறவா நிலையை வேண்டிக் கேட்கின்றார். " இறவாமை ஈந்தா னென்று ஊதூது சங்கே " என்பார் வள்ளலார். இறவாமை என்பது ஒரு புதிராக உள்ளது இந்நாளில். " கூற்றங் குதித்தலுங்கை கூடும் நோற்றலின் ஆற்றல் தலைப் பட்டவர்க்கு " என்பார் வள்ளுவர். நமது பண்டைய செந்தமிழ் இலக்கியங்கள் இறவா நிலையைப் பேசாமல் இல்லை.

தலைமகனது இலக்கணம் சொல்ல வந்த இறையனார் களவியல் உரை,

" பிணிமூப்பு சாக்காடு இலனாய் " என்கிறது, நமது உடம்புக்குத் தமிழ்மகன் சொன்ன பெயர் " மெய் " என்பதாகும். இது பொய்படாது நிலைக்கும்; இதனைப் பொய் என்று சொன்னவன் யாவன்? என்று சுத்த சாதகம் என்ற வீர சைவ நூல் விவரிக்கின்றது.

தவம் செய்மாக்கள் தம் உடம்பு இடாஅது
அதன் பயன் எய்திய அளவை மான

என்று பொருநராற்றுப்படை 91-92 பேசுகின்றது. பதிற்றுப் பத்து மூன்றும் பத்தில் இறவாமை சிறப்பித்துப் பேசப்படுகின்றது. மூன்றும் பத்து பாடிய புலவர் பாலைக் கௌதமனார் தமக்குப் பரிசிலாகத் தாமும் தமது பத்தினியும் உடம்பொடு துறக்கம் புக வேண்டுகின்றார். பாடிப்பெற்ற பரிசில்: நீர் வேண்டியது

கொண்மின் என யானும் என்பார்ப்பனியும் சுவர்க்கம் புகல் வேண்டும் என, பார்ப்பாரில் பெரியோரைக் கேட்டு ஒன்பது பெருவேள்வி வேட்பிக்க, பத்தாம் பெருவேள்வியில் பார்ப்பானையும் பார்ப்பனியையும் காணுராயினர். செய்வித்தவன் இமயவரம்பன் தம்பி பல்யானைச் செல்கெழு குட்டுவன்.

" மலர்தலை உலகத்து உயிர்போகு பொதுநெறி
புலவரை பிறந்தோய் போகுதல் பொறேன் "

மாடலமறையோன்.

கம்பர், உடலோடு சுவர்க்கம் எய்துவதை மூன்று இடங்களில் கூறுகின்றுர். அவற்றில் ஒன்று தசரதன் மந்திரப் படலம். தசரதன் தனது அவைக்களத்திலே இராமனுக்குப் பட்டம் சூட்டி மகிழ எண்ணுகிறேன் என்று கூறியவுடன், அவையோர் எல்லாம் உடம்பொடு துறக்கம் எய்தியவரை ஒத்தனர் என்பார்.

இறைவன் சொல் எனும் இன்னறவு அருந்தினர் யாரும்
முறையில் நின்றிலர் முந்துறுகளியிடை மூழ்கி
நிறையும் நெஞ்சிடை உவகை போய் மயிர் வழிநிமிர
உறையும் விண்ணகம் உடலொடு எய்தினர் ஒத்தா
(கம்பர்: அயோத்தி — மந்திரப்படலம்: 74)

சீவக சிந்தாமணி முத்தி யிலம்பகத்தில் சீவகனது தேகம், தீபம் வைத்த கற்பூரம் போன்று கரைவதாயிற்று என்று பேசுகின்றது.

தாயர், உலக நெறிபோல் சடலம் ஓய உயிர் முத்தி இலகும் எனல் பந்த இயல் பேபரா பரமே என்று பேசுகின்றுர். இறைவன், உயிர் முதலியன, என்றும் அழியாத நிலைத்த பொருள்கள். இவ்வாறுக உலகமிசை உடல் விழ உயிர் எங்ஙனம் முத்தியடையும் என்று வியக்கின்றுர். இவ்வாறு உடம்பை விடுத்த உயிர் முத்தியடையுமென்பது பந்தமுள்ளவர்கள் பேச்சாகும் என்று முடிவு கட்டுகின்றுர். மணிவாசகரும்,

"............... மண்மேல்யாக்கை விழுமாறும் வந்து உன்கழற்கே புகுமாறும் அண்ணு எண்ணக் கடவேனே அடிமை சால அழகுடைத்தே" என்று ஆண்டான் அடிமைத் திறத்தை எள்ளி நகையாடுகின்ருர்.

நாவுக்கரசரும்,

துறக்கப்படாத உடலைத் துறந்து வெம்தூ துவரோடு
இறப்பன், இறந்தால் இருவிசும்பு ஏறுவன், ஏறீவந்து
பிறப்பன், பிறந்தால் பிறையணிவார் சடைப்பிஞ்ஞகன்பேர்
மறப்பன் கொலோ என்று என் நெஞ்சம் கிடந்து மாழ்கிடுமே

என்கிருர். அதாவது இவ்வுடம்பு துறக்கப்படாதது என்கிருர்.

இவையன்றி நமது செந்தமிழ் நாட்டிலே ஓர் உல கியல் வழக்கம் உண்டு. யாரேனும் ஒருவர் இறந்து விட்டால், " அவர் தவறி விட்டார் " என்று சொல்வார் கள். செத்துப் போனவர் எதிலிருந்து தவறிவிட்டார் என்பதைச் சற்று சிந்திக்க வேண்டும். இறவாத நெறி ஒன்று உண்டு ; அதிலிருந்து அவர் வழுவி விட் டார் என்பதுதானே அதன் பொருள்

அதனுல் தாயர் இறைவனைக் கேட்கிருர். இவ்வுலகி லிருந்து விடுபட்டு உன்னை அடைவதற்கு எனக்கு ஒரு முதல் நிலை விடுதலை (First Class Passport) வேண்டும். அதுதான் இறவாமை. அதனை அடியேனுக்குக் கொடுப்ப தாக இருந்தால் மூலத்து எழும் அங்கியாகிய குண்டலி அம்மையை எழுப்பி எனது உடம்பில் உள்ள மேல்நிலை அனுபவ நிலைக்களமாகிய உச்சி (தலை) யில் விளங்கும் மதிமண்டலத்துக்கு ஏற்றிவிடுவாயாக என்கிருர். அப் போது இவ்வுடல் இறவாமை எய்தி உயிர் உன்னை ஒன்றி அத்துவிதமாய்க் கலக்கும் - அப்பிற் கலந்த உப்புப் போல - இது அண்மையில் நிகழ்ந்த ஒரு நிகழ்ச்சி. இதற்கு வேண்டிய சான்றுகள் இதோ.........

30—11—70 - தினமணி.
30—11—70 - தினமலர்.

உத்ரப் பிரதேசத்தில் ஒரு சிறு கிராமத்திலுள்ள ஒரு சாது, கோகுலாஷ்டமியன்று குண்டலினி சக்தியால் தன்னையே எரித்துக் கொண்ட செய்தி கூறப்பட்டுள்ளது.

மேலும் தாயர் கேட்கிறார், "சன்மார்க்க முத்தி முதலே! ஒருக்கால் எனக்கு இந்த இறவாமை ஈதற்கு முடியவில்லையானால், அடுத்த நிலை விடுதலை (Second class passport) யாவது கொடு. அதுதான் பிறவாமை. இங்ஙனம் பிறவாமை கொடுக்க எண்ணுதியேல் அடியேனை அகண்டாகார அன்னைபால் சேர்த்து தீபம் வைத்த கற்பூரம் போல் என்னைக் கலந்து கொண்டு "வீட்டு நெறி கூட்டிடுதல் வேண்டும்" என்கிறார். பிறவாமை நெறிக்கு, நிர்விகற்ப சமாதி நிலையைப் பெற வேண்டும்'

சித்தி நிர் விகற்பம் சேர்ந்தார் உடல்; தீபம்
வைத்த கற்பூரம் போல் வயங்கும் — பராபரமே : 245

சமாதிநிலை இருவகையானது. ஒன்று விகற்ப சமாதி; மற்றொன்று நிர்விகற்ப சமாதி. நிர்விகற்ப சமாதி நிலையில் மூச்சு ஓடாது, சுவாசம் நின்றுவிடும். இருதயம் கூட நின்றுவிடும். இதனை இந்நாளைய விஞ்ஞானம் தெளிவாக விளக்கும். நாம் மூச்சு விடும்போது (கரிவளி) கரியமிலவாயு வெளிப்படுகின்றது. பிராணவாயு (உயிர்வளி) மூச்சு உட்கொள்ளும்போது உள்ளே செல்லுகிறது. உள்ளே புகும் உயிர்வளி, நுரை ஈரலில் சிறு சவ்வுகளின் ஓரமாக இருதயத்திலிருந்து பாய்ச்சப் படும் கெட்ட ரத்தத்தை (Venus blood) நல்ல ரத்தமாக மாற்றி விட்டு, கரியமில வாயுவாக வெளிப்படுகின்றது. தூரிசு நீக்கப்பட்ட நல்ல ரத்தம் திரும்பவும் சக்தி வெளிப்பாட்டினால் (Energy release) கெட்ட ரத்தமாகி விடும். ஆகவே, உடம்பில் உண்டாகும் எந்த விதமான அசைவினுக்கும் சக்தி பிறக்க வேண்டும்.

சக்தி பிறப்பதால் கரியமில வாயு உண்டாகி வெளிப்பட வேண்டும். அசைவற்றநிலை உண்டாகுமாயின் (மன அசைவு கூட) கரியமில வாயு உடம்பில் உண்டாகாது. அப்போது அது வெளிப்பட வேண்டா; பிராணவாயு உட்புகவும் வேண்டா. அப்போது மூச்சு நின்று விடும். அதனால் கெட்ட ரத்தமே உண்டாகாத நிலையில் இருதயம் குருதியைப் பாய்ச்ச வேண்டுவதில்லை. ஆகவே இருதயமும் நின்று போகும். அப்போது பாழான மனம் குவிந்துவிடும். உயிர் இறைவனைப் பற்றி நிற்கும். எவ்விதமான அசைவுமில்லாத மோன நிலை கைகூடும். இதற்குத்தான் நிர்விகற்ப சமாதிநிலை என்று பெயர். இச் சமாதிநிலை கைகூடுமாயின் பிறவா நிலை பெற்று உய்யலாம். இதுவன்றி விகற்ப சமாதி நிலை ஒன்றுண்டு. அதனை விவேகானந்தர் (trans) என்று கூறுகின்றார். இதுநிற்க. தாயர் ஒரு வேளை நிர்விகற்ப சமாதி கைகூட முடியாமல், அதனால் பிறவாமையை அடியேனுக்குத் தர முடியவில்லை எனின் - ஐயகோ - விவகாரமுண்டெனில் யான் என் செய்வேன்? அடியேன் ஆற்ற மாட்டேன் என்று முழுநிலையில் (complete surrender) சரணகதி யடைகின்றார்.

இவ்வாறு உயிரானது தான் எடுத்த இவ்வுடலினின்றும் பிரிந்து இறையை அடைவதற்கு இம்மனித உடல் தேவை என்பது வலியுறுத்தப்படுகின்றது. மானிடப் பிறவியில் இதனைச் செய்ய இயலும். உயிரின் நோக்கமே - பயனே, இறைவனை அடைதல்தான். அதன் நோக்கத்தைப் பயனை அடையாவிடின், உயிரால் என்ன பயன்? நமக்கு முன் வாழ்ந்த தாயுமானவர் போன்ற பெரியோர்கள் கூறிய நெறி நின்று, கிடைத்தற்கரிய மானிடப் பிறவி எடுத்ததன் பயனை அடைவோமாக!

தாயுமானவர்

தாயுமானவர் கால அட்டவணை

கி. பி. 1704 விஜயரங்க சொக்கநாதர் மகுடாபிஷேகம்·
,, 1705-7 தாயுமானவர் சுபஜனனம்.
,, 1723 கேடிலியப்பர் சிவப்பேறு
,, 1731 விஜயரங்க சொக்கநாதர் பரமபதம், மீநாட்சி அரசாளத் தொடங்கியது,
,, 1736 தாயுமானவர் துறவு, மீநாட்சி பரமபதம்
,, 1742 தாயுமானவர் பரிபூரணம்.

கேடிலியப்பப் பிள்ளை சற்றேறக்குறைய 170 வருஷங்களுக்கு முன்பாகவே இருந்தார் என்று அவரது பிரபௌத்திரராகிய அம்பலசுவாமி 1835-ல் எழுதுவித்திருக்கிறுர்.

நாயக்கமன்னர் திருமுடியடைவு (சரித்திரப்படி)

நாகமன், 1559
|
விசுவநாதர் 1, 1559—63
|
குமாரகிருஷ்ணப்பர், 1563—73
|
இலிங்கையகுமார கிருஷ்ணப்பர் 1595—1602 | விசுவப்ப விசுவநாதர் 1595—1602
|
முத்துகிருஷ்ணப்பர். 1602—09
|
முத்துவீரப்பர், 1609—23 | திருமலை, 1623—59 | குமாரமுத்துவீரப்பர்
|
முத்து அளகாத்திரி, 1659—62
சொக்கநாதர், 1662—82
= மங்கம்மாள், 2689—1704
|
அரங்ககிருஷ்ண முத்துவீரப்பர். 1682—89
= பத்மாசனி
|
விஜயரங்கசொக்கநாதர், 1704—31
= மீநாட்சி அம்மாள் 2731—36
|
குமாரமுத்துத் திருமலை (ஸ்வீகார புத்திரர்)

பங்காரு திருமலை
|
குமாரமுத்துத் திருமலை

எண்	தலைப்பு	யாப்பு	கூறும் பொருள்	பாடல் எண்	வரி	பெயர்க் காரணம்	பிற குறிப்பு
1	திருவருள் விலாசப் பரசிவ வணக்கம்	பன்னிரு சீர் ஆசிரியவிருத்தம்	இறை வணக்கம் (அஞ்சலி)	3	12	பொருள்	—
2	பரிபூரணானந்தம்	,,	இறையியல்பு, சிறப்புக்களைப் புகழல், தன்நிலை உணரல்; உதவ வேண்டல்	10	40	முடியுந் தன்மை	பாடலனைத்தும் ஈற்றுப் பகுதியில் ஒத்து அமைந்தன
3	பொருள் வணக்கம்	1-10: 6 சீர் ஆ. வி. 11-12: 8 சீர் ஆ. வி.		12	48	வணங்குவாம் என்னும் பொருளால் முடிகின்றமை	
4	சின்மயானந்த குரு	பன்னிரு சீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்	தன்நிலை உணரல்; முறையீடு	11	44	முடியுந் தன்மை	ஈறொப்பு
5	மௌனகுரு வணக்கம்	,,	தன்நிலை கூறல் ; குரு வணக்கம்	10	40	முடியுந் தன்மை	,,
6	கருணாகரக் கடவுள்	,,	தன்நிலை உணர்ந்து, மீளுட்சிக்கு முறையிடல்	10	40	முடியுந் தன்மை	,, ,,

எண்	தலைப்பு	யாப்பு	கூறும் பொருள்	பாடல் எண்	வரி	பெயர்க் காரணம்	பிற குறிப்பு
7	சித்தர் கணம்	பன்னிரு சீர்க் கழிநெடிலடி ஆ. விருத்தம்	தன்நிலை கூறல் முறையீடு	10	40	முடியுந் தன்மை	ஈரெுப்பு
8	ஆனந்த மானபரம்	,,	,,	10	40	முடியுந் தன்மை	,,
9	சுகவாரி	12 சீர். ஆ. வி.	,,	12	48	சுகவாரியே என்று முடிதலால்	,,
10	எங்கு நிறைகின்ற பொருள்	,,	இரங்க வேண்டல்	11	44	எங்கு நிறைகின்ற பொருளே என்று முடிவதால்	,,
11	சச்சிதானந்த சிவம்	,,	இரங்கல் ; நிலைகூறல்	11	44	சச்சிதானந்த சிவமே என்று முடிகிறது	,,
12	தேசோமயானந்தம்	12 சீர். ஆ. வி.	,,	11	44	தேசோ மயானந்தமே என்ற ஈற்றடியால்	,,
13	சிற்சுகோதய விலாசம்	12 சீர். ஆ. வி. (14 சின் ஆ. வி.)	இரங்கல்; நிலைகூறல் வேண்டல்	10	40	சிற்சுகோதய விலாசமே என்னும் இறுதி அடி	,,

எண்	தலைப்பு	யாப்பு	கூறும் பொருள்	பாடல் எண்	வரி	பெயர்க் காரணம்	பிற குறிப்பு
14	ஆகார புவனம்-சிதம் பர ரகசியம்	8 சீர். ஆ. வி.	இறையைப் புகழல் ; சிறப்பித்தல்	33	132	முதல் பாடலின் முதல்சீர் இரண்டு சீர்கள்	அந்தாதி மண்டலம்
15	தேன்முகம்	அறுசீர்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்	இழிநிலை கூறல் ; கலக்கவேண்டல் (அந்நாள் எந்நாள்)	10	40	முதல் பாடலின் முதலிரு சீர்கள்	,,
16	பன்மாலை	எண்சீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்	இழிநிலை கூறல் ; கலக்கவேண்டல் (அந்நாள் எந்நாள்)	10	40	,,	,,
17	நினைவொன்று	8 சீர். ஆ. வி.	இறை—புகழ் தத்துவம் (?)	9	36	,,	,,
18	பொன்னை மாதரை	க. வி. (அந்தக் கலிவிருத்தம் நேர்-11 ; நிறை 12)	தன்நிலை கூறல் ; உய்வு வேண்டல் ; அறிவுறுத்தல்	78	312	முதல் பாடலின் முதலிரு சீர்கள்	,,
19	ஆரணம்	எழுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்	வேண்டல், வணங்கல் தனை ஆண்டமை கூறல்	10	40	முதல் பாடலின் முதல் சீர்	,,
20	சொல்லற்கரிய	அறுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்	அள அருள வேண்டல் போற்றல்	10	40	முதல் பாடலின் முதல் இருசீர்கள்	,,

எண்	தலைப்பு	யாப்பு	கூறும் பொருள்	பாடல் எண்	வரி	பெயர்க் காரணம்	பிற குறிப்பு
21	வம்பனேன்	அறுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்	யான் இழிநிலையேன் நீயாளுநாள் எந்நாள் ?	10	40	முதல் பாடலின் முதல் சீர்	அந்தாதி மண்டிலம்
22	இவன் செயல்	1—2 அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் 3—107 சீர். ஆ. வி.	இழிநிலை கூறல், மறவாதிருக்க இறையை வேண்டல்	10	40	,,	,,
23	தன்னையொருவர்	அறுசீர்க் கழி நெடிலாசிரிய விருத்தம்	புகழ்தல் ; வேண்டல்	10	40	முதல் பாடலின் முதலிரு சீர்கள்	,,
24	ஆசையெனும் 6 சீர் 1, 2. 4, 8—16, 32...33, —36 7 சீர் 37, 40. 7 சீர் 7, 24, 26. க. வி. 3, 5. க. து. 6, 17, 20. 22, 23, 27, 31, 34, 35.	—	,,	40	160	முதல் பாடலின் முதல் சீர்	

எண்	தலைப்பு	யாப்பு	கூறும் பொருள்	பாடல் எண்	வரி	பெயர்க் காரணம்	பிற குறிப்பு
25	எனக்கெனச் செயல்	கலி (நிலை) த் துறை	தன்னிலை கூறல் ; இறை—புகழ் முறையீடு	28	112	முதல் பாடலின் முதலிரு சீர்கள்	
26	மண்டலத்தின்	அறுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்	இறைவன் யார் எனும் தத்துவ விளக்கம்	11	44	முதற்பாடலின் முதல் சீர்	அந்தாதி ; மண்டிலம்
27	பாயப்புலி	கட்டளைக் கலித்துறை	இறை வணக்கத்திற்கு ஏங்கல் ; வேண்டல் ; புகழல்	59	236	முதல் பாடலின் முதல்சீர், இரண்டாவது சீரின் முதல் அசை	
28	உடல் பொய்யுறவு	நேரிசை வெண்பா 2 வி.	தத்துவம் (?)	83	332	முதல் பாடலின் முதல் சீர், இரண்டாவது சீரின் முதல் அசை	
29	ஏசற்ற அந்நிலை	கொச்சகக் கலிப்பா	நெஞ்சிடம் கூறல்	10	40	முதல் பாடலின் முதல் சீர் இரண்டாவது சீரின் முதலிரண்டு அசைகள்	,,
30	காடுங்கரையும்	அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்	உலகோருக்கு அறிவுரை	3	12	முதல் பாடலின் முதலிரண்டு சீர்கள்	ஈறெுப்பு

எண்	தலைப்பு	யாப்பு	கூறும் பொருள்	பாடல் எண்	வரி	பெயர்க் காரணம்	பிற குறிப்பு
31	எடுத்த தேகம்	கட்டளைக் கலிப்பா		2	8	முதற்பாடலின் முதலிரண்டு சீர்கள்	ஈறொப்பு
32	முகமெலாம்	கலித்துறை		1	4	முதல் பாடலின் முதற் சீர், இரண்டாம் சீரின் முதலசை	
33	திடமுறவே	கொ. கலி.	தன்னிலைகூறல்; இறையை வேண்டல்	10	40	முதற் பாடலின் முதற் சீர்	,,
34	தன்னை	தரவு கொச்சகக்கலி		1	4	,,	
35	ஆக்குவை	6 சீர். ஆ. வி.		1	4	,,	
36	கற்புறு சிந்தை	,,	முறையீடு	7	28	முதற் பாடலின் முதலிரு சீர்கள்	,,

37	மலைவளர் காதலி	12 சீர். ஆ. வி.	புகழ்தல்	8	32	எல்லாப் பாடல்களிலும் இறுதி அடியில் பத்தாவது சீரின் இறுதி அசை. பதினொன்றாவது சீர் பன்னிரண்டாவது சீரின் முதல் அசை	ஈறொப்பு
38	அகிலாண்ட நாயகி	14 சீர். ஆ. வி.	புகழ் பாடல்	1	4	முதற் பாடலின் பதினொன்றாவது சீரின் இறுதி அசை, பன்னிரண்டாவது சீர் பதின் மூன்றின் முதல் அசை	
39	பெரியநாயகி	12 சீர்.	,,	1	4	பாடலின் ஈற்றயற்சீர்	
40	தந்தைதாய்	தாழிசை (8 சீர்.)	புகழ்தல், முறையீடு	7	28	முதல்பாடலின் முதற் சீர்	அந்தாதி
41	பெற்றவட்கே	,,	முறையீடு	11	44	,,	,,
42	கல்லாவின்	,,	,,	30	20	,,	அந்தாதி மண்டிலம்

எண்	தலைப்பு	யாப்பு	கூறும் பொருள்	பாடல் எண்	வரி	பெயர்க் காரணம்	பிற குறிப்பு
43	பராபரக் கண்ணி	கண்ணி	புகழல்; முறையிடல்	389	778	பராபரமே என்று முடிவதால்	ஈரெதுப்பு
44	பைங்கிளிக் கண்ணி	கண்ணி	இரங்கல் (காமம் மிக்க கழிபடர் கிளவி); தூ. து.	58	116	பைங்கிளியே என்று முடிகின்றது	,,
45	எந்நாட் கண்ணி	,,		11	12	எந்நாளோ என்று முடிகின்றது	,,
	க. தெய்வ வணக்கம்						
	உ. குருமரபின் வணக்கம்			13	26		
	ங. அடியார் வணக்கம்			9	18		
	ப. யாக்கையைப் பழித்தல்			11	22		
	ரு. மாதர்மயக் கறுத்தல்			15	30		

எண்	தலைப்பு	யாப்பு	கூறும் பொருள்	பாடல் எண்	வரி	பெயர்க் காரணம்	பிற குறிப்பு
	சு. தத்துவ முறைமை			27	54		
	எ. தன் உண்மை			8	16		
	அ. அருளியல்பு			18	36		
	கூ. பொருளியல்பு			19	36		
	10. ஆனந்த இயல்பு			14	28		
	11. அன்பு நிலை			17	34		
	12. அண்டர் நெறி			12	24		
	13. அறிஞர் உரை			14	28		
	14. நிற்கு நிலை			28	56		
46	காண்பேனோ என் கண்ணி	கண்ணி		37	74	காண்பேனோ என்று முடிவதால்	ஈரெதுப்பு
47	ஆகாதோ என் கண்ணி	,,		21	42	ஆகாதோ என்று முடிவதால்	,,
48	இல்லையோ என் கண்ணி	,,		6	12	இல்லையோ என்று முடிவதால்	,,

எண்	கட்டுரை	ஆசிரியர்	பத்திரிகை, நூல்	தொகுதி-பக்கம்		ஆண்டு	பிற குறிப்பு
49	வேண்டாவோ என் கண்ணி	கண்ணி		6	12	வேண்டாவோ என்று முடிவதால்	ஈருெப்பு
50	நல்லறிவே என் கண்ணி	”		4	8	நல்லறிவே என்று முடிவதால்	”
51	பலவகைக் கண்ணி	”		24	48		
52	நின்றநிலை	தாழிசை		3	6	முதற் பாடலின் முதற்சீர்	
53	பாடுகின்ற பனுவல்	வஞ்சி விருத்தம்		5	10	முதல் பாடலின் முதற்சீர்	
54	ஆனந்தக் களிப்பு	சிந்து—முந் நாற்சீ ரிரட்டை (பல்லவி—முந்நாற்சீரொற்ற)	தன் இன்பநிலை தலைவி தோழிக் குரைத்தல்	30		அமைப்பு	அந்தாதி மண்டிலம்

55	அகவல்	நிலைமண்டில ஆசிரியம் (இ. கு. ஆசிரியம்)	இறை வாழ்த்து	1	38	யாப்பு	
56	வண்ணம்	வண்ண விருத்தம்	சிற்றின்பம் நீக்க மனதை வேண்டல்	1	8 (கலை) 4 (அடி)	யாப்பு	
				1452 1	4127		
					(4126 1)		

எண்	கட்டுரை	ஆசிரியர்	பத்திரிகை, நூல்	தொகுதி-பக்கம்	ஆண்டு	பிற குறிப்பு
1	தாயுமானவர் தத்துவ விசாரம்	யா. நா. கதிரைவேற் பிள்ளை	ஞான போதினி	சம்புடம் IV புத்தகம் II பக். 401	1901 ஜூன் (1900-1901)	
2	தாயுமானவர் தத்துவ விசாரம்	,,	,,	சம்புடம் V பக். 3.	1901 ஆகஸ்டு (1901-1902)	
2-பி	தாயுமானவ சுவாமிகள் வரலாறும் அவர் மதக் கொள்கையும்	கல்குளம் குப்புசாமி முதலியார்	செந்தமிழ்	Vol. III பக். 474-479 Vol. IV	1904-1905 1905-1906	
2-சி	Tayumanavar-His life and Teachings and Mission		The light of Truth of the Siddhanta Dipika and Aganic Review	Vol. XI No. 8 P. 371	Feb. 1911	
3	தாயுமானுரும் அவரது அத்வைதமும்	வி. பி. காந்திமதிநாத பிள்ளை	சித்தாந்தம்	பக். 9-24	1913 மே	
4	தாயுமான சுவாமிகள் மதம்	—	சைவம்	மலர் 3. பக். 186	1917	
5	தாயுமானவர் பாடல் முதற் செய்யுள் விருத்தியுரை	புரசை அஷ்டாவதானம் மகா வித்வான் சபாபதி முதலியார்	சைவம்	மலர் 5. பக். 170-183	1919	
6	ஸ்ரீமத் தாயுமான சுவாமிகள் திருவருள் விலாசப் பரசிவ வணக்கவுரை	,,	சைவம்	இதழ் 10, 11	1919 அக்டோபர்	
7	தாயுமானவர்	ஸ்ரீமான் டி. ஆர். ராஜகோபால் ஐயர்	தமிழர் நேசன்	6-ம் தொகுதி பக். 223, 237, 249, 268	1922-23	
8	தாயுமானவர்	ப. அ முத்துத் தாண்டவராய பிள்ளை	கலைமகள்	தொகுதி 1	1932	
9	தாயுமானவர்-குருதுதி	,,	,,	தொகுதி 2 பக். 703, 813,	1932	
9-பி	தாயுமானவர் மடல் (இலக்கியம்)	—	ஞானசம்பந்தம்	—	1949 ஜனவரி	

எண்	கட்டுரை	ஆசிரியர்	பத்திரிகை, நூல்	தொகுதி-பக்கம்	ஆண்டு	பிற குறிப்பு
10	தாயுமானவர்	ஸர். சி. பி. ராமசாமி ஐயர்	கலைமகள்	பக். 1079	1949 அக்டோபர்	
11	தாயுமான சுவாமிகளும் அத்வைத நிலையும்	கஜாரணியத் திராவிட கவிமணி வே. முத்துஸ்வாமி ஐயர்	அத்வைத சித்தாந்த பொன்விழா மாலை	பக். 133-145	1953	
12	தாயுமான சுவாமிகள்	பண்டித வடிவேல் முதலியார்	ஸ்ரீராமகிருஷ்ண விஜயம்	பக். 65	1958 தை	
13	தாயுமானவர்	திரு சரவணனந்தா	குமரகுரபரன்	பக். 180-183	1958	
13-பி	St Thayumanavar XVIII Century	J. M. Somasundaram Pillai	Two thousand years of Tamil Literature	PP. 360-366	1959	
14	Thayumanavar- Tamil Statesman and Saint	N. Kandaswamy Pillai	The Hindn (Sunday Issue)	PP.	March, 18 1962	

15	தாயுமானவரின் பராபரக் கண்ணிகள் பொழிப்புரையும் ஆங்கில மொழி பெயர்ப்பும்	—	குமரகுருபரன்	பக். 451 471, 548, 568, 639,	1963	
16	தாயுமானவரின் பராபரக் கண்ணிகள் ஆங்கில மொழி பெயர்ப்பு	கே. பழனிசாமி	,,	மலர் 17 இதல் 3	1966	
16-பி	தாயுமானுரின் அன்பு முழக்கம்	ர. வேங்கடரத்தினம்	,,	பக். 227	1971	
17	தாயுமானவர்	ஜெ. மகாதேவன்	குமரகுருபரன்	பக். 737—739	1972	
17-பி	தாயுமானவர் பாடற்பாங்கு	சி. சுப்பிரமணிய பிள்ளை	இளவேனில்	தொகுதி 2	1973	
18	திருமூலரும் தாயுமானவரும்	சொ. சிங்கார வேலன்	ஞானசம்பந்தம்			
19	தாயுமானவர்		பெரியார் வரலாறு			

எண்	கட்டுரை	ஆசிரியர்	பத்திரிகை, நூல்	தொகுதி-பக்கம்	ஆண்டு	பிற குறிப்பு
20	தாயுமான சுவாமிகள் வரலாறும் அவர் மதக் கொள்கையும்	ஸ்ரீமத்-கல் குளம் குப்புசாமி முதலியார் பி. ஏ.	செந்தமிழ்	Vol. III பக். 474 Vol. IV பக்.	1904—1905 1905—1906	
21	தாயுமான சுவாமிகள் அருளிச் செய்த பாடல் உரை		உண்மை விளக்கம் (அ) சித்தாந்த தீபிகை	புத்தகம் க. தமிழ்-இலக்கம் க.	1897—ஜூன், 21 திங்கட்கிழமை	
22	Tayumanavar's Poem	R. Shanmugam Pillai Mudaliar		ஆங்கிலம் புத்தகம் க. Vol. I-No. 2 இலக்கம் க.	,,	
23	தாயுமானவர் பாடல்களின் யாப்பமைதி	அன்னி தாமசு	ஆய்வுக் கோவை	6-வது கருத்தரங்கு பக். 25—30	1974	
24	தாயுமான சுவாமிகள் பாக்களில் சமயக் கருத்துக்கள்	சி. சுப்பிரமணிய பிள்ளை	,,	6-வது கருத்தரங்கு பக். 311—316	1974	

எண்	நூற்கள்	பரிசோதகர் ஆசிரியர்	அச்சிட்டவர் பதிப்பித்தவர்	அச்சகம்	ஆண்டு	விலை	அச்சிடக் கேட்டவர்	பிற குறிப்பு
1	தாயுமான சுவாமிகள் பாடல் திரட்டு	—	—	—	1835	—	—	—
2	தாயுமான சுவாமிகள் அருளிச் செய்த திருப்பாடற் றிரட்டு	திருத்தணிகை கந்தப்பையர் குமாரர் சரவணப் பெருமாளையர்	திருத்தணிகை கந்தப்பையர் குமாரர் சரவணப் பெருமாளையர் ; பொய்க்கைப் பாக்கம் பழனி யப்ப முதலியார் குமாரர் சுப்பராய முதலி யார்	சென்னைப் பட்டணம் ஸ்ரீ தி. சரவணப் பெருமாளையர் குமாரர் கந்தசாமி யையரது கல்வி விளக்க வச்சுக் கூடம்	விகாரி வருஷம் பங்குனி மாதம் 2-ம் பதிப்பு 1840	ரூ. நா	தொண்டை மண்டலத்து வேளாளரில் பூம்பாவை அண்ணுசாமி முதலியார் குமாரர் சிங்கார முதலியார்	
3	தாயுமான சுவாமிகள் அருளிச் செய்த திருப்பாடற் றிரட்டு	யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுக நாவலர்	சிதம்பர சைவப் பிரகாச வித்தியா சாலைத் தரமு பரி பாலகர் விசுவ நாத பிள்ளை	வித்யா நுபாலன யந்திரசாலை	9-ம் பதிப்பு துர்மத் ஸ்ரீ மாசி மாதம் 1861 அல்லது 1921			உரை ஆறுமுக நாவலர்

எண்	நூற்கள்	பரிசோதகர் ஆசிரியர்	அச்சிட்டவர் பதிப்பித்தவர்	அச்சகம்	ஆண்டு	விலை	அச்சிடக் கேட்டவர்	பிறகுறிப்பு
4	தாயுமான சுவாமிகள் அருளிச் செய்த திருப்பாடற் றிரட்டு	பூரிவாக்கம் முத்துசாமி முதலியார்		ஆயலூர் அருணுசல முதலியாரவர் களது சென்னை திருமகள் விலாச அச்சுக்கூடம்	தாது வருஷம் சித்திரை மாதம் 1876 ஏப்ரல்			
5	தாயுமான சுவாமிகள் அருளிச் செய்த திருப்பாடற் றிரட்டு	மயிலம் சுப்பிரமணிய ஸ்வாமிகள்		சூளை முனிசாமி முதலியாரவர் களது மாதவ நிவாச வச்சுக்கூடம்	பிரமாதி வருஷம் புரட்டாசி மீ 1879 செப்டம்பர்			
6	தாயுமான சுவாமிகள் பாடல்		தி. சம்பந்த முதலியார்	சென்னை அமெரிக்கன் அச்சுக்கூடம்	1891			உரை சில வித்வான்கள்
7	,,	வித்வான் கமலநாத முதலி	ஏ. வஜ்ஜிரவேலு பிள்ளை	சென்னை வெ. நா. 1899	1899			
8	தாயுமான சுவாமி பாடல்		சென்னை இட்டா பார்த்தசாரதி நாயுடு	ஸ்ரீ பத்மநாப விலாச அச்சுக்கூடம்	1905	3. 4 0.		உரை சில வித்வான்கள்
9	தாயுமான சுவாமிகள் பாடல்		சென்னை சல்லா சென்ன கேசவலு நாயுடு	ஸ்ரீநிகேதன அச்சுக்கூடம்	1906	ரூ. 1	இரத்தின நாயகர் (வெளியீடு)	அரும்பத வுரை மதுரைத் தமிழ்ச் சங்க வித்வான் வண்ணக் களஞ்சியம் காஞ்சி நாகலிங்க முதலியார்
10	புலவர் புராணம் -43-தாயுமான சுவாமிகள் சருக்கம்	திருப்புகழ் சுவாமிகள் என்னும் தண்ட பாணி சுவாமிக ளென்றும் வழங்கும் வண்ணச் சரபம் ஸ்ரீமத் முருகதாச சுவாமிகள் (ஆசிரியர்)	தி-மு. செந்தி ணுயகம் பிள்ளை	கலாரத்னுகரம் அச்சுக்கூடம்	1908			

எண்	நூற்கள்	பரிசோதகர் ஆசிரியர்	அச்சிட்டவர் பதிப்பித்தவர்	அச்சகம்	ஆண்டு	விலை	அச்சிடக் கேட்டவர்	பிறகுறிப்பு
11	தாயுமான சுவாமிகள் திருப்பாடற் றிரட்டு		ஸ்ரீ குமார வேலாயுத முதலியார்	சென்னை பண்டித மித்திரன்	1909	ரூ. 3. 8.	பெங்களூர் ஸ்ரீமான் இராய பஹதூர் ஆ. மெய்க் கண்ட தேவர் (உதவி)	சித்தாந்த சரபம் அஷ்டாவ தானம் பூவை கலியாண சுந்தர முதலியார் மெய்கண்ட விருத்தியுரை
12	St. Thayumanavar-His life teachings and mission.	R. S. Subramaniam of Colombo (Author)		Maykandan Press High Class Printers Madras N. C.	Second Edition 1912	1 anna (4 anna)		
13	தாயுமான சுவாமிகள் திருவாய் மலர்ந் தருளிய திருப் பாடற்றிரட்டு	யாழ்ப்பாணம் மேலைப் புலோலி நா. கதிரைவேற் பிள்ளை		சென்னை குயப்பேட்டை வித்யாரத் நாகர அச்சுக்கூடம்	1913			

எண்	நூற்கள்	பரிசோதகர் ஆசிரியர்	அச்சிட்டவர் பதிப்பித்தவர்	அச்சகம்	ஆண்டு	விலை	அச்சிடக் கேட்டவர்	பிறகுறிப்பு
14	ஸ்ரீமத் தாயுமான சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய திருப் பாடல்கள்		Longmans, Green & Co 167, Mount Road, Madras.		1915			சுவாமிகள் வரலாறு, பரசிவ வணக்க விரிவுரை அரும்பத வுரை முதலியவை களுடன் கூடிய சுத்த பதிப்பு
15	தாயுமான சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய திருப்பாடற் றிரட்டு	யாழ்ப்பாணம் மேலைப் புலோலி நா. கதிரைவேற் பிள்ளை		சென்னை குயப்பேட்டை வித்யா ரத்நாகர அச்சுக்கூடம்	1922 (மறு பதிப்பு)	ரூ. 1.9.		
16	தாயுமான சுவாமிகள் பாடல்		முருகேச முதலியார்	சென்னை கணேச அச்சுக்கூடம்	1922	1.4.0.		

ண்	நூற்கள்	பரிசோதகர் ஆசிரியர்	அச்சிட்டவர் பதிப்பித்தவர்	அச்சகம்	ஆண்டு	விலை	அச்சிடக் கேட்டவர்	பிற குறிப்பு
7	Tayumanavar	E N. Tanikachala Mudaliar, Vakil, High Court, MADRAS	C. Coomarasamy Naidu & Sons.		1923	6 As.		ஏடுகள் சுவடிகள் 4
8	தாயுமான சுவாமி பாடல்		சென்னை இட்டா சக்ரபாணி நாயுடு அன் பிரதர்ஸ்		1923	3.4.0.		உரை சில வித்துவான்கள்
19	Palams of a Saiva Saint • (Selections from the writings of Thayumanava-swamy)	T. Issaac Tambyah, London (Translator)	Luzacoco, Penang house Jaffna,		1923 September			Translated into English with introduction and notes.

ண்	நூற்கள்	பரிசோதகர் ஆசிரியர்	அச்சிட்டவர் பதிப்பித்தவர்	அச்சகம்	ஆண்டு	விலை	அச்சிடக் கேட்டவர்	பிற குறிப்பு
20	தாயுமான சுவாமிகள் திருப்பாடற்றிரட்டு (மூலமும் விருத்தியுரையும்)	அ. மஹாதேவ யோகி	ந. இரத்தின நாயகர் சன்ஸ்	திருமகள் விலாச அச்சியந்திர சாலை, சென்னை	1927	ரூ. 4		சித்தாந்த சரபம் அஷ்டாவதானம் பூவை கலியாண சுந்தர முதலியார் இயற்றிய மெய்கண்ட விருத்தியுரை
20 அ	ஸ்ரீ தாயுமானவர் பக்தி ஸ்ரீ பகவதர்ப்பணம்	ஆர். எஸ். சுபலக்ஷ்மி	உ. வே. சா.		மார்ச் 1929			
21	தாயுமான சுவாமிகள் அருளிச் செய்த திருப் பாடல்கள்		பாலன் பதிப்புக் கழகம், இராயப் பேட்டை, சென்னை.		1930			
22	One hundred poems of Tayumanavar.	N. R. Subramania Pillai.		Desabandu Press, Coimbatore, Madras, South India.	1930			

எண்	நூற்கள்	பரிசோதகர் ஆசிரியர்	அச்சிட்டவர் பதிப்பித்தவர்	அச்சகம்	ஆண்டு	விலை	அச்சிடக் கேட்டவர்	பிறகுறிப்பு
23	தாயுமானவர் வரலாறும் நூலாராய்ச்சியும்	கா. சுப்பிரமணிய பிள்ளை எம். ஏ. எம். எல்., அட்வகேட் திருநெல்வேலி.	மணிவாசக மன்றம் திருநெல்வேலி		1930	ரூ. 1. 4. 0.		
24	தாயுமானவ சுவாமிகள் சரித்திரமும் (சுவாமிகள் மீது அன்பர்கள் அருளிய) தோத்திரப் பாக்களும்	சிதம்பரம் சதாசிவப் பிள்ளை.			1933			
25	Thayamanavar Hymns (German Translation)	Arna Lehman, Erang-luth missionar.	Verlag C. Bertelsman. Gittersloh.		1935			
26	Studies and Translation (Philosophical and Religions)- Selections from Tayamanavar Page. 181—257	Sir. Ponnambalam Arunachalam K. T. M.A.	The Colombo Apothecaries Co. Ltd.		1937			Forwarded by Sri. C. P. Ramaswamy Aiyar, KCIE.
27	தாயுமான சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய திருப்பாடல்கள் மூலமும் உரையும்.		பி. நா. சிதம்பர முதலியார் பிரதர்ஸ், சென்னை.		1937	ரூ. 5		ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்களின் மாணாக்கரின் மாணாக்கரும் மதுரைத் தமிழ்ச் சங்கத்துப் புலவரும் அத்துவத சித்தாந்த மகோத் தாரணரும் ஆகிய (யாழ்ப்

எண்	நூற்கள்	பரிசோதகர் ஆசிரியர்	அச்சிட்டவர் பதிப்பித்தவர்	அச்சகம்	ஆண்டு	விலை	அச்சிடக் கேட்டவர்	பிற குறிப்பு
								பாணத்து மேலைப் புலோலி) மகா வித்துவான் நா. கதிரை வேற் பிள்ளை அவர்கள் செய்த பரசிவ வணக்க மிக விருத்தி யுரை யும் தெளி வான பொழிப்புரை யும்(சாத்திர) விசேடக் குறிப்புரை யும்.

28	தாயுமானவர் வரலாறும் நூலாராய்ச்சி யும்.	கா. சுப்பிர மணிய பிள்ளை எம் ஏ., எம். எல்.	திருவள்ளுவர் கழகம் 15—16, பெரிய கடை வீதி, மயிலாப் பூர், சென்னை.		1940	ரூ. 1.40		
29	Maharshi Thayamanavar (His life and teachings)	Yogi Suddha-nanda Bharatiyar.	Anbu nilayam Ramachandra-puram, Trichy District.		1946			
30	ஸ்ரீமத் தாயு மான சுவாமிகள் திருப்பாடற் றிரட்டு.		பி இரத்தின நாயகர் ஸன்ஸ்	திருமகள் விலாச அச்சியந்திர சாலை, சென்னை.	1949	ரூ. 2. 0. 0.		நா. கதிரை வேற் பிள்ளை யால் எழுதப் பட்ட சரித் திரச்சுருக்கம்.
31	தாயுமான சுவாமிகள் பாடல்.		ஸ்ரீ காசி மடம் திருப் பனந்தாள்		1952			குறிப்புரை
32	தாயுமானவர் இயற்றிய பரசிவ வணக்கம்	சுவாமி சித்பவானந்தர்	தபோவனப் பிரசுராலயம், திருப்பராயித் துறை, திருச்சி.		1954	ரூ. 0. 8. 0.		

எண்	நூற்கள்	பரிசோதகர் ஆசிரியர்	அச்சிட்டவர் பதிப்பித்தவர்	அச்சகம்	ஆண்டு	விலை	அச்சிடக் கேட்டவர்	பிறகுறிப்பு
33	தாயுமானவர் இயற்றிய, சின்மயானந்த குரு				1958	ரூ. 1. 50		
34	தாயுமானவர் இயற்றிய ஆனந்தமான பரம்'				1962	ரூ. 1. 50		
35	தாயுமானவர் இயற்றிய சுகவாரி				1963	ரூ. 1. 50.		
35பி	பட்டினத்தார் தாயுமானவர் பாடற் பெருமை	சாமி சிதம்பரனுர்	இலக்கிய நிலையம், சென்னை—24.		1963	ரூ. 2. 50		

எண்	நூற்கள்	பரிசோதகர் ஆசிரியர்	அச்சிட்டவர் பதிப்பித்தவர்	அச்சகம்	ஆண்டு	விலை	அச்சிடக் கேட்டவர்	பிறகுறிப்பு
36	Voice of Tayumanavar. The life of the Saint and his song offering.	Kavi Yogi Maharshi Shuddhananda Bharathi			Jan. 1963			
37	தாயுமானவர் இயற்றிய மௌனகுரு வணக்கம்				1964	ரூ. 1. 50		
38	தாயுமானவர் இயற்றிய எங்கும் நிறைகின்ற பொருள்				1964	ரூ. 1. 50		
39	தாயுமான சுவாமிகள் பாடல்		தருமையாதீனம் வெளியீடு எண். 564		1965			
40	தாயுமானவ வடிகள் திருப் பாடல்கள்	ப. இராமநாத பிள்ளை	கழக வெளியீடு		1966	ரூ. 12. 50		சிந்தாந்தச் சிறப்புரை

எண்	நூற்கள்	பரிசோதகர் ஆசிரியர்	அச்சிட்டவர் பதிப்பித்தவர்	அச்சகம்	ஆண்டு	விலை	அச்சிடக் கேட்டவர்	பிறகுறிப்பு
41	தாயுமானவ அடிகள் திருப் பாடல்கள்		கழக, வெளியீடு		1974	ரூ. 4.0.0.		
42	தாயுமான அடிகள் திருப்பாடல்கள்	பகனேரி வெ. பெரி. பழ. மு. காசி விசுவநாத செட்டியார்	சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.		முதற் பதிப்பு வெகுதானிய மார்கழி ; இரண்டம் பதிப்பு-தாரண புரட்டாசி.			
43	தாயுமான சுவாமிகள் திருவாய் மலர்ந் தருளிய திருப்பாடற் றிரட்டு மூலமும் பொழிப் புரையும்		இட்டா பார்த்தசாரதி நாயுடு.	ஸ்ரீ பத்மநாப விலாச அச்சுக்கூடம் நெ. 1, திருப்பள்ளீ சந்து பெத்து நாயக்கன் பேட்டை. சென்னப் பட்டணம்	சர்வாரி வருஷம், ஆனி மாதம்			தொண்டை மண்டலம் கல்விச்சாலை பிரதம தமிழ்ப் பண்டிதர் ம. ா. ா ஸ்ரீ. அப்பன் செட்டியார் அவர்கள்

எண்	நூற்கள்	பரிசோதகர் ஆசிரியர்	அச்சிட்டவர் பதிப்பித்தவர்	அச்சகம்	ஆண்டு	விலை	அச்சிடக் கேட்டவர்	பிறகுறிப்பு
								மாணுக்கர் ம. ா. ா. ஸ்ரீ மாங்காடு வடிவேலு முதலியார், பொழிப்புரை நூதன வுரை.
44	தாயுமான சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய திருப்பாடற் றிரட்டு மூலமும் நூதனவசையும்							
45	கடவுட் காட்சியும் தாயுமானுரும்	திரு. வி. கலியாண சுந்தர முதலியார்		சாது அச்சுக் கூடம்	1949	8 அணு		

ண்	நூற்கள்	பரிசோதகர் ஆசிரியர்	அச்சிட்டவர் பதிப்பித்தவர்	அச்சகம்	ஆண்டு	விலை	அச்சிடக் கேட்டவர்	பிறகுறிப்பு
6	தாயுமானவ சுவாமிகள் வரலாறு		திருப்பனந்தாள் வெளியீடு. சி. இராம லிங்கம்					
7	தாயுமானச் சுடர்	சுவாமி சுத்தானந்த பாரதியார்	இளந்தமிழ்த் தளிர்-4 (கையடக்கப் புத்தகம்)	கோலாலம்பூர், மலாயா		10 காசு		

திருத்தம்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
1	17	அமைந்துள்ளது	அமைத்துள்ளது
9	7	தென்று லன்றே	தென்றவன்றே
10	26	னேழையன்	னேழையேன்
11	31	கோளறவோர்	கோணறவோர்
13	1	தண்ணருளை கூறு	தண்ணருளைக்கூறு
13	18	உய்யவர்	உய்வர்
13	30	ஐயமிகுந்து	வயமிகுந்து
16	15	வீட்டுதமிழ்	லீட்டுதமிழ்
17	24	மனைவயர்	மலைவளர்
17	27	தூனுப்பு	தூதனுப்பு
21	7	(விடுபட்டது) மூன்றும்	மூன்றுமாகவும்
21	20	மா—விளம்—விளம்—மா	மா-விளம்-விளம்-விளம்-மா
21	25	விடுபட்டது (51)	நாற்சீரடியிரண்டாய் நடப்பனவும்
25	7	புகழாய்	புகலாய்
28	15	பிறவினை	பிறவிவினை
30	29	சதமென்ற	சதமென்று
40	26	பரமென்றே	பரமென்ரோ
40	28	கட்டென்னும்	கட்டென்றும்
41	1	தண்கருணைசிற்குகனர்	தன்கருணைச்சிற்சுகனர்
47	11	மாளினென்னே	மாளினென்னை
50	9	பொருட்களை தின்று	பொருட்களைத்தின்று
50	21	சரக்கரை	சரக்கறை
51	4	யின்னியற்கை	யிவ்வியற்கை
54	17	பரா : 265	பரா. 266
55	21	வெள்ளமாய்	வெள்ளமாம்
56	27	பீறவியை கடலாக	பிறவியைக்கடலாக
62	10	பொய்மையாயசொற்கண்	பொய்மையாயச்சொற்கண்
62	30	பரா : 302	பரா. 195
62	30	விடுபட்டது	கன்றைஉதைகாலி (பரா. 302)
65	1	நிற்கவிலையே	நிற்கவிலையோ
65	23	விடுபட்டது	அது நல்வினையாயினும் சரி, தீவினையாயினும் சரி

[P. T. O.]

68	1	விடுபட்டது	நற்பண்புகளில்லை
71	6	அல்லானே	இல்லானே
71	29	விடுபட்டது	நிட்களம்-வடிவின்மை, சகளம்-வடிவம்
72	6	அவலக்	யுமகலக்
72	17, 18	சொன்னல்	சொன்னன்
74	29	என்பன தன்மைகளேயே	என்பன உயிரின் தன்மைகளேயே
79	27	எடுத்தியம்படு	எடுத்தியம்பப்படு
79	32	விடுபட்டது	பொருளைக்கண்டு (ஆகார 28) எனவதன் பெருமையும்
81	13	ஆசை 11	ஆசை 18
83	3	விடுபட்டது	முகிலாகவும்
83	9	விடுபட்டது	(பாயப் : 52). படருறு சோதிக் கருணையங்கடலே
84	12	பரா. 0	பரா. 9
88	12	விடுபட்டது	இறையை
96	15	அழுக்கு	அழுக்கும்
96	28	நிருவப்	நிறுவப்
100	11	இயல்	இயல்பு
102	28	மனதின்	மனதில்
103	16	நினைவாக	நினைவாகி
104	6	மனம்	மனக்
106	5	பரா. 33	பரா. 35
107	16	இருக்கின்ற	இறக்கின்ற
107	27	விடுபட்டது	நெஞ்சம் மறுமை இன்பம் பெற வேண்டுமானல்
109	1	கற்ருலுந்	கற்ருலுஞ்
109	29	யுளங்கருகன்	யுளங்கருகல்
110	17	தல்லான்	தல்லால்
112	12	ஆளுநெறி	ஆகுநெறி